# விழிகளை நனைத்திடும் கனவுகள்

காசி



நிவேதா உதயராஜன்

# விழிகளை நனைத்திடும் கனவுகள்

ஆசிரியர்
காசி.வி.நாகலிங்கம்

அட்டைப்படம்:
திரு.சதீஸ்

கணனிப்பதிப்பு:
மஞ்சுளா விஸ்வநாதன்

அச்சுப்பதிப்பு:
ராஜி பதிப்பகம்
*Romberg str.10*
*59439 Holzwickede.*
*Tel.02301/14581 Fax.02301/14686*

நூல் கிடைக்குமிடங்கள்
**V.Nagalingam**
Lichten Eichen - **23**
**34431** Marsberg.
Tel: 0175-7446016

ராஜி பதிப்பகம்
*Romberg str.10*
*59439 Holzwickede.*

# என்னுரை

வெளிநாட்டில் வாழும் நாம் பல்வேறு எண்ணச்சுமைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எத்தனையோ கனவுகள் எம் நெஞ்சத்திலிருந்து விழிகளை நனைத்துக் கொண்டே இருக்கின்றன. நமது தாய்நாட்டில் தமிழ் விடுதலை பெற வேண்டும், தமிழ்மண் சுதந்திரபூமியாக விளங்கவேண்டும், அந்நிய நாட்டில்வாழும் நாம், எமது உறவுகளைப் பார்க்கவேண்டும்... இப்படி எத்தனையோ கனவுகள் எம் நெஞ்சங்களிலே உறங்கிக் கிடக்கின்றன.

இங்கு ஏதோ வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று வாழ்ந்தாலும், எமது கலை, பண்பாடுகள், ஒழுக்கங்களைப் பேணவேண்டும் என்று மனம் துடிக்கிறது. எங்கள் குழந்தைகள் நம் பாரம்பரியங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நினைக்கிறோம். எங்கள் சொற்கேட்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். வளர்ந்து எங்கள் விருப்பப்படி வாழ்க்கையை அமைக்க வேண்டுமென்றுகூடக் கற்பனை செய்கின்றோம். வயதான பிறகு எங்களைக் கவனிப்பார்களா....? என்று கேள்விகளையும் எழுப்புகின்றோம். இப்படி இன்னும் எத்தனையோ எண்ணங்கள் எம் நெஞ்சங்களில் ஏக்கத்துடன் விரிந்து, உணர்வலைகளாகப் படர்ந்து கொண்டிருக்கின்றன என்ற கருத்துக்களையும், வெளிநாடுகளில் பரந்து வாழும் தமிழ்க்குடும்பங்களில் கணவன், மனைவியிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளினால் வீட்டில் நிலவும் அமைதியின்மை, பிள்ளைகளின் உள்ளக் குமுறல்கள், மற்றும்பல வாழ்க்கையின் தில்லுமுல்லுகள், மனச்சுமைகளைக் கருவாகக்கொண்டும் இந்த 'விழிகளை நனைத்திடும் கனவுகள்' என்ற நாவலை எழுதியுள்ளேன். இதில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் கற்பனையே.

இந்த நாவலுக்குக் கண்கவர் வண்ணத்தில் நெஞ்சைத் தொடும் வகையில் அட்டைப்படம் வரைந்த தந்த திரு.சதீஸ் அவர்களுக்கும் இப்புத்தகத்தை அழகுற மிகவும் சிறப்பாக அச்சில் வடித்துத் தந்த ராஜி பதிப்பகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் சென்ற ஆண்டு எழுதி வெளியிட்ட 'விடியலில் மலரும் பூக்கள்' என்ற நாவலை வாசித்து பல வாசகர்கள் தொலைபேசி மூலமும் நேரிலும் தங்கள் கருத்தைத் தெரிவித்து, பாராட்டிப் புகழ்ந்து என்னை ஊக்குவித்திருந்தார்கள். இந்தப் பாரட்டுகள் யாவும் என்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கும் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் என்னோடு கூடவிருந்து கை கொடுத்து உதவும் நட்புள்ளங்களுக்கும் கடவுளுக்கும் சேரவேண்டியன என்று சொல்லும் அதேவேளை, வாசகர்கள் அனைவருக்கும் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

'விழிகளை நனைத்திடும் கனவுகள்' ஒரு பொழுதுபோக்கு நாவலான போதும் இதில் தமிழர்களின் பண்பாடுகள், கலாச்சாரங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும், தமிழர் தலை நிமிர்ந்து வாழவேண்டும்... அகதிகளாக, பிறஇனங்களின் அதிகாரத்தின் கீழ் வாழும் அடிமைஇருள் நீங்கி, சுதந்திரசூரியன் உதயமாக வேண்டும், சமாதானம் ஏற்பட்டு மக்களெல்லாம் மன மகிழ்வோடு ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணக்கருத்து களை ஆங்காங்கே பதித்து, நன்மைகள் நிகழவேண்டுமென்ற பேராவலுடன் ஏராளமான மணிநேரங்களை இறைத்து இக்கதையை வளர்த்து, தாய்த்தமிழை வணங்கி, தமிழ்மண்ணைத் தொட்டுக் கண்களில் ஒற்றி, இரண்டாயிரத்தோராம் ஆண்டு கோக்சவர்லான்டில் நிகழும் இவ்வாணிவிழாவில் உங்கள் முன் வைக்கிறேன்.

இந்நூலை வாங்கித் திறந்து வாசிக்க முனையும் வாசகர்களே உங்களுக்கு என் வணக்கம்.

அன்புடன்
காசி.வி.நாகலிங்கம்
20.10.2001

# மதிப்புரை

'விழிகளை நனைத்திடும் கனவுகள்' என்னும் பெயர் கொண்ட இந்தநாவலை நம்மக்கள் மத்தியில் வலம் வரச் செய்த ஆசிரியரை நான் பராட்டுகிறேன். மக்கள் மனதில் பல எழுத்தாளர்களின் நாவல்கள் இருந்தாலும் இந்நாவல் எல்லோரு டைய மனதைத் தொடும் வகையில் எளிமையான முறையில் எழுதப்பட்டுள்ளதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். நமது நாளாந்த வாழ்வினை இந்நாவல் எடுத்துக்காட்டியுள்ளது.

இந்நாவலில் காணப்படும் ஒவ்வோருடைய குணாதிசயங்களைப் பார்க்கும் போது நாம் பலவிடயங்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. அந்தவகையில் வடிவேல் போன்ற ஆண்களும் இருக்கிறார்கள், மனோகரி போன்ற பெண்களும் உள்ளார்கள்.

'குடும்பம்' என்பது கணவன், மனைவி இருவருமே வாழும் முறையில் அடங்கியுள்ளது. இருவருக்கும் புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு என்பன முக்கியமாக இருக்கவேண்டும். அப்படி நடந்தால் குடும்பத்தில் நல்லுறவு ஏற்பட்டு சிறப்பாக வாழ முடியுமென்பதையும் இங்கே குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் வாழ்வில் இயந்திரவாழ்க்கை வாழும் மக்கள் தமது பிள்ளைகளை நல்லபடி வளர்த்தெடுப்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். 'குழந்தைகள் இம்மண்ணின் மைந்தர்கள்' அவர்கள் கைகளில்தான் இனிவரும் உலகமுண்டு. ஆகவே அவர்களை நற்பண்போடு வளர்க்கும் பொறுப்பு பெற்றோருடையது என்பதையும் கூறியுள்ள இந்நாவலைப் பொழுதுபோக்காக வாசிக்காமல், ஆத்மார்த்தமாக வாசித்தால் நிச்சயம் எமக்குப் பல விடயங்கள் புரியும். இப்படிப் புரிய வைத்த ஆசிரியரை மீண்டும் பாராட்டி, இவருடைய நாவல்கள் நம் மக்கள் மத்தியிலும் இன்னும் பாராட்டுப் பெறவேண்டியும் இது போன்ற நாவல்கள் மேலும் வளம் பெறவும் வாழ்த்துகிறேன்.

இலண்டனிலிருந்து
சி.இராஜேஸ்வரி

# வாசகர் பார்வையில்.....

காசி அவர்களின் 'விழிகளை நனைத்திடும் கனவுகள்' என்ற நாவல், புலம்பெயர்வாழ் தமிழ்மக்களின் இன்றைய நிலைமைகளைச் சித்திரிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இக் கதையில் வரும் வடிவேலு, மனோகரியின் குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள், பிடிவாதங்கள், விதண்டாவாதங்கள் யாவும் புலம் பெயர்ந்து வாழும் பெரும்பாலான மக்களிடையேயுள்ள இயற்கையான குணாதிசயங்களை வெளிப்படுத்தியுள்ளன.

தாமோதரன், நீலா குடும்பத்தில் ஏற்படும் கதையும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ்மக்களின் பல குடும்பங்களிடையே பெற்றோர், பிள்ளைகளுக்குள் அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சனைகளையும் மனக்குமுறல்களையும் இயந்திரமயமான வாழ்க்கை முறைகளையும் காட்டுகின்றது.

அத்துடன் பிள்ளைகள் பெற்றோருடன் மனம் திறந்து பேசும் விதங்கள், புரிந்துணர்வின்மை, அதிகளவான சுதந்திரம் போன்றனவும் 'டா' என்ற சொல்லைக்கூட பாவித்து இன்றைய இளம் சமுதாயத்தினர் உரையாடும் நிகழ்வும் ஒரு நாகரீகத்தை வெளிப்படுத்தும் இயற்கையான உரையாடலாக அமைந்துள்ளது.

முதியோர் வெளிநாட்டுக்கு வந்து கஸ்டப்படுவதும் வந்தவர்கள் நாட்டுக்குத் திரும்பிப் போக விரும்பாமலும் அதேவேளை நிம்மதி அற்ற வாழ்க்கை வாழ்வதையும் இரு முதியோர் சந்தித்தால் எப்படித் தங்கள் உள்ளக்கிடக்கைகளைப் பரிமாறுவார்கள் என்பதையும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இடையிடையே தாயகநினைவும், விமலாவின் கதையும் மிகவும் நன்றாகவும் நிஜங்கள் யாவும் மனக்கண் முன் வந்து உள்ளத்தை உருக வைத்தன.
யசோ, கோகுலன், ஜானகி, பரதன் போன்ற பாத்திரங்களும் சுவாரஸ்யமாக இருந்தன.
இக்கதையை முதியோர், நடுத்தரமானவர், இளையதலை முறையினர் யாவரும் வாசிக்கக்கூடிய உரைநடையிலும் எல்லோர் மனதையும் ஈர்க்கக்கூடியதாயும் நல்லதொரு குடும்பச்சித்திரமாயும் படைத்த நாவலாசிரியருக்கு நன்றி.

அன்புடன்
பத்மஜோதி சத்தியமூர்த்தி

# ஆசியுரை

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகில் கலை, கலாச்சார அழிவுகளுக்கிடையிலும் புலம்பெயர்வாழ் தமிழ்மக்களையும் எதிர் கால சந்ததியையும் மனதிற்கொண்டு நாட்டுப்பற்றும் இனப்பற்றும் மொழிப்பற்றுமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதையே தனது குறிக்கோளாகக் கொண்டு 'வண்ணத்துப்பூச்சி' ஆசிரியர் திரு.காசி அவர்கள் தனது படைப்புகளை உருவாக்குகிறார்.

நாம் வாழும் உலகத்தைச் சிறந்ததொரு கலைக்கோயிலாகவோ, பாலைவனமாகவோ ஆக்குவதில் பெரும்பங்கு எழுத்தாளர்களின் கைகளிலேதான் இருக்கிறது. அந்த வகையில் நமது ஆசிரியரின் பங்கு அளப்பரியது.

வாழ்க்கையில் போராட்டங்களைச் சந்திக்கும் மனிதசமுதாயம், இன்று போராட்டங்களையே வாழ்க்கையாகக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலிலும் புலம்பெயர்மக்களிடையே பலவருட காலமாகத் தனது எழுத்தாக்கங்கள் மூலம் 'வண்ணத்துப்பூச்சி' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் சிறுகதை, நாவல் ஆசிரியராகவும் தனக்கென்ற பாணியில் முத்திரை பதித்துக் கொண்டவர் திரு.காசி என்பதை நாம் பெருமையுடன் கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

எமது கதாசிரியர் பெரும்பாலும் தாயகசூழலையும் புலம்பெயர் சூழலையும் அங்கும் இங்கும் நடக்கும் அவலங்களையும் அடிப்படையாகக் கொண்டே தனது படைப்புகளை உருவாக்கி வருவதைக் கவனிக்கக்கூடியதாகவுள்ளது.

எமது இயந்திரவாழ்க்கைக்கு மத்தியிலும் சிலமணி நேரத்துக்கு ஆவது மனதை அமைதியாக வைத்திருக்கவும் நாம் பிறந்து வளர்ந்த தாயகச்சூழலை அடைந்து நம் உறவுகளுடன் அளவளாவுவதற்கும் தாயகத்துக்கே அழைத்துச் சென்றிடுவார் கதாசிரியர். அவருடைய ஒவ்வொரு சிறுகதைகளையோ அல்லது நாவல்களையோ நாம் வாசிக்கத் தொடங்குமுன் அதற்கான நேரத்தை ஒதுக்கிவிட வேண்டும். இடையில் வாசிப்பதை நிறுத்தி விட்டு எழுந்து சென்று வேறுவேலைகளைச் செய்ய முடியாத அளவுக்கு அவரது கதாபாத்திரங்களுடன் ஒன்றாகிவிடுவோம். அதிலும் தாயகத்துக்குச் சென்றுவிட்டால் திரும்பி வரவே

தொடர்ச்சி மறுபக்கம்

# வாழ்த்துரை

ஆண்டவனின் அரிய படைப்புகளில் ஒரு சில நல்ல வித்துகள் தான் வளர்ந்து, மரமாகி எமக்கு நற்கனிகளையும் நற்பலன் களையும் தருவதுண்டு. அவ்வண்ணம் கிடைக்கப்பெற்ற ஒரு நல்வித்துதான் நண்பர் காசி அவர்கள்.

இவர் நம் தாய்மண்ணாகிய ஈழத்தில் ஒரு நற்பண்புள்ள பெற்றோருக்கு மகனாகப் பிறந்து, நல்லெண்ணங்களும் நற்கருத்துக்களும் ஊட்டப்பட்டு சீராக வளர்க்கப்பட்டதால், இன்று இந்த அந்நியதேசத்தில் அவரால் நம் தமிழ்சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நற்கருத்துக்கள் அடங்கிய பல சுவையான ஆக்கங்களைத் தரக்கூடியதாகவுள்ளது.

புலம்பெயர்மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழ்மகனையும் அவனது இன, மொழி, கலை கலாச்சாரங்களை மறக்காமல் வாழவைக்கவேண்டுமென்ற அவரது நல்ல நோக்கமும் எம் வருங்காலசந்ததியினரும் எமது கலை, கலாச்சாரங்களை அறிந்து கொள்ளவேண்டுமென்ற நல்லெண்ணமும் அவரது அரிய நூல்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

மேன்மக்கள் மேன்மக்கள் தான் என்பதற்கமைய, இவர் எவ்வளவு கஸ்டங்கள், சோதனைகள் வந்தபோதும் மனம் தளராமல், தனது இலட்சியத்தைக் கைவிடாமல், தான் ஒரு மேன்மகன் என்பதை நிருபித்துள்ளார். இவர் இன்னும் பல ஆக்கங்களை நம் மக்களுக்குத் தந்திடவும் இவரது நல்லெண்ணமும் இலட்சியமும் இனிது நிறைவேறவும் இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
சர்வானந்தன் மகேசன்
*(Banker)*

முடியாது. பெரியவர்கள், சிறுவர்கள் என எல்லோரும் வாசித்து விளங்கக்கூடிய எளிமையான வசனநடையிலேயே எழுதப்பட்டு இருக்கும்.

இவரது படைப்புகளில் பெரும்பாலானவை புலம்பெயர்மண்ணாக இருந்தாலும்சரி, தாயகமண்ணாக இருந்தாலும்சரி சோகநிகழ்வு களை அடிப்படையாகக்கொண்டே எழுதப்பட்டுள்ளன. நாம் எல்லோரும் உதட்டளவில் சிரித்துக்கொண்டாலும் ஒவ்வொருவரின் அடிமனத்திலும் சோகம் உட்கொண்டிருப்பதால் தான் இக்கருத்து புகுத்தப்படுகிறது என்பது எனது கருத்தாகும்.

திரு.காசி அவர்களை ஒரு சிறந்த எழுத்தாளராகவும் தமிழாலய ஆசிரியராகவும் ஒரு நல்ல நண்பராகவும் எம்மில் பலருக்குத் தெரியும். அவர் தமது எழுத்துக்களின் மூலம் இளம் சந்ததிக்கு நாட்டுப்பற்றையும் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் ஊட்டக் கூடிய விதத்தில் தொடர்ந்தும் தனது படைப்புகளை உருவாக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

இப்படிப்பட்ட ஒரு எழுத்தாளர் வாழும் காலத்தில் நானும் வாழ்கிறேன் என்ற பெருமையுடன், இன்னும் பல்லாண்டுகள் தொடர்ந்தும் திரு.காசி அவர்களின் எழுத்துப்பணி தொடர வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டி எனது ஆசிகளைத் தெரிவிக்கிறேன்.

அன்புடன்
சுமித்திரா சிறீதரன்

அது ஒரு மார்கழிமாதம்....
வெளியே பனிக்குளிர், நத்தார்ப்பண்டிகைக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. பனி கொட்ட வேண்டும், எங்கும் வெள்ளைவெளேரென்று இருக்கவேண்டுமென ஜேர்மனியர் பலரும் ஆவலுடன் இருக்கும் வேளையது.

வடிவேல் வேலையால் வந்து, குளித்து, சாரத்தைக் கட்டிக் கொண்டு, மேலே சேட்டைப்போட்டு தெறிகள் திறந்த நிலையில் இருக்க ஹோலுக்குள் வந்து சோபாவில் அமர்ந்தான். மனைவி மனோகரி ரீவியில் "மில்லியோனன் ஷோ" பார்த்துக் கொண்டு இருந்தாள். மிகவும் ஆர்வமாக அவள் பார்த்துக் கொண்டிருக்க, அவளுக்கு இடைஞ்சலின்றி தானே சாப்பாட்டைச் சூடாக்கிப் போட்டுக்கொண்டு வந்து அவளருகே இருந்து சாப்பிட்டபடி தானும் அந்தச் சுவையான காட்சியை இரசித்தான்.

"பிள்ளையள் நேரத்துக்குப் படுத்திட்டாங்களே...?"
"மாட்டன் மாட்டன் எண்டு அடம் பிடிச்சுக்கொண்டு இருந்திட்டு ஒருமாதிரி இப்ப நித்திரையா விட்டினம்."

"கடிதம் வந்ததே...?"

"ஆற்றை கடிதம்...?"

"வீட்டிலை இருந்துதான்"

"ஆற்றை வீட்டிலையிருந்து...."

"ஒண்டுமில்லை" என்ற வடிவேலு சாப்பிட்டு எழுந்து கோப்பை யைக் கழுவி வைத்து விட்டு, கடிதங்கள் வைக்கும் லாச்சியைத் திறந்து, அன்று வந்து உடைக்காமல் இருந்த ஊர்க்கடிதத்தை எடுத்துத் திறந்தபடி சோபாவில் வந்து இருந்து வாசித்தான்.
அவனைக் கடைக்கண்ணால் பார்த்து விட்டு, எழுந்து படுக்கை அறைக்குள் போனாள் மனோகரி.

"எங்கை போறீர்...?"

"படுக்கப் போறன்."

"கொஞ்சம் இருமன்! நாளைக்கு விடிய ஏழு மணிக்குப் போனால் வீட்டை வர இரவு பத்து மணியாகும்."

"அதுக்கு நான் என்ன செய்ய...?"

"நீர் ஒண்டும் செய்ய வேண்டாம், பார்த்த புறோக்கிறாமைப் பார்த்து முடியுமன்."

அவன் சொன்னது அவள் காதில் ஏறியதாகத் தெரியவில்லை. வேலையால் களைத்துப்போய் வந்தவன் மனச்சோர்வு போக ஏதும் கதைக்கலாம் என்றால் மனைவி முகத்தை ஏழு கிலோ மீற்றருக்கு நீட்டிக்கொண்டிருந்துவிட்டுப் படுக்கப் போய் விட்டாள். சிறிது நேரம் யோசித்துக்கொண்டிருந்தவன் எழுந்து போய் அலுமாரியின் ஓர் மூலையில் நீண்ட நாளாகத் தூங்கிக் கிடந்த சாராயப் போத்தலை எடுத்துக்கொண்டு மேசை மேல் வைத்து விட்டு, வெளியே போய் சற்றுத்தூரம் தள்ளியிருந்த சிகரெட் அடிக்கும் மெசினில் சிகரெட் அடிக்கலாம் என்று நினைத்தவன், காற்சட்டை போட வேணும், அதைப் படுக்கையறைக்குள் இருந்து எடுக்க வேண்டும், என்ன செய்ய என்று யோசித்தான்.

ஒருநாள் வேலை, பிறகு நான்கு நாட்கள் லீவு என்ற சந்தோசம் மனைவி மனோகரியின் முகவாட்டத்தால் சோகக்கிடங்கில் புதைந்துவிட, நீண்டநாட்களாக இனிமேல் தொடுவதில்லை என்று விட்ட பழக்கங்களைத் தொட்டால்தான் மனம் ஆறும் என்று அவனை நினைக்க வைத்தது.

மெதுவாகப் படுக்கையறைக்கதவைத் திறந்து உள்ளே சென்று அலுமாரிக்குள் தன் ஜீன்ஸ் காற்சட்டையை இருட்டில் தேட,
"என்ன...?" என்று வெறுப்பு ஒலிக்கக் கேட்டாள் மனோகரி.

"ஒண்டுமில்லை" என்று ஜீன்ஸை எடுத்துக்கொண்டு வந்தவன், அதை அணிந்து, சில்லறைக்காசும் எடுத்து, விறாந்தையிலிருந்த சப்பாத்தைப் போட்டு, ஜக்கற்றையும் கொழுவியபடி கதவைத் திறந்து வெளியே நடந்தான். நேரம் இரவு பதினொன்று இருக்கும்.

ஊர் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. கதவு அடித்துச் சாத்தும் சத்தம் கேட்டதும், படுத்திருந்த மனோகரிக்கு நெஞ்சம் 'படக்' என்றது. எழுந்து வெளியே வந்து ஹோல் கதவைத் திறந்து பார்த்தாள். சாராயப்போத்தல் மேசையிலிருந்து சிரித்துக்

கொண்டிருந்தது. அவள் மிரண்டு போனாள். சிகரெட் அடிக்கத் தான் வெளியே போயிருக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது. சாராயப்போத்தலை எடுத்து ஒழித்து வைத்துவிட்டுப் படுக்க நினைத்தாள். பிறகு ஏதோ நினைத்தவளாய் அப்படிச் செய்யாது பாத்றூமுக்கு நடந்தாள்.

வடிவேலு குடிகாரனல்ல, நண்பர்களுடன் சேர்ந்தால் தன்னை மறந்து அளவுக்கு மீறிக் குடித்துவிட்டு, காசைக் கண்ணை மூடிக்கொண்டு செலவழிப்பது, மறுநாள் வேலைக்குப் போகாமல் டொக்டரிடம் போய் மெடிக்கல்லீவு எடுப்பதும் வழக்கமாகிவிடும். பிள்ளைகள் பிறக்க முன்பு அவனுடன் அவள் பட்ட கஷ்டங்கள் மனக்கண் முன் தெரிய, அவள் அண்ணனின் நண்பன் பரதன் சொன்ன வசனங்கள் அவள் காதில் மீண்டும் ஒலித்தது.

"வடிவேலுக்குக் குடிக்கத் தொடங்கினால் முடிக்கத் தெரியாது. இது அவனுடைய குறைபாடே தவிர, அவனைக் குறை சொல்ல முடியாது. இதுக்கு ஒரே வழி குடிக்காமலிருக்கச் சத்தியம் பண்ணிவியும், அவன் செய்வான்."

சத்தியத்தை அவன் இதுவரை மீறவில்லை. இன்று தான் கோபத்துடன் இருந்ததால்தான் இப்போ குடிக்க ஆரம்பிக்கப் போகிறான் என்று அவள் மனச்சாட்சி குரல் கொடுத்தது.

அவன் குடித்தால் குடித்திட்டுப் போகட்டுமே எனக்கென்னவென்று மனோகரியால் இருந்துவிட முடியாது. இதனால் பாதிக்கப்படுவது அவன் மட்டுமல்ல, தானும்தான் என்பது மனோகரிக்குத் தெரியும். குடித்தால் அவனுடன் கதைக்க முடியாது... தான் நினைத்ததைத் தான் செய்வான். குடும்பத்திலோ, வேலையிலோ அக்கறையின்றி, பணத்தைச் செலவு செய்துகொண்டு திரிவான். யார் என்ன சொன்னாலும் காதில் விழாது.

இப்போ குடிக்காமல் விட்டபின் வடிவேல் ஒரு நல்ல குடும்பத் தலைவனாக விளங்கினான். மனோகரி என்ன சொன்னாலும் கேட்பான். பிள்ளைகளைக் கவனித்து, வீட்டுவேலைகளும் செய்து வேலைக்கும் ஒழுங்காகப் போய் வருவான்.

மனோகரி முகத்தைச் சுழித்தால் வடிவேல் குழம்பிவிடுவான். ஆனால் இதுவரை அவளுக்குச் செய்து கொடுத்த சத்தியத்தைத் தவறாது காப்பாற்றி வந்தான். இன்று தான் கோபித்து, அவனைக் குழப்பிவிட்டால், அவனால் குடும்பமே குழம்பி,

இருக்கிற நிம்மதியும் குலைந்துவிடும் என்று உணர்ந்தவளாய், தான் கோபத்தை விடவேண்டும் என ,
"உனக்கேன் கோபம்... உனக்கேன் கோபம்..." என்று கண்ணாடியைப் பார்த்தபடி பலதடவைகள் கேட்டு நின்றவள் கதவு திறக்கும் சத்தம் கேட்க, தன்னைத் தயார்படுத்திக் கொண்டு, வடிவேல் உள்ளே வந்து ஹோலுக்குள் இருக்கும்வரை பொறுத்திருந்து அவள் வந்தாள்.

வடிவேல் எதிர்பார்க்கவில்லை. கிளாஸ் ஒன்றை எடுத்துப் போத்தலைத் திறக்க இருந்தவன், ஹோலுக்குள் வந்த மனைவியைக் கண்டதும் அதிர்ந்து போனான்.

ஒரு கிளாஸ் உள்ளே போயிருந்தால் நிலைமை தலைகீழாக இருந்திருக்கும்.

மனோகரி சோபாவிலிருந்து, ஓடிக்கொண்டிருந்த தொலைக்காட்சியைப் பார்ப்பது போல நடித்தாள்.
வடிவேல் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான்.
மேசையில் சாராயப்போத்தலும் கிளாஸ்சும் சிகரெட்பெட்டியும் அவனைப் பார்த்து 'எடு' என்பது போல அழைத்தன.
அவன் மனோகரியைக் கடைக்கண்ணாற் பார்த்தான். அந்த நேரம் பார்த்து அவளும் அவனை நோக்கித் திரும்பினாள். அவன் தன்னைப் பார்த்தது கண்டு, "என்ன...?" என்றாள்.

"ஒண்டுமில்லை!" என்றான் வடிவேல்.

அவள் மேசையை ஒரு பார்வை பார்த்துவிட்டு, மீண்டும் தொலைக்காட்சியில் பார்வையைச் செலுத்தினாள். கவனம் முழுவதும் அவனில் இருந்தது.

இவள் மட்டும் எழும்பிவராமலிருந்தால் போத்தல் திறபட்டிருக்கும். சிகரெட் புகைந்திருக்கும்.... இப்ப ஐந்து மார்க்கை சிகரெட் மிசினுக்குள் தள்ளினதுதான் மிச்சம்....

சிறிது நேரம் ரீவி மட்டும் தான் ஒலித்தது.

"பஞ்சியெண்டு படுத்தீர்....!"

"நித்திரை வரேல்லை..."

"கோபமே...?"

"இல்லை...ஏன்?"

"வேலையாலை வந்த மனிசனோடை நிமிர்ந்து கதைக்க மனம் இல்லாமல் போனீர்!"

"போனால்..."

"போனீரோ... இல்லையோ...?"

"ஓ! போனனான் தான்."

"கோபம் எண்டதாலை தானே!"

"தெரிஞ்சால் சரி!"

"என்ன தெரிஞ்சாச் சரி.."

"கோபம் எண்டு தான்.."

"என்னப்பா மனிசர் நீங்கள்....? விடிய எழும்பி வேலைக்குப் போட்டு, இப்ப வாறன்.. என்ன ஏது எண்டு சொல்லாமல் முகத்தை
ஏழு முழத்திலை நீட்டிக் கொண்டிருந்தால்....!"

"அவளிட்டை இருந்து கடிதம் வரக்கூடாதெண்டு சொன்னனான்."

வடிவேலு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"அவள் தான் எனக்கு இயமன்" என்று கோபம் ஒலிக்கக் கூறினாள் மனோகரி.

"அவள், இவள் எண்டு கதைக்காதையும்."

"ஏன் கோபம் வருகுதோ...?"

வடிவேலு மௌனமாக இருந்தான்.

"போத்திலை, சிகரெட்டைக் காட்டி என்னை வெருட்டலாமெண்டு நினைக்க வேண்டாம்."

"உம்மை நான் ஏனப்பா வெருட்ட வேணும்? ஏன் கற்பனை செய்துசெய்து தேவையில்லாமற் கதைக்கிறீர்?"

"நான் ஏன் கற்பனை செய்யிறன்.... உண்மையைத்தான் சொல்லுறன், மேசையிலை என்ன கிடக்கு? என்னை வெருட்டி உங்கடை காரியத்தைச் சாதிக்கலாம் எண்டு தானே, நான் என்ன விசரியே.... குழந்தைப்பிள்ளைக்குக்கூட உங்கடை செய்கை விளங்கும்.

"என்ன கதைக்கிறாயப்பா...?"

"உள்ளதைத்தான் கதைக்கிறன். அண்டைக்கு ரெலிபோன் எடுத்து உடனை எடுக்கச் சொல்லுறாள். நீங்களும் விழுந்தடிச்சு எடுத்து மணித்தியாலக் கணக்காக் கதைக்கிறீங்கள். இண்டைக்கு கடிதம் வருகுது...தொடர்பு இருக்கக்கூடாது... செத்துப் போவன் எண்டு சொன்னனான்."

"மனோகரி! பிளீஸ்.. தேவையில்லாமல் ரென்ஸன் ஆகாதையும். சொல்லுறதைக் கேளும் பிளீஸ்!"

"என்ன சொல்லப் போறியள்....?"

"அமைதியா இரும். உம்மை மீறி நான் ஒண்டும் செய்யமாட்டன்."

"சொல்லாமற் பறையாமல் காசும் அனுப்பிக்கொண்டு, ஒழிச்சொழிச்சு ரெலிபோனும் கதைச்சுக்கொண்டு இருப்பீங்கள்... பிறகு எனக்கு, உம்மை மீறி ஒண்டும் செய்யமாட்டன் எண்டு நல்லா நடிப்பீங்கள்"

"நான் நடிக்கேல்லை... உனக்கு நல்லாத் தெரியும் என்ரை நிலை"

"உங்கடை நிலைமைக்கு என்ன...? சாட்டுச் சொல்லிச் சமாளிக் காதேங்கோ!"

"இதிலை சமாளிக்கிறதுக்கு என்னப்பா இருக்கு? விமலாவின்ரை நிலைமையை யோசிச்சுப் பார்!"

"எனக்கென்ன வேறை வேலையில்லையே அவளைப்பற்றி யோசிக்க....?"

"உனக்கு வேலையிருக்கு.. வேலையில்லை எண்டு நான் சொல்ல வரேல்லை. ஒரு பொம்பிளையா இருந்து யோசிச்சுப் பார்!"

"எனக்கு உந்தக்கதை வேண்டாம், என்னை விட்டாக் காணும்."

"இப்ப நீர்தானே தொடங்கினது. வேலையாலை வந்த என்னோட கோவிச்சதும் நீர்தான்... பிறகு கதைக்க வேண்டாம் எண்டுறதும் நீர்தான்!"

"அவளின்ரை கதை எனக்கு இப்பவும் வேண்டாம், பிறகும் வேண்டாம்."

"அப்படி என்னெண்டு சொல்லுவீர்...?"

"அப்படிச் சொல்லித்தானே கலியாணம் செய்தனீங்கள்."

"ஓ! இல்லையெண்டு சொல்லேல்லை, ஆனா இண்டைக்கு அவள் ஒன்பது வயதுப் பொம்பிளைப் பிள்ளையோடை தெருவிலை நிக்கிறாள். தாயும் தேப்பனும் ஒரே நாளிலை குண்டு விழுந்து போவினம் எண்டு ஆரப்பா நினைச்சது....?"

"குண்டு விழுகிறதும் ஆக்கள் சாகிறதும் சிலோனிலை நடக்காத ஒண்டே.....?"

"நடக்கிற ஒண்டுதான் எண்டு பேசாமல் இருக்க என்னாலை முடியாது. அவள் ஒரு காலத்திலை என்னோடை வாழ்ந்தவள்."

"அப்ப.. வாடி என்ரை இராசாத்தி! எண்டு கூப்பிட்டு அவளோடை குடும்பம் நடத்துங்கோ.... நானும் பிள்ளையளும் எங்கை எண்டாலும் துலைஞ்சு போறம்."

"மனோகரி!" உறுக்கும் குரலில் அதட்டிய வடிவேல்,
"வீடுகீடெல்லாம் சிதறிப் போச்சு, ஒண்டுமில்லாமல் கொழும்புக்கு வந்திருக்கிறாள். இதைக் கேட்டால் இரும்பு மனம் கொண்டவையும் இளகுவினம்... அதோடை அவளின்ரை மாமன் கனடாவிலை இருக்கிறார். அங்கை கூப்பிடத்தான் அவளையும் பிள்ளையையும் வரச் சொல்லி வந்து நிக்குதுகள்." என்றான்

இரங்கும் குரலில்.

“நல்லா உருகிறீங்கள்.... மனிசி எண்டு பாசம் பொங்கி வழியுது. இப்பிடிப்பட்ட நீங்கள் ஏன் என்னைக் கலியாணம் செய்தனீங்கள்? எல்லாம் முடிஞ்சுது எண்டு சொன்னீங்கள்... இப்ப தாய், தேப்பன் செத்திட்டடினம்... அவள் வந்து நிக்கிறாள். என்ன செய்யப் போறீங்கள்?“

“எனக்குத் தெரியாது.“

“என்ன தெரியாது?“

“என்ன செய்யிறதெண்டு தெரியாது... தெரியாது... தெரியாது....!“ தன்னையும் மீறி எழுந்து நின்று கத்தினான்.

மனோகரி அவனை முறைத்துப் பர்த்துவிட்டு, எழுந்து போய்ப் படுத்துவிட்டாள்.
வடிவேல் சோபாவில் சாய்ந்தபடி நீண்டநேரம் யோசனையுடன் உட்கார்ந்திருந்தான்.
விமலாவும் அவனும் காதலித்ததும், அவளின் பெற்றோர் சம்மதம் இல்லாமல் அவள் அவனுடன் ஓடி வந்ததும் ஒன்றாகக் கூடி வாழ்ந்ததும் அவன் நினைவுகளில் வந்தது.
‘பாவம் விமலா, கொழும்பு என்றாலே அவளுக்குப் பயம். என்னென்று தனியா வந்து சமாளிக்கிறாளோ....?‘ அவனால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.
அவளுடைய பயந்த சுபாவத்தால், அவள் இன்று பெற்ற பிள்ளையுடன் தனிமரமாக நிற்கிறாள். தாயின் சொல்லைக் கேட்டு.... ஒன்றாக வாழ்ந்த தங்களைக் குழப்பிய அந்தத் தாயும் ஒரு தாயா என்று அவன் மனம் இன்றும் சபித்தது.
கைக்குழந்தை பிருந்தாவுடன் தாய்வீட்டுக்குப் போன விமலா வரவேயில்லை.
எத்தனை தடவைகள் வடிவேல் நேரில் போய்க் கதைக்க முயன்றும் விமலா தாய்க்குப் பயந்து வர மறுத்துவிட்டாள்.
ஊர்ப்பெரியவர்களை அனுப்பிப் பேசவைக்க, அது விவாகரத்து வரை போய் நின்றது.
அவனும் அவளும் சண்டை போட்டதாக நினைவேயில்லை. எத்தனை குற்றச்சாட்டுகளை அவன்மீது சுமத்தி.... குடித்தது, அடித்தது, உதைத்தது என்று பழிசுமத்தி, பணத்தால் தன் வீராப்பைச் சாதித்து பெற்றமகளை வாழாவெட்டியாக்கி,

தன்னோடு வீட்டில் வாழ வைத்துவிட்டு, இன்று அவ போயிட்டா... இவள்...!'
தொலைக்காட்சியை நிற்பாட்டிவிட்டு, நீண்டநேரம் கவலை அரிக்க யோசனையுடன் இருந்த வடிவேல், நித்திரை கண்களை முட்ட எழுந்து படுக்கைக்குச் சென்றான்.

----------

ரெலிபோன்மணி ஒலித்தது.
வடிவேல் வேலைக்குப் போகாமல் துாங்க, பக்ரறியிலிருந்து மஜிஸ்ரார் ரெலிபோன் எடுக்கிறார் என்று மனோகரி,
"எழும்புங்கோ! வேலைக்குப் போகேல்லையே..? ரெலிபோன் எடுக்கினம்... மஜிஸ்ரராக்கும்.... எழும்புங்கோ!" என்று பக்கத்தில் கைகளால் வடிவேலைத் தேடியபடி, பெட்லைற்றைப் போட்டாள். அங்கே வடிவேல் இல்லை.
தொலைபேசி அடித்து ஓய்ந்தது.
மனோகரி கண்களைக் கசக்கினாள். அவள் கனவு கண்டு கொண்டிருந்தபோது, தொலைபேசிமணி அடித்ததும் இராத்திரி நினைவும் சேர்ந்து வடிவேல் வேலைக்குப்போகாமல் படுக்கிறான் என்று நித்திரைத்துாக்கத்தில் நினைத்து அவனைத் தேடியதை உணர்ந்தவளாய் நேரத்தைப் பார்த்தாள். ஏழுமணிக்குச் சில நிமிடங்கள் இருந்தன. பிள்ளைகளுக்கும் பாடசாலை லீவு, தொடர்ந்த படுக்கலாம் என்று போர்த்து மூடிக்கொண்டு படுத்தவ ளுக்கு, இரவு கணவனுடன் சண்டை போட்டதும் அவன் சாராயப் போத்தலைத் திறக்க இருந்ததையும் நினைத்துப் பார்த்தாள்.
'பாவம்! நான் ஏன் வீணாச் சண்டை போட்டன...?' என்று ஒரு கணம் நினைக்கத் தோன்றியது.
கலியாணம் செய்து பத்து வருடங்கள் விமலா என்ற ஒருத்தி இருப்பதாகவே அவன் காட்டிக் கொள்ளவில்லை. இரண்டாந் தாரமாக வடிவேல் தன்னை மணந்தது என்பதைத் தவிர, வேறு எந்த இழுபறியும் ஏற்பட்டதில்லை. இது கூடப் பலருக்குத் தெரியாது. ஏன்... அக்கா, அத்தானுக்குக் கூடத் தெரியாமல் இருந்தது. வடிவேல் நெருங்கிப் பழகிய தன் நண்பர்களுக்குச் சொல்லிக் கவலைப்படுவான். கடிதம் வராதா என்று அவன் ஏங்கித்துடித்த நாட்கள் தான் எத்தனை....!

வடிவேல் விமலாவுடன் தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சிகள்தான் ஒன்றா... இரண்டா...? விமலாவின் சிநேகிதிகள் மூலம் தனது முகவரியை அறிய வைத்தும்கூட, எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை.

இன்னொரு கலியாணம் செய்யவேண்டும் என்று அவன் நினைக்க வில்லை. மனோகரி அவனை விரும்பியபோதும், "வேண்டாம், எனக்குப் பல பிரச்சனைகள் இருக்கு" என்று சொல்லிவிட்டான். அவள் விடவில்லை. முன்னும் பின்னும் அவனைத் தொடர, அவன் தன் நிலைமையை வெளியிட்டான். அதன்பின் அவள் அவனைத் தொடர்வதை விட்டுவிட்டாள். மாறாக அவள் அத்தானும் அக்காவும் வடிவேலை அவளுக்குக் கலியாணம் பேச முனைய, வடிவேலு ஏற்கனவே மணமாகி விவாகரத்தானவன் என்ற தனக்குத் தெரிந்த உண்மையை அவள் மறைத்துவிட்டாள்.

வடிவேல் மறைக்கவில்லை. அவளின் அக்கா, அத்தானிடம் உண்மையைச் சொல்லியிருந்தான். அவர்களுக்கு அது ஏற்கனவே தெரிந்திருந்தபடியால் பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை.

திருமணம் செய்வதுபற்றி விமலாவுக்கு அறிவித்தான். வடிவேல் என்றவன் என்ரை மகளைப் பொறுத்தவரை செத்துப் போனான் என்று விமலாவின் தாயிடமிருந்து பதில் வந்தது.
வடிவேலுக்கு கொஞ்சநஞ்சம் இருந்த நம்பிக்கையும் கெட்டுப் போக, நண்பர்கள்,
"அவைதானே நீ செத்துப்போனாய் எண்டு உயிரோடை கொள்ளி வைச்சிட்டினம், இதுக்குப் பிறகும் ஏன்டா யோசிக்கிறாய்?
வடிவேல்! அந்தப்பிள்ளை விரும்புது, ஓம் எண்டு செய்யன், ஒரு குடும்பம்.. பிள்ளைகுட்டி எண்டு இருந்தால் தானடா வாழ்ந்தது எண்டதுக்கு ஒரு அர்த்தம் இருக்கும். ஒருத்தரும் உன்னைப் பிழை சொல்லாயினம். அவை விவாகரத்து செய்து உன்னைக் கலைச்சு விட்டிட்டினம். ஆம்பிளை நீ... என்னடா... உலகத்திலை நடவாத ஒண்டையே நீ செய்யப் போறாய்...? அதோடை பொம்பிளை வீட்டுக்கு நடந்த உண்மையைச் சொல்லியும் போட்டாய். அதுக்குப் பிறகும் அதுகள் ஓம் எண்டு வருகுதுகள். அதுஇது எண்டு சாட்டுச் சொல்லி வாழ்க்கையைப் பாழாக்காமல் ஓமெண்டு சொல்லு!"

என்று வடிவேலுக்கு பலபட எடுத்துரைத்து, அவன் மனத்தைத் தளர வைக்க கல்யாணத்துக்கு அவன் சம்மதித்திருந்தான்.

கல்யாணம் நடைபெற்று வாழ்க்கை இனிமையாக ஓடியது. பிள்ளைகளும் பிறந்து, வளர்ந்து பள்ளிக்கும் போகத் தொடங்கி விட்டார்கள்.

விமலாவிடமிருந்து முதன்முதலாகக் கடிதம் வந்திருந்தது. அவன் பிரிக்க முதல் மனோகரி அதைப் பிடுங்கிப் பிரித்துப் படித்தாள். அவள் முகம் பயத்தில் வெளிறியது. வடிவேல் அவளிடம் வாங்கி வாசித்தான்.

'உங்களை என்னிடமிருந்து பிரித்து வைத்திருந்த அப்பா, அம்மா இரண்டு பேருமே ஒரே நாளில் போயிட்டினம்....' என்று தொடங்கி தானும் பிள்ளையும் செய்வதறியாது நிற்பதைக் கண்ணீரோடு விபரித்திருந்தாள் விமலா.

தொடர்ந்து அவளும் மகள் பிருந்தாவும் எழுதும் கடிதங்கள் வரத் தொடங்கின.

மனோகரி புயலானாள். வீட்டில் போர் வெடிக்காத நாளே கிடையாது. எப்படிச் சண்டை போட்டாலும் விட்டிருந்த குடியை மீண்டும் தொடங்க அவன் முயன்றதாக அவள் அறியாள்.

நண்பர்கள் சேர்ந்தால் அளவாகக் குடிக்கும் பழக்கம் அவனிடம் ஊரிலேயே இருந்தது.

ஜேர்மனிக்கு வந்தபின் மனைவி, மகள் என்று சோகம் வலுக்க எல்லை மீறிக் குடிக்கும் பழக்கம் வளர்ந்தது. பலரை அவனுக்குப் பழக்கம், நண்பர்களும் அதிகமே அவனுக்கு இருந்தார்கள்.
உழைக்கும் பணத்தில் பாதிக்கு மேல் செலவழிப்பதும் கடன் வாங்குவதும் என்று குடிப்பழக்கம் வளர, மனோகரி சத்தியம் வாங்கி விட்டாள்.

அவன் மறுக்கவில்லை. செய்த சத்தியத்தை இதுவரை மீறவில்லை. இத்தனையையும் கட்டிலில் படுத்திருந்தபடி யோசித்துப் பார்த்தாள்.

'இவள் கனடாவுக்குப் போய்த் துலைஞ்சாள் எண்டாப் பிரச்சனை முடிஞ்சிடும்.' என்று தனக்குள் மனதைத் தேற்ற முயன்றாள்.

முரளியின் வீட்டுக்கு ராகினி வந்தாள். பல அடுக்குமாடி கொண்ட அந்த வீட்டில் இரண்டு அறைகள் கொண்ட பிரிவு அவன் வாழ் இடமாக இருந்தது.

நிறைய வெளிநாட்டவர்களும் ஓரிரு ஜேர்மனியரும் வாழும் அந்தப் பெரிய தொடர்வீட்டில் குடும்பமாகவும் தனியாகவும் தமிழர்களும் வாழ்ந்தார்கள்.

முரளி, "ஹலோ!" என்று, காலைச்சூரியன் போல முகம் ஒளிர்ந்து பிரகாசிக்க அவளை வரவேற்றான்.
பலவர்ண வண்ணத்துப்பூச்சிகள் நெஞ்சுக்குள் கும்மாளம் அடிப்பதுபோல அவன் உள்ளம் குதூகலமாக ஆர்ப்பரித்தது.

வயது பதினெட்டைத் தாண்டி பத்தொன்பதில் நடை போட்டுக் கொண்டிருக்க, வறுமைக்கோலங்களை இன்னதென்று அறியாமல் சின்னவயதிலேயே ஜேர்மனிக்கு வந்து பெற்றோரின் உழைப்பில் உல்லாசமாக வாழும் வாழ்க்கை அவளுடையது. இது அவளுக்கு மட்டுமல்ல வெளிநாட்டுச்செழிப்பில் பிறந்து வளரும் எல்லோருக்குமே பொதுவானது.

கஸ்டம் என்றால் என்னவென்று ராகினி அறிந்திருக்க நியாயம் இல்லை. அவள் படியேறி முரளியைத் தேடி வந்ததும் அவன் மகிழ்ச்சி தாங்காமல் சற்றுத் தடுமாறிப் போய் நின்றான்.

"வாரும்! தனியாவா...?" வெளியே எட்டிப் பார்க்க முயன்றான் முரளி.

"ஏன்... தனிய வரக்கூடாதா?"

"இல்லை, வழக்கமாத் தம்பியோடை இல்லாட்டி பிறன்ஸோடை வருவீர்."

"இண்டைக்குத் தனியா வந்திருக்கிறன்.... பிடிக்காட்டிச் சொல்லுங்கோ... போயிடுறன்."

"நைன்... பிற்ற... கோவிக்காதையும்... உம்முடைய அப்பா, அம்மா அறிஞ்சா...? அதுதான் பயமாக் கிடக்கு."

"எங்கடை அப்பா, அம்மாவும் விரும்பித்தானே செய்தவை!"

"நீர் சின்னப்பிள்ளை... நான் உம்மை ஏமாத்திப்போட்டன் எண்டு சொல்லுவினம்."

"எனக்கு வாயில்லையே..., அதோடை எங்கடை அப்பா, அம்மா நான் சொன்னாக் கேப்பினம்."

"எனக்கு விசா இல்லை."

"அதுக்கு...!"

"எப்ப பிடிச்சு அனுப்பிறாங்களோ தெரியாது."

"நான் விடுவனா...?"

"நீர் விடமாட்டீர், தெரியும். ஆனால் ஜேர்மன் சட்டங்கள் அப்பிடி. அப்பீல் எடுத்திருக்கிறன், ஆனால் ஏற்றுக்கொள்ளுவினம் எண்டு நான் நம்பேல்லை."

"ஏன்...?"

"என்னைப்போல பலருக்கு இப்பிடி நடந்திருக்கு!"

"உங்களுக்கு நடக்காது!" என்ற ராகினி ஜக்கற்றைக் கழற்றிக் கொழுவிவிட்டு, தான் கொண்டு வந்த கசற்றை வீடியோவுக்குள் தள்ளி, தொலைக்காட்சிப்பெட்டியின் பொத்தானை அழுத்திவிட்டு அங்கிருந்த கதிரையில் உட்கார்ந்தாள்.

"என்ன குடிக்கிறீர்...?"

"வேண்டாம் வாங்கோ!"

"ரீ வைக்கிறன்."

"பிறகு நான் போடுறன்." என்று அவன் கையைப் பிடித்து முன்னிருந்த இருக்கையில் அமர வைத்தாள்.
ராகினியின் பரதநாட்டியம் தொலைக்காட்சியில் போய்க்கொண்டு இருந்தது. விதவிதமான வண்ண ஆடைகளில் அவளது நடனங்களும் அறிவுப்பாளரும் மற்றவர்களும் புகழ்ந்து பாராட்டுவ துமாகக் கசற் ஓடிக்கொண்டிருந்தது.

"நீர் நல்ல கெட்டிக்காரி, திரும்பித் திரும்பிப் பார்க்க வேண்டும் போலக்கிடக்கு!"

அவள் எழுந்து போய் வீடியோவை நிறுத்தினாள்.

"ஏன்...?" கேட்டான் முரளி.

இது உங்களுக்குத்தான், வைச்சு வைச்சுப் பாருங்கோ! இப்ப நான் இருக்கிறன், என்னோடை கதையுங்கோ!"

"உமக்கும் எனக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்...?"

"ஏன் அப்பிடிச் சொல்லுறீங்கள்..?"

"ராகி!"

"சொல்லு!"

"நான் ஒரு ஆம்பிளை, மரியாதையில்லாமல் மொட்டையாச் சொல்லுறீர்...!"

"அன்படா... அன்பானவர்களுக்கு என்னடா அளவுக்கு மீறிய மரியாதை?"

"ஓகே.. ஆனால் ராகி..!"

"சொல்லு!"

"எனக்கும் உனக்கும் ஏணி வைச்சாலும் எட்டாது."

"மடையா, உன்ரை தோள்மூட்டு உயரம்கூட நான் இல்லை..."

"வளர்த்தியிலை நான் உயரமாயிருக்கலாம், ஆனா வசதியிலை உன்னை எட்ட முடியாத தூரத்திலை நான் இருக்கிறன்."

"அப்பிடி ஒண்டுமில்லை... உனக்கு நான், எனக்கு நீ... ஓகே. முரளி ராகினி நல்ல பொருத்தம் இல்லையாடா...?"

"நீ சொல்லச் சந்தோசமா இருக்கு.. ஆனா... வந்த கடன் இலட்சக்கணக்கிலை... எப்பிடித் திருப்பிக் கொடுக்கப் போறனோ

தெரியேல்லை... அக்காவுக்குப் பேசின சீதனம் கொடுக்காமல் கிடக்கு... இன்னும் கனக்கப்பொறுப்புகள், உனக்கு விளங்காது."

"என்னைக் கலியாணம் செய்! அப்பாட்டைச் சீதனத்தை வாங்கி வீட்டுக்கு அனுப்பு! கடனைக் கொடு! எனக்கு ஜேர்மன் பாஸ்போர்ட்... உன்ரை விசாப் பிரச்சனையும் தீரும்."

"வேண்டாம் ராகினி, உன்ரை அப்பா, அம்மாவின்ரை வசதிக்கு படிச்ச மாப்பிள்ளையாப் பார்த்து, நல்ல இடத்திலை செய்து சந்தோசமா இரு! பிளீஸ், நாங்கள் இனிமேல் சந்திக்க வேண்டாம்....!"

ராகினி 'விறுக்' என்று எழுந்து ஜக்கற்றைப் போட்டவள், வீடியோ கசற்றை எடுத்துக்கொண்டு, கோபம் தெறிக்கக் கதவைச் சாத்திக் கொண்டு திரும்பியும் பார்க்காமல் வெளியேறினாள்.

"ராகி! ராகி!" என்று முரளி பின்னால் கூப்பிட்டும் அவள் நிற்கவில்லை.

அவள் படியிறங்கும் வேகத்தை 'டொக்...டொக்...' என்ற சப்பாத்தின் ஒலி அறிவிக்க, அவன் ஜன்னலூடாக அவளை அழைக்கலாம் என்று அதனைத் திறக்க, அங்கே வேறு தமிழ் ஆக்கள் நடந்து செல்வதைக் கண்டு மௌனமாகத் திரும்பினான்.

--------------

வடிவேலுவும் மனோகரியும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு கடைக்குப் போகவென்று வெளிக்கிட்டார்கள். அவளும் பிள்ளைகளும் காருக்குப் போய்விட்டார்கள். வடிவேல் சப்பாத்து போட்டு, ஜக்கற்றை எடுக்கும் நேரம் தொலைபேசிமணி ஒலித்தது.

கொழும்பிலிருந்து விமலா கதைத்தாள்.
"எங்களை ஜேர்மனிக்குக் கூப்பிடுங்கோ....!" என்று கெஞ்சும் குரலில் கேட்க, தொலைபேசித்தொடர்பும் அறுந்துவிட்டது.
வடிவேல் தன்னிடமிருந்த கார்ட்டில் நம்பர்களை அழுத்தி விமலா இருந்த லொட்சுக்கு தொலைபேசி எடுத்தான். அவர்களும் விமலாவைக் கூப்பிட்டுக் கொடுத்தார்கள். அவள் கதைத்தாள்.

அப்போ வீட்டுமணி அடித்தது. வடிவேல் அவசரமாகக் கதைத்து முடித்து தொலைபேசியை வைத்துவிட்டு வெளியே வர, "எத்தினை மணித்தியாலமாகக் காருக்கை இருக்கிறது...? ரெலிபோன் கதைக்கிறதெண்டா சொல்லிப்போட்டுக் கதைக்கிறது தானே, நானும் பிள்ளையளும் உடுப்பை மாத்திப்போட்டு வேறை வேலை பாத்திருப்பம்." எள்ளும் கொள்ளும் வெடிப்பது போல இருந்தது மனோகரியின் வாயிலிருந்து வந்த கோபமான வார்த்தைகள்.

"அவளுக்குத்தானே எடுத்தனீங்கள்?"

காரை ஓட்டியபடி மௌனமாக இருந்தான் வடிவேல்.

"உங்களைத்தானப்பா கேக்கிறன், ஊமை மாதிரி இருக்கிறீங்கள்."

"ரெலிபோன் வந்திச்சு, கதைச்சன்...."

"இவ்வளவு நேரமாக் கதைச்சிட்டு வாறீங்கள், நாங்கள் குளிருக்கை விறைச்சுப்போய் நிக்கிறம்... ரெலிபோன் வந்திச்சு, கதைச்சன் எண்டுறியள்... நீங்களும் ஒரு மனிசனே?"

பின்சீற்றில் உட்கார்ந்திருந்த சுவர்ணாவும் நிகிலனும் பயத்தில் ஒருவரையொருவர் ஜாடையால் காட்டிவிட்டு மௌனமாக இருந்தனர்.

"சிலோனிலையிருந்து வந்த ரெலிபோன் கதைச்சுக் கொண்டிருக் கேக்கை கட்டாப் போச்சு... நான் திரும்பி எடுத்துக் கதைச்சிட்டு வாறன், அங்கை அதுகளுக்கு இருக்கிற கஷ்டங்கள் விளங்காமல் நீ எரிஞ்சு விழுகிறாய்!"

"நான் எரிஞ்சு விழுகிறனோ..? இன்னொருத்தியா இருந்தா இப்ப இரண்டிலை ஒண்டு நடந்திருக்கும்."

"என்ன நடந்திருக்கும்....?"

"என்னப்பா திருப்பித் திருப்பிக் கேக்கிறீங்கள்...! தாலி கட்டி இரண்டு பிள்ளையளைப் பெத்திட்டனெண்டு பேசாமல் இருக்கிறன்."

"இப்ப நீ ஏன் ரென்சன் ஆகிறாய் அங..? பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு சும்மா சண்டை போடாதை! எல்லாரும் மனிசர் எண்டு நினைச்சுக்கொண்டு பேசு!"

"எல்லாரும் மனிசர் தான், பேசிறதெல்லாம் பொய்யும் புரளியும்... *பிறகு மனிசர் எண்ட நினைப்பு வேறை...*"

"அவளின்ரை நிலையிலையிருந்து யோசிச்சுப் பார்! இங்கை ஜேர்மனியிலை இனிமேல் இல்லையெண்டு சொகுசா வாழுற உனக்கு, தனிமரமா நாதியற்று நிக்கிற அவளின்ரை கஸ்டம் எங்கை விளங்கப் போகுது...?"

"அவளைப் பற்றி நான் ஏன் யோசிக்க வேணும்? அவள் ஆர் எனக்கு....?"

"எல்லாம் தெரிஞ்சு கொண்டு குழந்தைப்பிள்ளை போலைக் கதைக்காதை."

"ஓ! நான் குழந்தைதான். அப்பிடி நினைச்சுக் கொண்டுதான் நீங்கள் நினைச்சபடியெல்லாம் நாடகம் ஆடுறீங்கள்.

அப்போ, பின்னே வந்த கார்க்காரன் கோர்ன் அடித்து விலத்திக் கொண்டு போய்... விசரே என்று தலையில் விரலைத் தொட்டு சைகை காட்டிவிட்டுப் போகிறான்.

வடிவேல் சிறிதுதூரம் ஓடி, ஓர் கார்த்தரிப்பு இடத்தில் காரை நிறுத்திவிட்டு,
"நான் சொல்லுறதைக் கேள்!" என்றான்.

"நீங்கள் சொன்னதைக் கேட்டது காணும், காரை ஓடுங்கோ, நேரம் போகுது!" என்றாள்.

"நேரம் போகட்டும், பரவாயில்லை. ரெலிபோன் வந்திச்சு, நான் கதைச்சன்.... என்னைக் காணாட்டி உள்ளுக்கு வந்து இருக்கலாமோ, இல்லையோ? அதைவிட்டிட்டு குளிருக்கை இருந்தம், விறைச்சுப் போனம் எண்டு கதைக்கிறாய்."

"கடைக்குப் போவம் எண்டு வெளிக்கிடுத்திப்போட்டு, நாங்கள் காருக்கை இருக்கிறம், அரைமணித்தியாலத்துக்கு மேலை

அவளோடை கதைகதையெண்டு கதைச்சிட்டு வாறீங்கள்! உங்களுக்கு அவளோடை என்ன கதை? இனிமேல் ரெலிபோன் எடுக்கட்டும், கிழிகிழியெண்டு கிழிச்சு விடுகிறன்."

"மனோகரி!" என்று வலது கையை உயர்த்தி ஆட்காட்டி விரலை உயர்த்தி அச்சுறுத்தினான் வடிவேல்.

"உனக்கும் விமலாவுக்கும் ஒரு கதையுமில்லை. கப் சிப்பெண்டு இருக்க வேணும். என்னை மனிசனா இருக்க விடு!"

"அங்.. நீங்களும் ஒரு மனிசர் எண்டு கதைக்கிறீங்கள்."

"மனிசன் எண்டதாலைதான் உன்ரை அடாத்தான கேள்விகளுக்கு எல்லாம் அடக்கமா நிண்டு பதில் சொல்லிக் கொண்டு வாறன்... என்னை வெறியன் ஆக்காதை."

"அப்பா...!" என்றாள் சுவர்ணா.

வடிவேல் மகளைத் திரும்பிப் பார்த்தான். சண்டை வேண்டாமென்று அவள் கண்கள் கெஞ்சின.

"உங்களுக்காகத்தான் நான் இன்னும் உயிரோடை இருக்கிறன்." என்று காரை மீண்டும் இயக்கினான் வடிவேல்.

"ஒருத்தரை நம்பி ஒருத்தர் இல்லை." என்று மீண்டும் உரசினாள் மனோகரி.

'ஒன்றையொன்று நம்பித்தான் இந்த உலகமே இயங்குது. இது விளங்காத இவளோடை கதைச்சுப் பிரயோசனமே இல்லை' என்று நினைத்தவானாய் கடைவீதியை நோக்கிக் காரைச் செலுத்தினான்.

------------------------

இரவுச்சாப்பாடு செய்து கொண்டிருந்தாள் மனோகரி. ஹோலில் பிள்ளைகள் இருவருக்கும் பாடம் சொல்லிக்கொண்டிருந்தான் வடிவேல்.

"அப்பா நீங்கள் ரிவியிலை வருவீங்களா..?" கேட்டான் நிகிலன். வடிவேல் விளங்காதவனாய் மகனை அதிசயமாகப் பார்த்தான். சுவர்ணா தம்பியாரைப் பார்த்து வேண்டாம் என்று தலை ஆட்டினாள்.

"என்ன சொல்லுறாய்...?" கேட்டான் வடிவேல். நிகிலன் சிரித்தான்.

"அவன் சும்மா சொல்லுறான்." என்றாள் சுவர்ணா.

"இல்லையப்பா...." என்று நினைத்ததைச் சொல்ல வந்தான் நிகிலன்.

"அப்பா! 'பெக்கர் கேகின் பெக்கர்' ரிவியிலை நடக்குது... ரீவியிலை வருகினம்...." என்றதும் வடிவேலுக்கு ஓடி விளங்கியது.

"அம்மாவும் நீங்களும் அடிக்கடி சண்டை போடுறீங்கள், ரிவியிலை வருவீங்கள் தானே!" ஆறு வயது நிகிலன் தன் மனதுக்குப் பட்டதைச் சொல்லிவிட்டான்.

'அப்பா கோபத்திலை அடிக்கப் போறார்' என்று பிள்ளைகள் இருவரும் பயந்தார்கள்.

வடிவேல் ஒருகணம் யோசித்தான்.
தானும் மனோகரியும் புரியும் வாய்வாதம் பிள்ளைகளின் நெஞ்சிலே இத்தகைய சிந்தனைகளைக் கிளறி விட்டிருக்கிறதே! என்று அவன் மனம் வருந்தியபடி தொடர்ந்து பாடங்களைச் சொல்லிக் கொடுத்தான்.

அவன் மனம் அதில் முழுதாகக் கவனம் செலுத்தவில்லை.
அப்போ வீட்டு மணி ஒலித்தது. வடிவேல் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். அங்கே நண்பன் குமாரும் மனைவி, பிள்ளைகளும் நின்றனர்.
"வாங்கோ! வாங்கோ!" வரவேற்றான் வடிவேல். மனோகரி யார் வருகிறார்கள் என்று அறியும் ஆவலில் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

"என்ன மும்மரமாச் சமையல்நடக்குது...?" என்று பற்கள் யாவும் பளிச்சென்று வெளியே தெரியச் சிரித்துக்கொண்டு வந்தாள் சாரதா.

"என்னத்தைச் சமைக்கிறதெண்டு தெரியேல்லை, மாட்டிறைச்சி கூடாது எண்டாங்கள், இப்ப பன்றிஇறைச்சிக்கையும் மாட்டைக் கலந்து விற்றுப் பிடிபட்டுப் போச்சாம்...."

"ஓமடி மனோ, எல்லோருக்கும் சாப்பாடு ஒரே பிரச்சனைதான்... மீனை, கோழியைத் தான் சமைக்க வேணும்...." சமையல் தொடர்ந்தது.

"இவள் விமலா கொழும்பிலை வந்து நிகிறாள்... இஞ்சை ரெலிபோன் எடுத்து ஒரே கதை.... எனக்கு என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை. விசர் விசராக் கிடக்கு..."

"பாவம், என்ன செய்யிறது...?"

"என்ன பாவம்? அவவின்ரை தடிப்புக்கு கஷ்டப்படுகிறா, நல்லாக் கஷ்டப்படட்டும். எங்களை விட்டாக் காணும்."

"அவளுக்கும் வேறை ஆரடி இருக்கினம்..?"

"அதுக்கு நாங்களே கிடைச்சம். நான் இவருக்குச் சொல்லிப் போட்டன், இனி அவளோடை தொடர்பு வைச்சால், நானும் பிள்ளையளும் எங்கையாவது போய் விழுந்து செத்துப் போவம் எண்டு... என்னாலை இதைப் பார்த்துக் கொண்டு இருக்கேலாது. இவரென்ன தசரதனே ஆயிரம் பெண்டாட்டியைக் கட்டிக்கொண்டு அரசாள...?" என்ற மனோகரியின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"இஞ்சை தா, நான் பிழியிறன்..." என்று மனோவிடமிருந்த இடியப்பஉரலைப் பறித்து, "நீ கறியைப் பார்!" என்ற சாரதா, "ஏதோ நடக்கிறது நடக்கும்... பேசாமலிரு! வடிவேலண்ணை அப்பிடிப் பிழையானவரில்லை, என்னெண்டாலும் யோசிச்சுச் செய்யட்டும். அவரைக் குழப்பியடித்து மனதை வெறுக்க வைச்சியோ, பிறகு போத்தலைத் தூக்கினால் ஆரும் கதைக்க ஏலாது, பேசாமலிரு! பெண்ணுக்குப் பொறுமை வேணும்."

குமாரும் வடிவேலுவும் ஹோலுக்குள் கதைத்துக் கொண்டு இருந்தார்கள். தொலைக்காட்சியில் ஏதோ ஜேர்மன் படம் ஓடிக் கொண்டிருந்தது. பிள்ளைகள் தங்கள் அறைக்குள் கதைப்பதும் விளையாடுவதுமாக இருந்தார்கள்.

"பியர் குடியன்!"

"வேண்டாம்."

"இரு, வாங்கிக்கொண்டு வாறன்." என்று வடிவேல் வெளிக் கிட்டான்.

"நீ குடிக்கிறேல்லை மச்சான், பிறகு மனோ எனக்குப் பேசும். வேண்டாம் விடடா."

"சீச்....சீ.. அதொண்டுமில்லை." என்று வடிவேல் வெளிக்கிட, "பொறு, நானும் வாறன்." என்று குமாரும் எழுந்து அவன் பின் சென்றான்.
வெளியே ஐஸ்கட்டி உரசுவது போன்று குளிர்காற்று வீசியது.

"சினோ கொட்டும் போலைக் கிடக்கு!"

"கிறிஸ்மஸ்க்கு சினோ எண்டுதான் ரிவியிலை போடுறாங்கள்!"

"ஒரு விடியாத நாடு மச்சான் இது...!"

"குடிக்கத் தொடங்கேல்லை, அதுக்கு முதல் குறை சொல்லத் தொடங்கிவிட்டாய்."

"இல்லை மச்சான்.... என்னடா வாழ்க்கை வாழுறம். ஆங்.. குடிக்கிறம், தின்னுறம், படுக்கிறம்... வேலை..வேலையெண்டு ஒருபுறம், மனம் திறந்து சிரித்து எத்தினை நாளாச்சு மச்சான்...?"

"நான்தான் பல பிரச்சனையோடை இருக்கிறன், இப்ப மனிசி யோடை வாய் திறக்க முடியாமற் கிடக்கு.. நீ தான் சந்தோசமா இருக்கிறாய் எண்டா, என்னடா வாழ்க்கையெண்டு அலுக்கிறாய்... உனக்கும் வீட்டிலை பிரச்சனையே..?"

"வீட்டிலை பிரச்சனையில்லை, ஆனா ஒரே இயந்திர வாழ்க்கை யாக்கிடக்கு.."

"என்ன செய்ய....? ஒண்டிருந்தா ஒண்டில்லை."

"சரி, உனக்கும் மனிசிக்கும் என்ன பிரச்சனை...?"

"விமலா கொழும்பிலை பிள்ளையோடை வந்து நிக்கிறாள்."

"ஓ! சொன்னனி, என்ன செய்யிறது பாவம்... அதுக்கு மனோகரி ஏன் உன்னோடை பிரச்சனைப்படுவான்...?"

"விமலா ரெலிபோன் எடுக்கிறது, கடிதம் போடுறது பிடிக் கேல்லை... கனடாவுக்கு மாமனிட்டைப் போறதுக்கு நிக்கிறாள். ஏஜென்ஸிக்காரன் இண்டைக்கு நாளைக்கெண்டு இப்ப மூன்று மாசமாப் போச்சு... இஞ்சை கூப்பிடச் சொல்லுறாள்."

"இஞ்சை ஜேர்மனிக்கு வந்து.... வேண்டாம். கனடாவுக்குப் போனா நல்லது. பொறுமையாய் நிக்கச்சொல்லு. ஏஜென்ஸி எண்டா இப்பிடித்தான்.... அவங்கள் எல்லாம் பார்த்து ஒழுங்கு செய்யத்தானே வேணும்."

"றோட்டைப் பார்த்துக் குறொஸ்பண்ணு , கண்விண் தெரியாமல் கார்கள் போகுது."

"இருக்கிற தொல்லைக்கை அது வேறை, நாங்கள் தான் பார்த்து கவனமாப் போகவேணும்."

"அடிச்சு ஆளை முடிச்சிட்டாப் பிரச்சனையில்லை."

"ஏனடா அப்படிச் சொல்லுறாய்...? வாழ்க்கை எண்டா பலதும் இருக்கும், அதுக்கு கோழை மாதிரி ஓடி ஒழிக்கிறதே?"

கதைத்துக்கொண்டே பெற்றோல்செற்றுக்குள் நுழைந்தவர்கள் பியர் இருக்கும் இடத்துக்குச் சென்று, வடிவேல் பியரை எடுக்க, குமார் சிறுவர்களுக்கு இனிப்புப் பைக்கற்றுக்களும் எடுத்தபடி காசாளர் மேசைக்கு வந்து பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறினர்.

குமார் சிகரெட் பைக்கற்றை உடைத்து ஒன்றைப் பற்ற வைத்த படி வடிவேலுக்கு நீட்ட, அவன் ம்..ம்.. என்று மறுத்துவிட்டான்.

"சத்தியம் சத்தியமாகவே இருக்கட்டும், ஒழிச்சு மறைச்சும் செய்ய மாட்டன் எண்டுறாய், சரி நான் கெடுக்கேல்லை." என்றான் குமார். இருவரும் வீட்டுக்குள் வர, பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

--------------------------------

மனோகரி, அதே கட்டிடத்தில் இருக்கும் நண்பி வீட்டுக்கு பயித்தம்பணிகாரம் செய்ய உதவி கேட்டதால் போயிருந்தாள். வடிவேலு புத்தகம் ஒன்றை வாசித்தபடி சோபாவில் இருக்க, மகன் நிகிலன் ஹோம்போய் விளையாடிக்கொண்டிருந்தவன் ஏதோ யோசித்தவனாய், "அப்பா!" என்றான்.
"ம்" என்ற வடிவேல் புத்தகத்தை விலகி மகனைப் பார்த்தான்.

"என்னை ஒண்டும் கேக்காதை, உதொண்டும் எனக்குத் தெரியாது."

"ஹோம்போய் கேக்கேல்லை."

"அப்ப என்ன...?"

"எங்களுக்கு இன்னும் ஒரு அம்மா இருக்கிறாவோ அப்பா...?"

"இல்லை." என்ற வடிவேலுவுக்கு நெஞ்சில் ஆயிரம் இடிகள் வெடித்தன.

வீட்டுவேலை செய்து கொண்டிருந்த மகள் சுவர்ணா, தகப்பனை பார்த்து,
"ஏனப்பா பொய் சொல்லுறீங்கள்? கொழும்பிலை இருக்கிற விமலா உங்கடை பிறவ் தானே! அவவின்ரை மகள் பிருந்தா எங்களுக்கு அக்கா... இதை ஏன் மறைக்கிறீங்கள்?" என்றாள்.

வாசித்த புத்தகத்தை கை நழுவ விட்டபடி கலக்கத்துடன் சோபாவை விட்டெழுந்தான்.

"அப்பா...!"

"என்ன?"

"அவையின்ரை போட்டோ இருக்கா?" கேட்டான் நிகிலன்.

"என்னட்டை ஒண்டுமில்லை, ஹோம்போய் விளையாடினது போதும், போய்க் கொஞ்சநேரம் வெளியிலை விளையாடு!"

"அப்பா, வெளியிலை சினோ தூறுது, போய் விளையாடச் சொல்லுறீங்கள்."

"சரி, அப்ப என்ன எண்டாலும் விளையாடு, போ!"

"படம் வைச்சிருந்தாக் காட்டுங்கோ அப்பா!" கேட்டுக்கொண்டு பக்கத்தில் வந்திருந்தாள் சுவர்ணா.

"அப்பா.. பிறீற!" கெஞ்சினான் நிகிலன்.

"அக்காவைப் பார்க்க ஆசையாயிருக்கு, காட்டுங்கோ அப்பா!" என்றாள் சுவர்ணா.

"அக்காவும் இல்லை, ஆட்டுக்குட்டியும் இல்லை... போங்கோ, போய் வேலையைப் பாருங்கோ!" என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினான் வடிவேல்.

பிள்ளைகள் இருவரும் அவனை விடவில்லை.
"அப்பா காட்டுங்கோ! அப்பா காட்டுங்கோ!" என்று விடாப்பிடியா நின்றார்கள்.

முடியாமல், "அம்மாவுக்குச் சொல்லக்கூடாது...!" என்று இருவரை யும் பார்த்தான்.

"சொல்லமாட்டம் அப்பா, காட்டுங்கோ அப்பா!" இருவரும் அவனைத் திக்குமுக்காட வைக்க,
"சரி, சரி..." என்று புத்தக அலுமாரிக்குள் அடியிலிருந்த பழைய அல்பம் ஒன்றை எடுத்து, அதனுள் மறைத்து வைத்திருந்த விமலாவும் மகளும் நிற்கும் படத்தைக் காட்டினான்.

படம் அழகாக இருந்தது.
"அம்மாவை மாதிரி வடிவா இருக்கிறா! அக்கா எத்தினையாம் வகுப்புப் படிக்கிறா?"

வடிவேலு பதிலேதும் பேசாமல் படத்தை வாங்கி மீண்டும் அல்பத்துள் மறைத்து, இருந்த இடத்தில் வைக்கச்சென்றான்.

--------------------------------

ராகினி பாடசாலையால் வரும் நேரத்துக்கு, அவளை எதிர் பார்த்து வாசலில் சற்றுத் தள்ளியிருந்த இம்பிஸின் முன்னால் காத்து நின்றான் முரளி.

வெவ்வேறு இடங்களுக்குச் செல்லும் பஸ்வண்டிகள் வெவ் வேறாகத் தரித்து நின்றன. பாடசாலை முடிந்து மாணவர்கள் தங்கள் பஸ்வண்டியை நோக்கி விரைவாக வந்த கொண்டிருந்தார்கள்.

பிரிவு பிரிவாக வரும் மாணவமாணவிகளுக்குள் ராகினியைத் தேடியபடி நின்ற முரளி, அவள் வருவது கண்டு, விரைந்து கிட்டச் சென்று, "ஹலோ!" என்றான்.
"என்ன...?" என்று அவனை நோக்கி வந்தாள்.

"வா! காரிலை போவம்!" என்று அழைத்தான் முரளி.

"அண்டைக்கு ஏதோ கனக்கச் சொன்னாய்...!"

"அதெல்லாம் கிடக்கட்டும் வா!"

தன்னுடன் வந்த மாணவிகளைப் போகும்படி சொல்லிவிட்டு, முரளியுடன் கூடச்சென்றாள் ராகினி.
போகும் வழியில் ஐஸ்கடையில் நிறுத்தி இருவரும் ஐஸ் வாங்கிச் சாப்பிட்டார்கள்.

"சனிக்கிழமை பொங்கல்விழாவிலை டான்ஸ் புறோக்கிறாம் இருக்கு, வாறியோ...?" கேட்டாள் ராகினி.

"வாறன்!"

"எனக்கு விருப்பமில்லை, அரங்கேற்றம் முடிஞ்சுது. நிறையப் பள்ளிக்கூடப் பாடங்கள் படிக்க வேணும் எண்டு சொன்னாலும் அம்மா விடாவாம்."

"பழகினனீ, இடைக்கிடை டான்ஸ் செய்தா நல்லதுதானே! அதோடை பரதநாட்டியம் பழகிவிட்டு, அதைத் தொடர்ந்து

செய்யாட்டி இவ்வளவு நாளும் நீ, அப்பா, அம்மா மினக்கட்டது, செலவழித்தது எல்லாத்துக்கும் அர்த்தமில்லையே!"

"அப்ப சின்னனிலை அப்பா, அம்மா பழகச் சொல்லிச்சினம், பழகினன்..."

"நல்லது தானே..."

"ஓகே, இப்ப எனக்குப் படிக்க வேணும், மற்றப் பிள்ளையள் மாதிரி ஒரு வேலைக்குப் படிக்க வேணும்."

"படிக்கிறது தானே!"

"ஒவ்வொரு கிழமையும் மாறிமாறிப் புறோக்கிராம் வரும், எனக்கு றெஸ்றே இல்லை."

"கொஞ்சம் குறைச்சு, இடைக்கிடை டான்ஸ் கொடும். அதோடை நீர் விரும்பிறதையும் படியும். அது சரி, என்ன படிக்க யோசிக்கிறீர்?"

"விருப்பம் டொக்டர்.... ஆனா?"

"என்ன ஆனா....?"

"இனி மார்க்ஸ் கிடைத்து, இடம் கிடைத்து...பார்ப்பம்!"

"நீ நல்ல கெட்டிக்காரி, உனக்குக் கட்டாயம் சான்ஸ் கிடைக்கும். படிச்சிட்டு எங்கடை ஆக்களுக்கு வைத்தியம் செய்!"

"நக்கல் என்ன...?"

"ம்...ம்... நீ நல்லாப் படிச்சு ஒரு நல்ல உத்தியோகம் பார்க்க வேணும், அது என்ரை பெரிய ஆசை... ஆனா..."

"என்ன...?"

"அப்ப நான் எங்கை இருக்கிறனோ தெரியாது!"

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

"என்ரை வாழ்க்கை நிச்சயமில்லாதது தானே."

"எங்கடை வாழ்க்கை மட்டும் நிச்சயமானதே....?"

"அதைச் சொல்லேல்லை."

"அப்ப....?"

"இஞ்சை இருப்பேனோ, ஊருக்கை இருப்பேனோ, ஜெயிலுக்கை செத்துப்போவேனோ...?"

"ஏன்டா இப்பிடி உளறுறாய்?"

"உனக்கு ஜேர்மன் சட்டங்கள் தெரியும்தானே! விசா முடிஞ்சு இருக்கிறன். லோயர் மூலம் அப்பீல்எடுத்தும் வெளிநாட்டலுவலகம் பதில் சொல்லேல்லை."

"பயப்பிடாதை, நான் இருக்கிறன்... ஒண்டும் அப்பிடி நடக்காது." என்ற ராகினியைப் பார்த்தான் முரளி.

மெல்லிய சிரிப்பு அவன் முகத்தில் தோன்றியது. சின்னவள் ராகினி. அவளுக்கு உலகம் தெரியாது. தன்மீது கொண்ட அன்பு மிகுதியால் சொல்கிறாள் என்று நினைத்தான். ராகினியின் வீடு இருக்கும் வீதிக்கு வந்துவிட்டதும், அவளைச் சற்றுத்தூரம் முன்பே இறக்கிவிட்டான். பெற்றோர் கண்ணில் படுவதை அவன் விரும்பவில்லை.

"வீட்டுக்கு முன்னால் விட்டால் குறைஞ்சா போகும்?"

"சீ...சீ..., நான் ராஜன் வீட்டை ஒருக்காப் போக வேணும்."

"ஒவ்வொரு முறையும் உனக்கு ராஜன் ஒரு சாட்டு!" என்றவள், "சனிக்கிழமை மறக்கக்கூடாது, ஓகே." என்று அவன் கையில் செல்லமாகத் தட்டிவிட்டு, காரிலிருந்து இறங்கி நடந்தாள்.

முரளி காரைத்திருப்பி மறுபக்கமாகச் செலுத்த, அங்கு சாரதா நடந்து வருவதைக் கண்டான்.
ராகினி பள்ளிக்கூடப்பையுடன் முரளியின் காரிலிருந்து இறங்கிக் குதூகலமாகப் போவதைக் கண்டு குழம்பிப் போன மனதுடன் வந்தவளிடம்,

"என்ன சாரதாக்கா சுகமா இருக்கிறீங்களே...?" என்று காரை நிறுத்திக் கேட்டான் முரளி.

"ஓமடா, சுகத்துக்கு என்னகுறை? வேலைக்குப் போகேல்லையே?"

"விசாப் பிரச்சினை எண்டதாலை வேலையாலை நிப்பாட்டிப் போட்டாங்கள். றெஸ்றோறன்ற் ஒண்டிலை களவா வேலை செய்யிறன்...."
அப்போ பின்னால் வந்த கார் கோர்ண் அடித்து முரளியைத் துரிதப்படுத்த, "சரியக்கா!" என்று விடை பெற்ற முரளி காரைத் தொடர்ந்து ஓட்டிச் சென்றான்.

'பாவம், நல்ல பெடியன்... அங்கை நாட்டிலை பிரச்சனை, இருக்க முடியாதெண்டு இலட்சக்கணக்கிலை குடுத்து இங்கை வந்தா... இங்கை பிரச்சனையில்லை போகலாம் எண்டிட்டாங்கள். வந்தும் எட்டு வருசத்துக்கு மேலை... இனி என்ன செய்யப்போறான்..?' என்று மனதுக்குள் இரங்கினாள் சாரதா.

'ராகினிக்கும் இவனுக்கும் எத்தினை நாளாப் பழக்கம்? சே..சே..- எங்கையோ கண்ட இடத்திலை ஏத்திக் கொண்டு வந்து விட்டிட்டு போறான் போலை கிடக்கு.... ஆனால் அவள் இறங்கிப் போன விதம் சாதாரணமாத் தெரியேல்லை....!' துள்ளிக் குதுாகலமாகப் போன ராகினியின் நடை இன்னும் சாரதாவின் கண்களில் நிற்க, 'சரி...சரி... வயதுப் பிள்ளையள் என்று நினைத்தவளாய், தன் பாதையில் நடந்தாள்.

-------------------------------

"டொக்டர் ஒரு பிரச்சனையும் இல்லை எண்டிட்டார்தானே.... ஒரு பிள்ளையாவது வேணும்.... எவ்வளவு நல்லாயிருக்கும்.... இப்ப சிலபேர் வாயாலை கேட்கவே தொடங்கியிட்டடினம்...." என்று தான் சொல்ல வந்ததை முடிக்காமல் நிறுத்தினாள் யசோ.

'வெஸ்ற்பாளின் பேப்பரை மேலால் புரட்டி, தலையங்கங்களை வாசித்துக் கொண்டிருந்தான் கோகுலன்.

தோய்க்கிற உடுப்புகளை கையில் திரட்டிக்கொண்டு, மெசினுக்குள் போடப் போக வந்தவள், தன் மனதிலுள்ளதைச் சொன்னதும், அவன் உடனே பதில் சொல்லாமல் அவளைப் பார்த்தான்.

"எனக்கு வருத்தம் எண்டு தெரியாத ஆக்கள் எங்களுக்குப் பிள்ளை இல்லையெண்டு கதைக்கத் தொடங்கியிட்டினம்." என்றவள் பாத்றூமுக்குள் இருந்த மெசினை நோக்கிச் சென்று உடுப்பைத் தோய்க்கப் போட்டாள். அவள் கவலையை உணர்ந்த கோகுலன், ஒருகணம் முகத்தைத் தன்னிரு கைகளாலும் மூடி மூச்சை உள்ளே இழுத்து, சோகத்துக்கு இடம் கொடுக்காத வனாய் பேப்பரை மடித்து மேசையில் போட்டுவிட்டு, எழுந்து போய் பாத்றூம் நிலையில் சாய்ந்து நின்று கதவை ஒரு கையாற் பிடித்து ஆட்டியபடி....
"உனக்கு வருத்தமெண்டு ஆர் சொன்னது...?"

"எனக்கு வருத்தம் தானேயப்பா!"

"என்ன வருத்தம்....?"

"நீங்கள் ஆம்பிளை சமாளிப்பீங்கள்.... ஏதோ சமாதானம் செய்து கொள்ளுவீங்கள்.... ஆனால் எனக்கு உண்மையிலை...." அவள் கண்கள் கலங்கின.

"யசோ! என்ரை குஞ்சு! சீ... ஆரும் என்னத்தையும் கதைக்கட்டன் அழாதை! வாழ்க்கையிலை எத்தினையோ இருக்கு ஒண்டில்லாட்டி இன்னொண்டு... பிளீஸ்! உலகம் பெரிசு.... அழாதை என்ரை இராசாத்தி!" என்றவன், அருகில் நடந்து அவளைத் தன் மார்போடு அணைத்துக் கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

"நீங்கள் என்ன சொன்னாலும், நான் செய்தது பிழை!"

"என்ன...?"

"உங்களை வாழவிடேல்லை.... ஆரையாவது கட்டி எவ்வளவோ சந்தோஷமாக இருக்க வேண்டிய நீங்கள், நோய்க்காரி என்னைக் கட்டிப்போட்டு...."

"யசோ! இன்னொருக்கா இப்பிடிச் சொன்னால் எனக்குப் பொல்லாத கோபம் வரும்..." என்று அவள் முகத்தைத் திருப்பி, அவளை நேரே பார்த்தவன்,
"நீ என்னைக் கட்டேல்லை, நான் உன்னைக் கட்டினனான்... விளங்குதே! எனக்கு நீ மகாராணி. இதை நீ புரிஞ்சு கொள்ள வேணும், அடுத்தவன் என்ன எண்டாலும் கதைக்கலாம். என் வீடு, என் உலகம்..... இங்கை நிம்மதி, சந்தோசம் இரண்டுமே இருக்கு! இது புரியாதவை ஏதும் கதைச்சால் கதைக்கட்டுமே!"

"இல்லை அத்தான்....!"

"என்ன...?"

"என்னைப் பற்றி யோசிக்காதேங்கோ, ஒரு பிள்ளை பெறுவம்."

"வேண்டாம்."

"டொக்டர் சொல்லியிருக்கிறார்தானே.... நம்பேல்லையா?"

"நம்பிறன், கொஞ்சக்காலம் போகட்டும்... எனக்கு நீ சுகமாக இருக்கவேணும்... மற்றதெல்லாம் பிறகு."

"பிள்ளை ஒண்டு இருந்தால்தான் சிலர் ஆக்களையே மதிக்கினம். நாங்களும் ஒரு மனிசர், எங்கடை மனமும் கவலைப்படும் எண்டு நினைக்காமல் சிலசனங்கள் கதைக்கிற கதை...!"

"யசோ! உலகம் பென்னாம் பெரிசடி, இதிலை இந்த மனிசர் சிலர்... நீ சொன்னியே... அவை எந்த மூலைக்கு... மற்றவையை நினைச்சுப் பார்! எவ்வளவு நல்ல மனிசர்கள், உயர்ந்த குணம் படைச்சவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நீ...நீ சந்திக்கிற ஒண்டு இரண்டு பேரை மட்டும் வைச்சுக் கொண்டு இதுதான் உலகம் எண்டு நினைக்கிறாய்...."

பவுடரை நிரப்பி, மெசினை இயக்கிவிட்டு, கையைக் கழுவிய யசோவிடம், "சூரியாவின் கடிதம் கொழும்பிலிருந்து வந்தது, வாசித்தனிதானே!" என்றான் கோகுலன்.

"ம்" என்று ஆமோதித்தாள்.

"ஆறாம் வகுப்பில் முதலாம்பிள்ளை. சர்மினியின்ரை கடிதம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது. வார்த்தைக்கு வார்த்தை அம்மா அம்மா... என்று உன்னை அழைத்து எழுதியிருக்கிறாள்..."

"ஓகே!" என்று அவன் நெஞ்சில் சாய்ந்தாள் யசோ.

----------------------

தொலைபேசிமணி அடித்தது.
மனோகரி எழுந்து 'இந்த நேரத்தில் ஆர் எடுக்கிறது...?' என்று புறுபுறுத்தவளாய், லைற்றைப் போட்டு ஹோலுக்குள் இருந்த தொலைபேசியை எடுக்க நித்திரை வெறியில் நடக்க, மணியின் ஒலியும் ஓய்ந்தது.

"சிக்..." சினத்தைக் கொட்டிவிட்டு மீண்டும் வந்து படுத்தாள்.
இரவு நேரம் இரண்டு மணி.

"ஆர் மனோ...?" போர்வையை விலத்திக் கேட்டான் வடிவேலு.

"கட்டாயிட்டுது, அவள்தான் கனடாவுக்குப் போட்டாள் போலை..!"

'அவள்' என்று விமலாவைத்தான் குறிப்பிடுகிறாள் என்று புரிந்ததும், 'எப்பிடிச் சொன்னாலும் இந்த மோட்டு ஜென்மத்துக்கு புரியாது என்று நினைத்தவன், நித்திரையைக் குழப்பாமல் படுக்க முனைந்தான்.

மீண்டும் தொலைபேசி மணி எழுப்பியது. வடிவேல் எழுந்து சென்று எடுத்தான்.

விமலாவின் மாமா கனடாவிலிருந்து கதைத்தார்.
"அட கடவுளே...! சீ..." என்று கவலையுடன் அவர் சொன்னதைக் கேட்டுவிட்டு,
"சரி...சரி.. நான் எடுத்துக் கதைக்கிறன்." என்று தொலைபேசியை வைத்துவிட்டு மீண்டும் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டான்.

சிறிதுநேரம் மௌனமாக இருந்தது.
"என்ன...?" என்று கேட்டாள் நித்திரை போல இருந்த மனோகரி.

"விமலாவும் பிள்ளையும் பிடிபட்டுப் போச்சினம். திருப்பிச் சிலோனுக்கு அனுப்பிப் போட்டாங்களாம்."

"மூதேவி பிடிச்சவளுக்கு இதுவும்வேணும், இன்னும்வேணும்."

வடிவேலு போர்வையைத் தூக்கி எறிந்து போட்டு, பாய்ந்து வந்து அவளைஃப் பிடித்து உலுப்ப...
"என்ன...! என்னைக் கொல்லப் போறியோ... கொல்லு!" அவளும் கோபம் கொப்பளிக்க உறுமினாள்.

"சனியன்..." என்று தன் ஆத்திரத்தைக் கொட்டியவாறு, லைற்றைப் போட்டவிட்டு,
"ஏன் இப்பிடிச் சொல்லுறாய்...? விமலாவுக்கும் உனக்கும் என்ன பிரச்சனை? மூதேவி எண்டு எப்பிடிச் சொல்லுவாய்? முன்பின் தெரியாத ஒருத்தி... அதுகளின்ரை நிலைமை தெரிந்து கொண்டு, கொழும்பிலை போய் அதுகள் என்ன கஷ்டப்படப் போகுதுகளோ என்று யோசிக்காமல் என்ன திமிர்க்கதை கதைக்கிறாய்...?"

"ஓ! பின்னை என்னண்டு சொல்லுறது? அவளின்ரை கதை எனக்குத் தேவையில்லை, மனிசர் எண்டா ஒருக்காச் சொன்னாக் கேக்கவேணும்."

"பிளீஸ் சத்தம் போடாதை, நேரத்தைப் பார்! மெதுவாகக்கதை, பிள்ளையள் நித்திரையாக் கிடக்கு!"

"பெரிய அக்கறையுள்ளவர் கதைக்கிறார்.... பிள்ளையள் நித்திரை யாக் கிடக்காம். ஆரோ ஒருத்திக்காக சாமத்திலை என்னோடை சண்டைக்கு வாறீங்கள்.

"நானே சண்டைக்கு வந்தனான்....? என்ன கதைக்கிறாய்... ரெலிபோன் கதைச்சிட்டு வந்து படுக்க, "என்னெண்டு கேக்கிறாய் பதில் சொன்னா மூதேவிக்கு வேணுமெண்டு நீ தானே தொடங்கினனி!"

"மூதேவி....மூதேவி....மூதேவி.... இப்பவும் சொல்லுவன், அவள் எனக்கு மூதேவிதான்." சீறினாள் மனோகரி.

"இப்பிடிச் சொல்லாதை... தயவுசெய்து சொல்லாதை!"

"சொல்லேல்லை.... அவளை நான் அவள் என்று சொல்லாமல் விமலாராணி எண்டு சொல்லுறன். மூதேவி இல்லை சீதேவி எண்டு சொல்லுறன்..." என்றவள் மீண்டும் படுக்கையில் சரிந்தபடி, "இனிமேல் இஞ்சை ரெலிபோன் எடுக்கக்கூடாது."

விரக்தியாகச் சிரித்த வடிவேலு பெருமூச்சொன்றை விட்டபடி வெளியே சென்று ஹோலுக்குள் இருந்த சோபாவில் சோகம் கவிழ தொப்பென்று அமர்ந்தான்.

பாவம் விமலாவும் பிருந்தாவும் அனாதைகளாகக் கொழும்பில் என்னபாடு படுகிறார்களோ...? வடிவேலுவின் மனம் துடித்தது.

செல்லமாக வளர்ந்த அவள், வாழாவெட்டியாக அடுத்தவரிடம் உதவி எதிர்பார்த்து நிற்கும் கோலம் அவன் கண்கள் முன் வந்தது.

"என்ன செய்ய... ஏன் இப்படி...? பெருமூச்சு நெஞ்சிலிருந்து அனலாய்க் கக்க... கண்களை மூடி யோசித்துக்கொண்டிருந்தான்.

---------------------------

பொங்கல்விழா வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. தமிழ் இனிமை நெஞ்சில் பால் சிந்த, அருமைமிகு கவியரங்கம் ஒன்று பரதனின் தலைமையில் நடந்தது.

மழலைகளின் பாட்டு, பேச்சு, ஆட்டம் என்றும் வளர்ந்த பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகள், விடுதலைப்படைப்புக்கள், பரத நாட்டியங்கள் என்று பலவும் நிகழ்ந்தன.

ராகினியின் கண்களில் முரளி படவில்லை. 'வாறன் எண்டு சொன்னான்' என்று மனதுக்குள் நினைத்தபடி நாலாபக்கமும் மண்டபத்தினுள் பார்வையை ஓட்டியபடிநடனம் செய்யத் தயாராக வெளிக்கிட்டு மேடையின் ஒரு மூலையில் நின்றாள்.

அடுத்தது அவள் நிகழ்ச்சி.
'முரளி வாடா..! என்று தனக்குள் அழைத்தபடி நடக்கும் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அடிமண்டபத்தில் ஒரு மூலையில் இளைஞர்கள் சிலருக்குள் ஓர் கை உயர்ந்து ஆட... ராகினியின் கண்களில் ஒளி துளிர்விட்டது. ஓ முரளி! சந்தோசம் மின்சாரமாய் உடலெங்கும் பாய, உற்சாகமாக நின்ற மகளைப் பார்த்த நீலாவுக்கு ஆச்சரியம் கேள்வி எழுப்பியது.

சோர்ந்துபோய் நின்றவள் மனம் சரியில்லை என்று அலுத்துக் கொண்டு முகத்தை விடியாததுபோல வைத்திருந்தவள், இப்ப ஏழு சூரியன் ஒன்றாய் உதித்தது போல... என்று வியந்தபடி மகளின் அலங்காரத்தைச் சரிப்படுத்தினாள் நீலா.

அறிவிப்பாளர் அறிவிக்க ராகினியின் தனிநடனம் இடம்பெற்றது. தூர நின்று அவள் நடனத்தையும் அந்தப்பெரிய விழாவில் அவளுக்குக் கிடைக்கும் பாராட்டுக்களையும் வியந்துரைகளையும் இரசித்து அனுபவித்தவாறு நின்றவனுக்கு, முன்னாலிருந்த ஒருவன் வாய்க்குள் விரலை விட்டு விசிலடித்து ஆரவாரித்துவிட்டு தன் பக்கத்தில் நின்றவனைக் கையால் தட்டி தன் வீரத்தை விசாலப்படுத்த, அவனை முரளி தொட்டு,
"அண்ணைக்கு விசிலடிக்க ஆசையெண்டா வெளியிலை வாறது... என்ரை அடி எப்படியெண்டு பார்க்கலாம்." என்றதும், விசில் அடித்தவன் சற்று சினக்க, பக்கத்தில் நின்றவன் அவனை அடக்கி, "விழாவுக்கு வந்தால் வந்த வேலையைப் பார்த்திட்டுப் போ!" என்று எச்சரிக்க அமைதி பிறந்தது.

நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.
பரதநாட்டியம் ஆடிய பிள்ளைகளக்கு பரதன் பரிசில்கள் வழங்கினான். வாங்கிக்கொண்டு வந்த ராகினி நேராகத் தனது இடத்துக்குப் போகாமல் முரளி நின்ற இடத்துக்குச் சென்று அவன் கையில் பரிசிலைக் கொடுத்துவிட்டுப் போனதைப் பலர் பார்க்கவில்லை. ஆனால் சாரதாவின் கண்களில் பட்டுவிட்டது.

பரிசிலை மீண்டும் ராகினிக்கு அவள் தம்பியாரிடம் கொடுத்துக் கிடைக்கச் செய்துவிட்டான் முரளி.

சாரதாவுக்கு இது ஒரு புதிராக இருந்தது. 'ஏன் ராகினி இப்பிடிச் செய்தவள்....? ஒருவேளை... சீ.. ராகினி அப்பிடியான பிள்ளை

இல்லை' என்று நினைத்துக்கொண்டு விழாவில் மனதைச் செலுத்தினாள்.

---------------------------

கனடாப்பயணம் தடைப்பட்ட நிலையில் முதல் தங்கியிருந்த லொட்ஜில் விமலாவும் மகளும் தங்கியிருந்தனர்.

ஒருநாள் விமலா தன் நண்பி வதனியைச் சந்தித்தாள். இருவரும் தங்கள் கதைகளைப் பரிமாறிக் கொண்டனர். நண்பியின் கண்ணீர்க்கதை வதனியின் மனதை உருக வைத்தது. தன்னுடன் வந்து இருக்கும்படி அழைத்துக்கொண்டு போனாள்.

சிறிய ஒழுங்கையில் பலதொடர்வீடுகளில் ஒன்று வதனியின் வீடு. இரண்டு அறைகள், ஒரு விறாந்தை, சிறிய சமையலறை, குளியலறைகளைக் கொண்ட சிறிய வீடு அது. தண்ணீர்த் தட்டுப்பாடு... வீட்டுக்குச் சற்றுத்தூரம் தள்ளி ஒழுங்கையின் கரையில் இருக்கும் குழாயில் வரிசையில் நின்று தண்ணீர் எடுக்க வேண்டும். அந்த வீதியில் இருக்கும் வீடுகள் யாவற்றுக்கும் இது பொதுவாக இருந்தது. இராப்பகலாக பைப்படியில் கூட்டமும் வீதியில் சனநடமாட்டமும் இருக்கும்.

வதனியின் கணவன் வன்னியில் வைத்தியசாலை ஒன்றில் வேலை புரிந்து வருகிறார். அவளும் ஒரு வயதுக் குழந்தையும் அவள் தாயாரும் அந்த வீட்டில் இருந்தனர். வதனி கொழும்பில் ஒரு பாடசாலையில் ஆசிரியையாகக் கடமை புரிந்தாள்.

வதனியின் அப்பா, சகோதரங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார் கள். குடும்பம் குலைந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக வாழும் தமிழர்களின் நிலைக்கு உதாரணமாக வதனியும் இருப்பதாக விமலா நினைத்து வருந்தியவள், தனக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் பிரிவுகள், கஸ்டங்கள் இருக்கிறது என்பதை உணர்ந்து மனதைத் தேற்றினாள்.

அங்குள்ள பாடசாலை ஒன்றில் பிருந்தாவைச் சேர்த்துப் படிக்க விட்டாள் விமலா.

அதிகாலை எழுந்து, சமைத்து, பிள்ளைக்கு வேண்டிய தேவை களை முடித்து பள்ளிக்கூடம் போகும் வதனி பிற்பகல் வந்து பிள்ளையைப் பார்ப்பதும் கடை, சந்தை என்று சென்று வீட்டுக்கு தேவையானதை வாங்குவதும் பிறகு, இரவுச்சமையல், தண்ணீர் சேகரித்தல், சட்டிபானை கழுவுதல், உடுப்புத்தோய்த்தல் என்று வேலைகள் வளர்ந்துகொண்டே போக, படுக்க இரவு நேரம் பன்னிரெண்டைத் தாண்டிவிடும். இடையில் பிள்ளை எழுந்து அழும்.... இப்படிக் குழப்பங்கள். கணவன் அங்கு தனிய... என்ன செய்கின்றாரோ என்ற ஏக்கம். விமலா வந்த பிறகு வதனியின் பாதிக்கு மேலான வேலைகளைத் தனதாக்கிக் கொண்டாள்.

வதனியின் தாயார் வயதானவர். கால் நடப்பது கஷ்டம், இருந்த இடத்தில் பிள்ளையைப் பார்ப்பார், தன் அலுவல்களைக் கவனிப்பார். அவ்வளவுதான் அவரால் முடியும்.

தொலைபேசி இருந்தது. கனடாவிலிருந்து மாமா இடைக்கிடை எடுத்து விமலாவுடன் கதைப்பார். காசும் செலவுக்கு அனுப்பி வைத்தார்.

-----------------------

கோகுலன், யசோ வீட்டுக்கு வடிவேல் வந்தான். ஜானகி வீட்டிலி ருந்து சற்றுத் தள்ளி அதே வீதியில் அவர்கள் வீடு இருந்தது.
"வா வடிவேல்!" என்று கோகுலனும், "வாங்கோ அண்ணை!" என்று யசோவும் அவனை வரவேற்றனர்.

யசோ தேனீர் தயாரிக்கச் சமையலறைக்குச் செல்ல,
"என்னடா சோகமா இருக்கிறாய்? விமலா எங்கை இப்ப...?" என்று கோகுலன் தன் நண்பனை விசாரித்தான்.

வடிவேல் கோகுலனுடன் மனம் விட்டுக் கதைப்பவன், குடும்பமாக வந்தால் தன் பிரச்சனையைச் சொல்ல முடியாது என்பதால் தனியாக வந்திருந்தான். கோகுலனே அவனின் முகவாட்டத்தைக் கண்டு விமலா பற்றிக் கேட்டதும் நிலைமையை எடுத்துக் கூறினான்.

விமலாவும் மகள் பிருந்தாவும் கொழும்பு வந்து, கனடா போக முயற்சித்து இடையில் பிடிபட்டுத் திரும்பி இப்போ வதனி வீட்டில் இருப்பதும் மனோகரிக்கும் தனக்கும் விமலாவின் பேச்சால் தினமும் நடக்கும் ஓயாத யுத்தத்தையும் சொல்லி முடித்தான்.

தேனீர் கொண்டுவந்த யசோவும் அதனைப் பரிமாறிவிட்டு, வடிவேலுவின் சங்கடமான நிலையைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"நான் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் நிக்கிறன்." என்ற வடிவேல், "விட்ட குடியை மீண்டும் தொடங்கினால் என்னெண்டு கூடத் தோன்றுது. சத்தியம் பண்ணிக் குடுத்ததிலை குடிக்காமல் இருக்கிறனென்று அவ நினைக்கிறா புருஷனின் மனோநிலையை புரிஞ்சுகொள்ளத் தெரியாத மனிசிக்கு சத்தியமும் மண்ணாங் கட்டியும் எண்டிட்டு போத்திலைத் திறந்து போடுவன், பிள்ளை யளுக்காகப் பாக்கிறன். அதுகள் பாவங்கள்... அதுகளுக்கு முன்னுக்கு இவள் என்னைக் கேட்கிற கேள்வியடா...! சீ... ஏன் உயிரோடை இருக்கிறன் என்று கூட நினைப்பன்."

"வடிவேலண்ணை! ஏன் அப்பிடி நினைக்கிறீங்கள்? உங்களை நம்பித்தானே எல்லாரும் இருக்கினம், மனதைச் சோர விடாதேங்கோ.... கனடா போனால் அங்கை விமலாக்கா நல்லா இருக்கலாம் தானே. அதுவரை சமாளியுங்கோ!"

"காசு ஏதும் அனுப்பிறதெண்டாச் சொல்லு!" என்ற கோகுலன், கொழும்பிலை எங்கை இருக்கினம், பிருந்தா எந்தப்பள்ளிக்கூடம் போகிறாள் என்று விசாரித்தான்.
"சூரியா ரெலிபோன் கதைக்கேக்கை தங்கடை வகுப்பிலை ஒரு புதுப்பிள்ளை இடையிலை வந்து சேர்ந்திருக்கிறா... படிப்புகள் அவவுக்குக் கொஞ்சம் விளங்காமல் கஸ்டப்படுகிறா... பாவமாக் கிடக்கு என்று சொன்னவன்.... அப்ப அது உன்ரை மகள் தானோ தெரியேல்லை." என்றான்.

"பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காப் போக முடியாமல், தெரியும்தானே அங்கையும் இஞ்சையும் அலைஞ்சதாலை படிப்புகளும் அப்பிடி இப்பிடியாப் போச்சு..." என்ற வடிவேல்,
"சூரியா எண்டாயடாப்பா, அது ஆர் பெடியன்?" என்றான்.

"எங்களுக்கு வேண்டிய பெடியன். போடிங்கிலை இருக்கிறான்." என்று சுருக்கமாகச் சொன்னான் கோகுலன்.

"வேண்டிய பெடியன் எண்டா...?" விபரமாகச் சொல்ல யசோவோ கோகுலனோ விரும்பவில்லை என்றதைப் புரிந்து கொண்ட வடிவேல் அதைப்பற்றி மேலும் கேட்காமல்,
"விமலா தங்களை இஞ்சை கூப்பிடட்டாம், பிருந்தாவும் வளர அவளுக்கு யோசினையாக்கிடக்கு... தனக்கு ஏதுமெண்டால் பிள்ளை தனிச்சுப்போம் எண்ட பலவிதமா நினைக்கிறாள். ரெலிபோனில் ஒரே அழுகை...."

"பொல்லாத சிக்கல்... திடீரென்று ஒண்டும் செய்யேலாது, இஞ்சை விமலா வாறது நல்லதாப்படேல்லை...." என்று கோகுலன் இழுக்க யசோ குறுக்கிட்டாள்.

"ஏனப்பிடிச் சொல்லுறீங்கள்....? தகப்பன் இங்கை இருக்கேக்கை பிள்ளையும் இஞ்சை இருந்தால் நல்லது எண்டு விமலா நினைக்கிறது சரி எண்டுதான் நான் சொல்லுவன்."

"ம்...ம்.... மனோவோடை கஸ்டம். இப்பவே தானும் பிள்ளையளும் எங்கையாவது விழுந்து சாகப் போவதாக எரிமலையாக வெடிக்கிறாள். அதுகள் ஜேர்மனிக்கு வந்தால் அவ்வளவுதான்.... வேண்டாம்." என்று வடிவேலு மறுத்துரைத்தான்.

அப்போ கோகுலன் யோசனையுடன்,
"இல்லையடா வடிவேல், விமலாவையும் பிள்ளையையும் ஜேர்மனிக்குக் கூப்பிடு! கொஞ்சம் தூரமா எங்கையேன் பதியலாம்... இல்லாட்டி லண்டன் அப்பிடியெண்டாலும் பறவாயில்லை. அந்தரம் அவசரத்துக்கு உதவியாய் இருக்கும். கனடாவிலை அதுகள் அனாதையள் மாதிரி.... மாமாவை நம்பிப்போய்... இனி மாமி, பிள்ளையள் அங்கை என்ன பிடுங்குப்பாடோ....யோசி! யோசிச்சுச் செய்! எனக்கெண்டா ஜேர்மனிக்கு வாறது தான் நல்லதெண்டு தோன்றுது." என்றான்.

வடிவேலுவுக்கு மேலும் குழப்பம்தான் கூடியது.
"இப்ப எத்தினை மணி...? இரவு ஒன்பதரை பத்தாகுது.. எடுத்துக் கதையன்."

"சீ... வேண்டாம்."
"டேய்! உன்ரை கஷ்டம் எனக்குத் தெரியும்... எடு ரெலிபோனை! ஏன் படுத்திருப்பினம் எண்டு யோசிக்கிறியே?"

"இல்லை, அங்கை தண்ணி பிடிச்சு தொட்டியள் நிரப்ப பன்னிரெண்டு ஒரு மணியாகும்." என்று வடிவேலு இழுக்க, யசோ ரெலிபோனை எடுத்து, "சொல்லுங்கோ அண்ணை நம்பரை!" என்று சொல்ல, வடிவேலுவும் பொக்கற்றுக்குள் இருந்த துண்டில் குறித்து வைத்திருந்த நம்பர்களைச் சொன்னான்.

"என்கேஜ்" என்ற யசோ, மீண்டும் ஒருமுறை நம்பர்களை அழுத்தி னாள். "அடிக்குது..." என்று வடிவேலை அழைக்க, அவன் விரைந்து வந்து, "ஹலோ" என்றான்.
"நான் வடிவேல் ஜேர்மனியிலையிருந்து, விமலா நிற்கிறாவோ.."
"ஓம்!" என்று வதனி விமலாவைக் கூப்பிட்டுக் கொடுக்க, அவளும் பிருந்தாவும் வடிவேலுடன் கதைத்தார்கள். அவனுக்கு இடையூறு இல்லாமல் கோகுலனும் யசோவும் பக்கத்திலிருந்த அறைக்குட் போய், அங்கிருந்து வடிவேலுவின் சங்கடமான நிலைமைக்கு என்ன செய்யலாமென்று யோசித்தபடி இருக்க, தொலைபேசி உரையாடலை முடித்துக்கொண்டு வடிவேல் வந்தான்.

"மாமனுக்குக் கனக்க லொஸ்றாப் போச்சு... இரண்டாந்தரம் றை பண்ண யோசிக்கிறார், தான் மாட்டன் எண்டு சொல்லிப் போட்டாவாம் விமலா." என்றவன் இப்போதைக்குக் கொழும்பிலை இருக்கலாம் எண்டு சொல்லுறா.... வதனியும் அம்மாவும் நல்ல சனங்களாம், ஒரு கஸ்டமும் இல்லையாம்... பாப்பம்... வேறை என்ன செய்யிறது..?" என்றான் வடிவேல் பாதிக்குழப்பம் நிறைந்த நிலையில்.

"கொஞ்சநாளைக்கு இருக்கட்டன்... பிறகு பார்த்துச் செய்யலாம்." என்று யசோ சொன்னாள். அப்போ கோகுலன் வடிவேலைப் பார்த்துச் சொன்னான்,
"நீ ரெலிபோன் கதைக்கிறதெண்டால் இங்கை வந்து கதைக்கலாம். அவையும் ஏதும் சொல்லுறதெண்டால் இங்கை எடுத்துச் சொன்னால் நாங்கள் உனக்குச் சொல்லுவம்தானே! மற்றது காசு அனுப்பிறதெண்டால் என்னட்டைத்தா! நான் அனுப்பி விடுவன்."

"ஓமண்ணை! மனோ அக்காவும் குழம்பாமல் இருக்கட்டும். இல்லாட்டி அவவும் யோசிப்பா" என்றாள் யசோ.

"சரி, போட்டுவாறன்... பிறகு சந்திப்பம்." என்று வடிவேலு விடை பெற்றான்.

தொலைபேசி மணி ஒலித்தது.
யசோ எடுத்தாள்.
"சாரதாக்கா சொல்லுங்கோ!"

"எடியே யசோ! ஒரு கதையெல்லே...!" என்று தொடங்கி, "ராகினியின் போக்கிலை ஒரு சேஞ் தெரியுது. சரியாத் தெரியாமல் கதைக்கக்கூடாது."

"ஏன் ஏதும் பிரச்சனையே...?"

"இல்லை....முரளியும் இவளும் ஒண்டாப் போறதும் கதைக்கிறதும்.. தாய், தேப்பன் இவளின்ரை எதிர்காலத்தைப் பற்றிப் பெரிசா யோசிச்சுக் கொண்டு இருக்குதுகள். இவள் சின்னப்பிள்ளை தெரியாதே...?"

"நானும் கண்டனான்... முரளி நல்ல பிள்ளை... வேறையும் ஆக்கள் அப்பிடியும் இப்பிடியுமாச் சேர்த்துக் கதைக்கினம். கொஞ்சம் கட்டுப்பாடா இருக்கச்சொல்லி ராகினிக்கும் சொன்னா நல்லது."

"யசோ! அண்ணையிட்டைப்போய் இதை என்னண்டு சொல்லுறது? அதுதான் கோகுலன் அண்ணையோடை நல்லாப் பழகிறவர்... அவர் சொன்னா அண்ணை கோவிக்காமல் கேட்கும்." என்று சாரதா சொல்ல, "அவரிட்டைக் குடுக்கிறன்" என்று கோகுலனைக் கூப்பிட்டு தொலைபேசியைக் கொடுத்தாள்.

கோகுலன் சாரதாவுடன் தொடர்ந்து கதைத்துவிட்டு, "ஜேர்மனியில் பிறந்து வளரும் எங்கடை பிள்ளையளுக்கு, நம் கலாச்சாரங்களைப் பக்குவமாகப் புரிய வைக்க வேணும். வஞ்சகமில்லாமல் பழகுங்கள்.... நாங்கள் அதைப் பெரிசு படுத்தக்கூடாது. எண்டாலும் ஒருக்கா தாமோதரமண்ணையோடை கதைக்கிறன்." என்று தொலைபேசியை வைத்துவிட்டு வர, செற்றியிலிருந்த யசோ ராகினி பற்றிய கதையை எண்ணி மெல்லச் சிரித்தாள்.

கோகுலன் தலையையாட்டி, "சாரதாக்காவுக்கும் வேலையில்லை, சின்னுஞ்சிறிதுகள் விளையாட்டாச் செய்யிறதைப் பெரிசுபடுத்திக்

கொண்டு...." என்று தொடங்க, "ம்...ம்..." என்று தலையாட்டினாள் யசோ.

"முரளியோடை அவள் பழகிறதைப் பார்த்தீங்கள் எண்டால் தெரியும். சாரதாக்கா சொல்லுறதுக்குக் காரணமில்லாமலில்லை. அவனை அவள் விரும்பிறாள்."

"என்னப்பா, சின்னப்பிள்ளை அவள்.....!"

"என்ன சின்னப்பிள்ளை....? லைசன்ஸ் எடுக்கப்போறாள்."

"எண்டாலும் என்னாலை நம்பமுடியாது. ராகினி அப்படிப்பட்ட பிள்ளை இல்லை. அதோடை அவன் முரளி நல்ல பெடியன்... வேலையாலும் நிப்பாட்டிப் போட்டாங்கள். விசா கொடுக்கேல்லை எப்ப பிடிச்சு அனுப்பப் போறாங்களோ எண்ட பயத்திலை இருக்கிறான். அவனுக்குச் சரியான கஷ்டம். அவனைப் போய் எப்பிடி லவ் பண்ணுறான் எண்டு சொல்லுறீங்கள்!"

"காதலுக்குக் கண்ணில்லையப்பா!"

"யசோ! தாமோதரமண்ணையும் நீலாக்காவும் ராகினிக்காக எவ்வளவு கஸ்டப்படுகினம் தெரியுமே! எவ்வளவு காசைச் செலவழிச்சு... அவள் படிக்கவேணும்... பெரிய உத்தியோகம் பார்க்கவேணும் எண்டெல்லாம் கற்பனை செய்து கொண்டு இருக்கினம்."

"பெற்றோரின் நினைப்பு எந்தக்காலத்திலை தான் பிள்ளையளு க்குப் புரிஞ்சிருக்கு? பெற்றதுகள் நல்லதைத்தான் நினைக்குங்கள் ஆனால் பிள்ளையள் வயதுக்கு வந்திட்டால் குழம்பிப் போயிடுங்கள். சில பிள்ளையள் இருக்கிறார்கள் இந்தப் பருவக் குழப்பத்தை எதிர்த்து முன்னேறியிருக்கிறார்கள். பலரால் அப்பிடி முடியேல்லை." என்றான் கோகுலன்.

சிறிதுநேரம் யோசனையுடன் கழிய, யசோ சொன்னாள்.
"எதுக்கும் தாமோதரமண்ணைக்கு மேலாலை சொல்லுங்கோ... சீரியஸா ஒண்டும் மகளோடை கதைக்காமல் கவனமாக இருப்பினம், ரெலிபோனிலை சொல்லுங்கோ!"

கோகுலன் தொலைபேசியை எடுத்து நம்பர்களை அழுத்தினான்.

"ஹலோ! அண்ணை என்ன நடக்குது?" என்று தொடங்கி சிறிது நேரம் பலதையும் கதைத்துவிட்டு,
"ஒரு விடயம்...... சீரியஸா யோசிக்காதேங்கோ......!" என்று நிறுத்தினான்.

"என்னடா கோகுலன்..... ஏதும் பிரச்சனையே?"

"நான் கேள்விப்பட்டதை உங்களுக்குத் தெரியப்படுத்தவேணும், ஆனால் பெரிசுபடுத்தி வீணா ஒண்டும் செய்யக்கூடாது."

"டேய்... தாமோதரமண்ணையை உனக்குத் தெரியும்தானே. ஆரோடையாவது சண்டை சச்சரவு என்று போறனானே... சரி விசயத்தைச் சொல்லு!"

"ராகினி எங்கை....?"

"வெளியிலை ஒரு சிநேகிதி வீட்டை போட்டாள்."

"அவளைக் கொஞ்சம் கட்டுப்பாடா வைச்சிருங்கோ."

"ஏன்... ஏதும் பிரச்சனையே? ஒழிக்காமல் சொல்லடா கோகுலன்!"

கோகுலன் யசோவைப் பார்த்தான். அவள் சொல்லும்படி தலையை ஆட்டி அவனைத் துரிதப்படுத்தினாள்.

"பிரச்சனை ஒண்டுமில்லை... முரளியோடை பழகிறாளாம், இதைச் சனங்கள் வித்தியாசமாக் கதைக்கப் பார்க்கினம்... நீங்கள் கவனமா இருங்கோ!"

"ஆர் முரளி..? தங்கச்சியவை இருக்கிற பில்டிங்கிலை இருக்கிற பெடியனோ....?" அவன் அப்பிடிப்பட்ட பெடியனில்லை. அதோடை ராகினியைத் தெரியும்தானே... அவள் ஒரே பிஸி... நேரமில்லாமல் திரியிறாள்.... நான் நினைக்கேல்லை...."

"அண்ணை, நான் உங்களோடை நெருங்கிப் பழகிறதாலை கேள்விப்பட்டதைத் தெரியப்படுத்திறன். வெளிநாட்டிலை பலதும் நடக்குது. பதினெட்டைத் தாண்டினால் சில பிள்ளையளைக் கையிலையும் பிடிக்கமுடியாது. தோளுக்கு மிஞ்சினால் தோழன்." என்று சொல்ல வேண்டியதை கோகுலன் சொல்லி முடித்தான்.

நான் வீட்டிலை நிக்கிறது குறைவு.... உனக்குத் தெரியும்தானே! விடிஞ்சால் பொழுதுபட்டால் கடை... அதுஇதெண்டு ஓடித் திரிவன். சரி....நான் பார்க்கிறன்.... வேறை என்ன...? நான் கேட்டதா யசோவுக்கும் சொல்லன்!"

"ஓமண்ணை!" என்று தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தான்.

---

ஒருநாள்....
இரவு றெஸ்ரோறன்ற் வேலையால் வந்த பஞ்சியில் கட்டிலில் படுத்திருந்தபடி படக்கசற் ஒன்று வீடியோவில் ஓட, அதைப் பார்த்துக்கொண்டு படுத்திருந்தான் முரளி.

வீட்டுக்கதவு மணி அடித்தது.
"யாரடா இந்த வெள்ளெண்ண..." என்று நினைத்தவனாய் மேலே சேட் ஒன்றைத் தூக்கிக் கொழுவியபடி, கதவைத் திறந்தான்.

"என்னடா இன்னும் படுத்திருக்கிறாய்?" கேட்டவாறே ராகினி உள்ளே வந்தாள்.

"இராத்திரி வேலை கூட, இரண்டுமணி வீட்டை வரேக்கை." என்றவன் அவளை இருக்கும்படி கூறிவிட்டு, முகம் கழுவித் துடைத்து வந்தான்.

கட்டிலில் ஏறிப் படுத்திருந்தாள் ராகினி.

"எழும்பிக் கதிரையிலை இரன்.... வடிவா வெளிக்கிட்டுவந்து ஊத்தை பெட்டிலை படுத்திருக்கிறாய்... எழும்பு பிளீஸ்!" என்ற முரளியின் மனதில் பயவுணர்வு இடித்தது.

"எனக்குப் பஞ்சியாக்கிடக்கு... படுக்கிறன், தேத்தண்ணி போட்டுக் கொண்டு வா! கேக் கொண்டு வந்தனான்... சாப்பிடுவம்."

"கேக் கொண்டு வந்தனியோ... என்ன விசேடம்...?"

"இண்டைக்கு எனக்கு பேத்டே..."

"சும்மா சொல்லுறாய்."

"உண்மையாத்தான்."

"இண்டைக்கு மார்ச் முதலாம் திகதி......"

"ஓ! முதலாம்திகதி!" என்று கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள்.

"சொறி... எனக்குத் தெரியாது." என்ற முரளி கைகொடுத்து அவளை வாழ்த்தினான்.

"நூறாண்டுகாலம் நீடூழி வாழ்க!" என்றவன்,
"அப்ப வீட்டிலை இண்டைக்கு பெரிய பார்ட்டி....!"

"தெரிங்ச ஆக்கள்.. அப்பா, அம்மாவின்ரை பிறண்ட்ஸ் வருவினம். நீதான் பெரியாள் வரமாட்டாய்... அதுதான் நான் கேக் ஒண்டை கடையிலை வாங்கிக்கொண்டு வந்தனான்."

"ஏன் என்னிலை இவ்வளவு அன்பு காட்டுறாய்.... ராகினி வேண்டாம். உன்னுடைய தகுதி வேறை... என்னுடைய தகுதி வேறை...."

"தகுதி எண்டா....?"

"இப்பிடி நீ என்னோடை பழகிறது எங்கை கொண்டு போய் முடியும் தெரியுமா?"

"தெரியும்."

"எங்கை...?"

"கல்யாணத்திலை தான்.... ஏன்...?"

முரளி அவளின் தோளைப் பிடித்து உலுப்பியபடி கோபமாகப் பார்த்தான்.

"நடக்காது:"

"ஏன் நடக்காது?"

"நீ சின்னப்பிள்ளை.... உனக்கு விளங்காது."

"எனக்கு விளங்காதா? அப்பிற்றுவ (ஏ.எல்) படிக்கிறன். எனக்கு விளங்காதா?"

"நீ இங்கை வளர்ந்தபிள்ளை, உனக்குக் கஷ்டநஷ்டம் தெரியாது. அப்பா, அம்மா உன்னைப்பற்றி ஏதேதோ கனவு கண்டுகொண்டு இருக்கினம். நீ அதை விளங்காமல் என்னட்டை வந்து நெருங்கிப் பிறண்ட்சிப் வைச்சால் அது.....!"

"என்ரை பேத்டேயான நாளிலை என்னை நீ அழுவிக்கப் போறியோ?

முரளி பேசாமல் அவள் கண்களைப் பார்த்தான்.
"போகும்வழி தெரியாமல் நிக்கும் மூஞ்சூறு நான், என்னுடைய நிலைமை தெரியாமல் பேசிறாய்!"

"உன்ரை நிலைமை எனக்குத் தெரியுமடா! ஆனால் நீயும் மற்றவை மாதிரி விசாக் கிடைச்சு நல்லாயிருப்பாய் எண்டு நம்புறன்... பிழையா?"

"தெருவிலிருக்கும் சித்திரம் நான், என்னை வீட்டுக்குள் கொண்டு சென்று தரிசிக்க நினைக்காதை!"

"நான் ஒண்டும் நினைக்கேல்லை.... எனக்கு நீ வேணும்."

"எடி விசரி! இண்டைக்கோ, நாளைக்கோ பொலிஸ் என்னைப் பிடிச்சுச் சிலோனுக்கு அனுப்பப் போகுது."

"அனுப்பாது."

"எத்தினை பெடியளைப் பிடிச்சு அனுப்பிப் போட்டாங்கள்."

"அப்பீல் போட்டிருக்கிறாய்தானே.... லோயர் அக்ஸன் எடுப்பார், உனக்கும் ஒண்டும் நடக்காது. ஏன் பயப்பிடுறாய்?"

"ஜேர்மன் சட்டம் அப்பிடி..... நாட்டிலை எனக்குப் பிரச்சனை இல்லை. அங்கை போய் இருக்கலாம் எண்டு கோர்ட் தீர்ப்புச் சொல்லிப்போட்டுது. இனி...."

"இனியும் இல்லை, பனியும் இல்லை. நான் இருக்கிறன். ராகினி நினைச்சால் நடாத்திக்காட்டுவாள். ஓகே முரளி. பிளீஸ் ஏதும் பிரச்சனை எண்டா என்ரை கன்டிக்கு ரெலிபோன் எடு! மெலானி என்ரை சிநேகிதி.... அவளின்ரை அப்பா பேகலைமைஸ்ரார் தெரியுமே! அவர் சொன்னா அவுஸ்லான்டஅம்ற் கேக்கும். ஓகே." என்று முரளியைச் சமாதானப்படுத்தினாள்.

இருவரும் தேனீர் தயாரித்து, ராகினி கொண்டுவந்த கேக்கை வெட்டிச் சாப்பிட்டனர்.

"பேத்டேக்கு உமக்கு என்ன பிறசன்ற் வேணும்?" கேட்டான் முரளி.

"நீ வேணும்!"

"அப்பா, அம்மா பெற்று, வளர்த்து படிப்பித்துவிட, இந்தக் காதலை மட்டும் நீ அவைக்குத் தெரியாமல், அவை சம்மதிக் காமல் செய்யிறது தப்பு... தப்பிலும் தப்பு.... மகா பாவம்!"

"அப்பா, அம்மா சம்மதிப்பினம் தானே... ஏன் மாட்டன் எண்டு சொல்லப்போயினம்? நான் கேட்டதெல்லாம் வாங்கித் தருவார் அப்பா.... அவரிட்டை எவ்வளவு காசு பாங்கிலை இருக்குத் தெரியுமா?"

முரளி பதில் பேசிவில்லை.

"என்ன?" கேட்டாள் ராகினி.

"ம்....ம்"

"ஏதாவது கதையன்!"

"அடுத்த டான்ஸ் புறோகிராம் எப்ப?"

"வாற சனிக்கிழமை."

"ஏன் கேக்கிறாய்?"

"உனக்கு சலங்கை ஒண்டு வாங்கித்தாறன்!"

"அது கனகாசு வருமடா!"

"பறவாயில்லை, என்னுடைய சலங்கையைக்கட்டி, சனிக்கிழமை டான்ஸ் செய்யிறீர்!" என்ற முரளி ராகினி கன்னத்தில் தடவினான்.

"நீ பொல்லாத கில்லாடி...!"

வீடியோக்கசற் முடிந்து தொலைக்காட்சியில் ஒரே கோடாக ஓடிக் கொண்டிருக்க, முரளி அதை நிற்பாட்டிக் கசற்றை எடுத்து வைத்தான்.

நேரத்தைப் பார்த்த ராகினி, "உவ்.... அம்மா ஏசப்போறா, நான் போட்டு வாறன்!" என்று அவன் முதுகில் செல்லமாக அடித்து விட்டு விடைபெற்றாள்.

---------------------------

ராகினியின் பரதநாட்டியம் இடம்பெறவிருந்த மண்டபத்துக்கு முரளி காரில் வந்துகொண்டிருந்தான். பல நிகழ்ச்சிகளின் பின்பே நாட்டியம் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் முரளி றெஸ்றோறன்ற் வேலைக்குப் போய்விட்டு இடையில் அவசர வேலை ஒன்று இருப்பதாக லீவு பெற்று வந்தான்.

ராகினிக்கு வாங்கித் தருவதாக அவன் சொன்ன சலங்கை, பை ஒன்றுக்குள் பத்திரமாகப் பின்சீற்றில் இருந்தது. மண்டபத்தை அண்டிய கார் நிறுத்தும் இடத்தில் ஏராளமாகக் கார்கள் நிறுத்தி இருந்ததால் இடம்தேடி ஒரு ஒடுங்கிய இடத்தில் சிரமப்பட்டு நிறுத்திவிட்டு, காரிலிருந்து இறங்கினான். எதிரே இருவர் அவனை நோக்கி வந்தனர்.

தூரத்து மின்கம்பங்களின் மெல்லிய ஒளி சற்று மங்கலாகப்பட வருபவர்கள் யார் என்பது முரளிக்குத் தெரிந்தது. ஒன்று

ராகினியின் மாமா சோமு, வயது நாற்பது தாண்டியிருக்கும். மற்றது அவர் நண்பன் நாதன். தெரிந்தவர்கள்தான். நாதன் மதுப்பிரியன். அற்ககோல் பாவித்துவிட்டு அடுத்தவர்களுடன் தனகுவது அவன் வாழ்க்கையோடு ஒட்டியது.

"டேய்! இஞ்சை வா! எங்கை போறாய்?" என்று அதட்டல் கேட்கத் திரும்பிப் பார்த்தான் முரளி.

"புறோக்கிராம் பார்க்கப் போறீரோ....?" வெறியில் நின்ற நாதனின் குரல் இது.

"நீ பேசாதை!" என்று நாதனை அமைதிப்படுத்திவிட்டு, மாமா சோமு முரளியின் கிட்ட வந்தார்.

"ராகினியை லவ் பண்ணுறியாம்.. அங்க... அப்பிடி ஒரு நினைப்பு இருந்தா அட்றஸ் இல்லாமல் செய்துபோடுவம்."

சலங்கையை எடுத்துக்கொண்டு, காரைப்பூட்டி ஹோலுக்குப் போக நினைத்த முரளி, இப்பிடியொரு எதிர்ப்பு திடீரென்று முளைத்துத் தன்னை வழிமறித்து நிற்பதைக் கண்டு திகைத்துப் போனான்.

"சொல்லுறது கேக்கிதே! ராகினி ஆர்....? வருங்கால டொக்டர். எங்கடை விலாசம் தெரியுமோ... இனிமேற்பட்டு கண்ணிலை தென்பட்டா நடக்கிறது வேறை.... ஒண்டுமில்லாமல், ஓட்டைக் காரையும் வைச்சுக்கொண்டு திரியிறாய். வேலையும் இல்லை, வெட்டியுமில்லை. போ! இடத்தைக் காலி பண்ணு!" என்ற சோமுவின் குரலில் மிரட்டல் ஒலித்தது.

விடயம் என்னவென்பதை விளங்கிக்கொண்டான் முரளி. ராகினியின் அப்பா தாமோதரன், ஆள்வைத்து தன்னை வெருட்டு கிறார் என்று தனக்குள் சொன்னவன்,

"அங்கிள்! கொஞ்சம் மரியாதையாக் கதையுங்கோ." பின்னால் நின்ற நாதன் எட்டி ஒரு அடி முன்வந்து ஓங்கி முரளியின் முகத்தில் குத்த, அதை எதிர்பாராத அவன் காரில் மோதிக் கீழே விழுந்தான்.

நாதன் இப்படிச் செய்வானென்று சோமுவும் எதிர்பார்க்கவில்லை. எல்லாம் ஒரு கணத்தில் நடந்து முடிந்துவிட்டது.

"விசரா, ஏன்டா அடிச்சனி?" என்று நாதனை இழுத்துப் பின்னால் தள்ளிவிட்டு, முரளியைப் பார்த்தான்.

முரளி முகத்தை ஒருகையால் பொத்தியபடி எழுந்தது தெரிந்தது. மேலும் அதில் நிற்பது விபரீதமாகும் என்றோ, என்னவோ சோமு நாதனையும் இழுத்துக்கொண்டு மண்டபவாசலை நோக்கி நடந்தார்.

முரளியின் கன்னம் வீங்கி சிறிது இரத்தம் கசிந்தது. காருக்குள் இருந்த பையைத் தூக்கி, சலங்கையை வெளியே எடுத்துப் பார்த்தான். அவை கிலுங்கித் தம் சோகத்தை வெளிப்படுத்தின. அவற்றை மீண்டும் பைக்குள் வைத்து கிலுங்காமற் பிடித்தபடி மெதுவாக முன்பக்கம் நடந்தான். திரும்பிப் போகும்படி அவன் மனம் சொல்லியது. அடிபட்ட காயம், விழுந்து உடைகளில் ஒட்டிய அழுக்கு... இவற்றுடன் விழா மண்டபத்துக்குப் போவது முடியாது.

வீட்டுக்குப் போய் உடுப்பு மாற்றி வர நேரம் போய்விடும். ராகினியின் ஆட்டம் முடிந்துவிடும். தருவதாகச் சொன்ன சலங்கையைக் கொடுக்க முடியாது.

பலதும் யோசித்தபடி நின்றவன் கண்களில் நான்கைந்து சிறுவர் ஓடி வருவது தெரிய, அவர்களில் ஒருவனை அழைத்து ராகினியின் தம்பியை வரச்சொல்லிச் சொல்லிவிட்டான்.

வாசலில் பல பெரியவர்கள், பொடியள் நிற்பது தெரிந்தும், அங்கு செல்ல மனமில்லாது கார்த்தரிப்பிடத்தின் முன்னால் கையில் பையுடன் நின்றான்.

ராகினியின் தம்பி வரவில்லை. இவ்வளவு சனத்துக்குள் தேடிக் கொடுப்பது நடக்கிற காரியமில்லை என்று நினைத்தவனாய் திரும்ப எண்ணியவன், யாரோ வருவது கண்டு சற்று நின்றான்.

"முரளி! என்னடா இங்கை நிக்கிறாய்? அங்கை ராகினி தேடிக் கொண்டு நிக்கிறாள்." என்று அவனை உள்ளே செல்ல அழைத்தான் நண்பன் சுதா.

இதுவரை நேரமும் ராகினி முரளி வருவான் வருவான் என்று எதிர்பார்த்துத் தேடிக்கொண்டிருந்தாள். நடனம் நிகழும் நேரம் நெருங்கிவர அவள் நெஞ்சம் படபடத்தது.
எங்கை இவன்... சலங்கை கொண்டு வாறன் எண்டான்... என்று அவள் மனதுக்குள் நினைத்தபடி, பழைய சலங்கையைத் தாய் கட்டும்படி பல முறை சொல்லியும்...
"பொறும்மா...கொஞ்சம்பொறு கட்டுறன்!" என்று சமாளித்தவளாய் இருந்தவள், பொறுக்கமுடியாமல் தம்பியார் மூலம் சுதாவுக்குத் தெரிவித்துத் தேடுவித்தாள்.

சுதா மண்டபத்துக்குள்ளெல்லாம் பார்த்து, முரளியின் நண்பர் களிடமும் விசாரித்துவிட்டு வெளியே பார்த்து வர வந்திருந்தான்.

அவனிடம் கையிலிருந்த பையை நீட்டி, "இதைக் கொண்டுபோய்க் குடு!" என்றான்.

"ஏன்...? வாவன் உள்ளுக்கு!" அடுத்த புறோகிராம் ராகினியின்ரை டான்ஸ்! பார்த்துக்கொண்டு நிக்கிறாளடா.... வா!" என்று தெண்டித்து சுதா அழைத்தான்.

"வேலைக்கு உடனை போகவேணும் மச்சான், முதலாளி லீவு தர மாட்டன் எண்டிட்டான்." என்று பொய் சொல்லி நடந்ததை மறைத்தான் முரளி.

சுதா சலங்கையைப் பெற்றுக்கொண்டு நடக்க, முரளி காரை நோக்கி நடந்தான்.

.........................

வீட்டுமணி ஒலிக்க, கதவைத் திறந்தாள் யசோ.

கண்ணுக்குச் சற்று மேல் காயத்துக்குப் பிளாஸ்ரர் ஒட்டி, வீங்கிச் சிவந்த கண்ணுமாக முரளி நின்றான்.

"கோகுலன் அண்ணை நிக்கிறாரோ....?"

"ஓம்! உள்ளுக்கு வாரும்." என்றவள், அவன் அடிபட்ட காயத்தைக் கவனித்து, ஏதோ நடந்திருக்கு என்று மனதுசொல்ல, "முரளி!" என்று அவனை விழித்தாள்.

"ஏதும் பிரச்சனையே...?"

"தெரியாதமாதிரிக் கேக்கிறீங்கள்." என்றான் மனக்கொதிப்புடன்.

"தெரியாதமாதிரி எண்டா....?" அவன் கோபம் புரியாமல் கேட்டாள் யசோ.

"தனிப்பெடியன் எண்டாப்போலை என்னெண்டாலும் செய்யலாம் எண்டு நினைக்கிறீங்களோ...?"

யார் இப்படி யசோவுடன் காரமாகக் கதைப்பது என்று அறியும் துடிப்புடன் வெளியே எட்டிப் பார்த்த கோகுலன், அங்கெ முரளி நிற்பது கண்டு, "முரளி, வா! வா!" என்று அழைத்தவன், அவன் நெற்றியில் பிளாஸ்ரரையும் சிவந்த கண்களையும் கண்டு குழம்பிப்போய், "என்ன இது....?" என்று அவனைக் கூட்டிக் கொண்டு உள்ளே வந்தான்.

"இரு!" என்று சோபாவைக் காட்டினான் கோகுலன்.

நான் இருக்க வரேல்லை.... என்று சொல்ல நினைத்தவன், சரியாகத் தெரியாமல் மரியாதையின்றி நடப்பது பண்பல்ல என்று நினைத்துக்கொண்டு நிற்க,
"இரு முரளி! என்ன நடந்தது? ஆரோடை பிரச்சனை?" ஆதரவோடு கேட்டான் கோகுலன்.

"தாமோதரமண்ணைக்கு ஏதும் சொன்னனீங்களோ?"

"தாமோதரமண்ணைக்கு....!" என்றவன், யோசித்தவனாய் இல்லை என்று இழுத்தான்.

கேட்டுக்கொண்டிருந்த யசோவுக்கு நெஞ்சு இடித்தது.

"தாமோதரர் ஆள்வைச்சு அடிச்சிருக்கிறார்." என்ற முரளியின் கண்களில் கண்ணீர் ததும்பியது.

கோகுலன் யசோவைப் பார்த்தான். இருவருக்கும் விடயம் ஓடி வெளித்தது. மகளைக் கொஞ்சம் யோசித்து வழிநடத்துவார் என்ற நினைப்பில், தான் தாமோதரத்துக்குச் சொன்ன விடயம் எங்கேயோ கொண்டு வந்து விட்டிருக்கிறது? என்று நினைத்தவனாய்,
"சொல்லு! ஆர் அடிச்சது?" என்று கேட்டான்.

"அதைச் சொல்ல நான் இங்கை வரேல்லை, இப்பிடி இன்னொரு தடவை வேறை பெடியளுக்குச் செய்யாதேங்கோ! எண்டு சொல்லத்தான் வந்தனான்." என்று எழுந்துசெல்ல முனைந்த வனை,
"இரு! கோபிக்காதை.... நடந்தது என்னெண்டு எனக்குத் தெரியாது."

"ஏன்தெரியாது எண்டுறீங்கள்? தாமோதரத்தாருக்கு நீங்கள் போய்ச் சொல்லியிருக்கிறீங்கள்.... பிறகென்ன?"

"ஆர் சொன்னது....?"

"சொல்லியிருக்கிறீங்களோ இல்லையோ....?"

"குற்றவாளியாக நின்றான் கோகுலன்.

"சொல்லியிருக்கிறீங்கள் அப்பிடித்தானே!"
அவன் பக்கத்தில் போயிருந்தான் கோகுலன்.

"ஏன் இப்பிடிச் செய்தனீங்கள்? என்னட்டைவந்து நீங்கள் ஏன்டா முரளி இப்பிடிச் செய்யிறாய் எண்டு கேட்டிருக்கலாம்... இல்லாட்டி நாலு அடி நீங்கள் அடிச்சிருக்கலாம். ஆனால் அவளின்ரை தேப்பனிட்டைப் போய்ச்சொல்லி ஆள் வைச்சு அடிப்பிச்சு இருக்கிறீங்கள்."!

"இல்லை... ஒருநாளுமில்லை." யசோ மறுத்தாள்.

"நீ நினைக்கிறமாதிரி ஒண்டும் நடக்கேல்லை." என்று கோகுலனும் யசோவும் அவனைச் சமாதானப்படுத்த முனைந்தனர்.

"தாமோதரன் ஆர்...? கடை வைச்சிருக்கிறார், காசு வைச்சு இருக்கிறார் எண்டா அவர் என்ன கொம்பா.....? இல்லைக் கேக்கிறன்... திருப்பி எனக்கு அடிக்கத் தெரியாதா? அவை

பத்தடி அடிச்சா எனக்கு ஒரு அடி அடிக்கத் தெரியாதே! செய்யேல்லை... இருபது இலட்சம் செலவழிச்சு வந்தனான். இங்கை தெருவிலை நிண்டு அடிபடவோ? பொலிஸ் பிடிச்சு அனுப்பப் போகுது, தேவையில்லாமல் பொலிஸிலை மாட்டுப்படக் கூடாதெண்டு கோபத்தையும் அடக்கிக்கொண்டு பெட்டையன் மாதிரி வந்து நிக்கிறன். ஊரிலை இப்பிடி ஒருத்தன் கை என்ரை மேலிலை பட்டிருந்தா நடக்கிறதே வேறையாய் இருந்திருக்கும்.

ஊரைவிட்டு, உறவுகளை விட்டு வெளிநாட்டுக்கு வந்து தனிய இருந்தாப்போலை அனாதையெண்டு நினைச்சுக்கொண்டாங்கள், அட்ரஸ் இல்லாமல் ஆக்கிப் போடுவாராம் இவருக்கு ஆர் இங்கை அட்ரஸ் கொடுத்தது? நான் புது அகதி எண்டா, அவர் பழைய அகதி." என்று சொல்லிவிட்டு எழுந்தான் முரளி.

யசோ தேனீர் கொண்டு வந்து கொடுத்தாள்.
வேண்டாம் என்று சொல்ல மனம்வராமல் எடுத்து முன்னாலிருந்த மேசையில் வைத்துவிட்டு திரும்பவும் உட்கார்ந்திருந்த முரளி,
"நீங்கள் என்னட்டைச் சொல்லியிருக்கலாம்" என்றான் கோபம் சற்றுத் தணிந்தவனாய்.

"ஒண்டு நினைக்க ஒண்டு நடக்கிறதெண்டா இதுதான்..... நாங்கள் நன்மைக்குச் செய்யப்போக அது தீமையிலை வந்து முடிஞ்சுது." என்று கவலையுடன் சொன்னாள் யசோ.

"இல்லை அக்கா! நானும் என்பாடும் எண்டு இருக்கிறன். எனக்கு இருக்கிற பிரச்சனைகளை மற்றவைக்குச் சொல்லேலுமே! விசா முடியப்போகுது. நாட்டை விட்டுப் போகப்போறன் எண்டு எங்கடையள் ஆரோ முதலாளிக்கும் சொல்லி, வேலையைக் கெடுத்துப் போட்டுதுகள். இப்ப அங்கை இங்கை எண்டு கிடைக்கிற வேலையளைச் செய்துகொண்டு இருக்கிறன். ராகினி என்னை விரும்புறாள்.... எனக்கு நல்லாத் தெரியும். ஆனால் நான் அது சரிவராதெண்டு சொல்லியிருக்கிறன். அவள் நல்லவள், பாவம். அவளுக்காக ஒரு அடி இல்லை, ஆயிரம் அடியையும் வேண்டுவன். ஆனால்.... அவமானப்படுத்தினால் என்னாலை தாங்கிக்கொள்ள முடியாது. அகதி எண்டாலும் எனக்கும் தன்மானம் உண்டு. ஏனெண்டால் நானும் ஒரு தமிழன்... அதை உங்கடை பிறண்டுக்குச் சொல்லி வையுங்கோ!" என்றுவிட்டு எழுந்து சென்றான்.

"முரளி!" என்று கோகுலனும் யசோவும் அவனை அழைத்தும், அவன் நிற்காமல் கதவைச் சாத்திவிட்டு வெளியேறினான்.

சூட்டோடு தாமோதரனின் தொலைபேசி எண்கள் சுழன்றன.
"நான் கோகுலன்!"

"சொல்லு கோகுலன்.... என்ன இந்தப்பக்கம் காணேல்லை?" என்ற தாமோதரனின் வார்த்தைகளை அறுத்துக்கொண்டு,
"என்ன செயல் அண்ணை செய்திருக்கிறீங்கள்? நீங்களும் ஒரு மனிசன் எண்டு நம்பித்தான் முரளியும் ராகினியும் பழகிறதுபற்றி நான் கேள்விப்பட்டதை உங்களுக்குச் சொன்னனான். வயதுக்கு மூத்தனீங்கள் பக்குவமா மகளைக் கண்டிப்பீங்கள் எண்டு நினைச்சா, அவன் பெடியனைத் தெருவிலை நாயை அடிக்கிற மாதிரி ஆக்களை வைச்சு அடிச்சிருக்கிறீங்கள்."

"என்னடா... கோகுலன்... என்ன சொல்லுறாய்? ஆரை ஆர் அடிச்சது?" என்று தடுமாறினார் தாமோதரன்.

"ஒண்டும் தெரியாதமாதிரிக் கதையாதேங்கோ! முரளி, வீட்டை வந்து எல்லாம் சொல்லிப்போட்டுப் போறான்.நான் தான் உங்களுக்கு இப்பிடிச் சொன்னது எண்டுகூட அவனுக்குத் தெரிஞ்சுபோச்சு...." என்று சொல்லி, கோபத்தோடு தொலைபேசி தொடர்பைத் துண்டித்துக்கொண்டான்.

தொலைபேசிமணி அடித்தது. தாமோதரம் பலதடவைகள் விட்டு விட்டு எடுத்தும் கோகுலனோ யசோவோ அதை எடுக்க மனம் இல்லாமல் கவலையுடன் என்ன செய்யலாம் என்று யோசித்தபடி இருந்தார்கள்.

சின்னப்பெடியன் முரளி, அவன் வந்து கேள்வி கேட்குமளவுக்கு நடந்துவிட்டதே என்ற குற்றவுணர்வில் சாப்பிடக்கூட மனமில்லாமல் சமைத்த உணவு காத்துக்கிடக்க, பசியுடன் இருந்தார்கள்.

நீண்டநேரம் யோசித்துக் கொண்டிருந்துவிட்டு, யசோவுடன் ஏதோ கதைத்த கோகுலன் முரளிக்கு தொலைபேசி எடுத்தான்.
"நான் கோகுலன்!"
"என்ன?" என்றான் முரளி.

"ஒரு விசயம் கதைக்கவேணும், வா!"

"வேலைக்குப் போகவேணும், நேரமில்லை."

"இஞ்சை வா சொல்லுறன்! வேலையைப் பிறகு பார்க்கலாம்." என்ற கோகுலனின் அழைப்பை மறுக்க முடியாத முரளி சம்மதித்தான்.

கோகுலன் தொலைபேசியை வைக்க அது அடித்தது. எடுத்தான். தாமோதரனின் குரல் ஒலித்தது. அவர் நடந்ததைச் சொன்னார். மைக் போட்டிருந்தது. பக்கத்தில் நின்ற யசோவும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவரின் குரலிலும் கவலை தெரிந்தது.

சோமுவுடன் தான் இதுபற்றிக் கதைத்ததை ஒப்புக்கொண்டார் தாமோதரம். ஆனால் முரளிக்கு அடிக்கும்படியோ, மிரட்டும் படியோ சொல்லவில்லை என்று சத்தியம் செய்தார். நேரில் வருவதாகச் சொன்ன அவரை, நாளைக்கு வரும்படியும், தாங்கள் வெளியே போக இருப்பதாகவும் சொல்லி, தொலைத்தொடர்பை முடித்தான் கோகுலன்.

வீட்டுமணி அடிக்க யசோ கதவைத் திறந்தாள். அங்கு நின்ற முரளியை, "வாரும்!" என்று வரவேற்றுக் கூட்டிக்கொண்டு வந்தாள். கோகுலன் தொலைபேசியில் யாருடனோ உரையாடிக் கொண்டிருந்தான். முரளி வந்ததும், "சரி, பிறகு கதைக்கிறன்." என்று பேசி முடித்துவிட்டு, முரளியைப் பார்த்து, வா சாப்பிடுவம்! என்றான். யசோ சாப்பாடு போட்டாள்.
மூவரும் சாப்பிட்டனர்.

"யார் இந்தப்பிள்ளை?" அங்கிருந்த போட்டோ ஒன்றைக் காட்டிக் கேட்டான் முரளி.

"சூரியா, கொழும்பிலை படிக்கிறான். கடிதத்தோடை நேற்று வந்தது. அல்பத்துக்கை வைக்க வேணும்." என்று பதில் சொன்னாள் யசோ.

"சொந்தக்காரப்பிள்யையோ....?"

"ம்!" ஆம் என்றது போல் தலையை ஆட்டினான் கோகுலன்.
சாப்பிட்டபடி படத்தைத் திரும்பிப் பார்த்தவன், அதிலிருந்த வாசகங்களைப் படித்துவிட்டு, கோகுலனையும் யசோவையும் பார்த்தான்.

"அனாதையென்று யாருமில்லை... உலகத்திலே ஒவ்வொரு மனிதனுக்கும் ஏராளமான உறவுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. சோம்பிக் கிடந்தால் தெரியாது. தேடி அலையவேணும் கிடைக்கும்." சொன்னாள் யசோ.

சிறிது மௌனத்தைத் தொடர்ந்து, கோகுலன் கேட்டான்.
"விசா முடிஞ்சுது எண்டு சொன்னாய், அப்பீல் எடுக்கேல்லையே?"

"எல்லாம் செய்தாச்சு, லோயர் வைச்சு இழுக்கிறார்..."

"அப்ப ஏன் இங்கை இருக்கிறாய்? பார்த்து எங்கையாவது மாறுறதுதானே!"

"எங்கை அண்ணை மாற....? சொந்தக்காரர் ஆரும் இருந்தாலும் உதவி கேட்கலாம். சிநேகிதப்பெடியள் இருக்கிறாங்கள் தான், அவங்கடை நிலையும் என்னை மாதிரித்தான்."

சாப்பிட்டு முடிந்து எழுந்து ஹோலுக்கு வந்திருந்து நீண்டநேரம் கதைத்துக்கொண்டிருந்த பின், முரளி தன் வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.
ராகினி காலையில் எழுந்து முரளி வீட்டுக்குச் சென்று அவனைக் காணாது ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்து பலமுறை அவனுக்குத் தொலைபேசி எடுத்துப் பார்த்துவிட்டு, மனமுடைந்து போய் தன் அறைக்குள் படுத்தாள்.

"என்ன பிள்ளை.... இஞ்சை படுத்திருக்கிறாய்? நான் வெளியிலை போட்டாயெண்டு நினைச்சுக்கொண்டிருக்கிறன்." என்று தாய் நீலா குரல் கொடுத்தும் பதில் பேசாமற் படுத்திருந்தாள் ராகினி.

"கொப்பர் ஒருபக்கம் மூஞ்சையை நீட்டிக்கொண்டு போறார். நீ ஒருபக்கம் இறக்கிக்கொண்டிருக்கிறாய்... எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்லை. நேற்று போனமா டான்ஸ் ஆடினமா எண்டு இல்லாமல் ஆக்களையாக்கள் பார்த்து ஆரைத் தேடினனீ...? இந்தச் சலங்கை வேண்டாம், அந்தச்சலங்கை வேணுமெண்டு அது வேறை பிடிவாதம்.... பிள்ளை கெட்டிக்காரி, படிக்கிறாள் எண்டு பார்த்தால்..... கோபமும், பிடிவாதமுமா இருக்கிறாய்... வா! இப்பிடிப் படுத்திருந்தால் விடியாது, பிள்ளை! எழும்பி வெளியிலை வா!"

ராகினி செவி சாய்த்ததாகத் தெரியவில்லை.

சிறிதுநேரம் கழித்து வீட்டுக்கு வந்தார் தாமோதரன்.
"சைய்ஸ..." என்று முணுமுணுத்தார்.

"என்ன...?" கேட்டாள் மனைவி நீலா.

"உன்ரை தம்பிக்குத் தேவையில்லாத வேலை."

"இதென்ன இருந்தாப்போலை.... அவன் என்ன உங்களுக்குச் செய்தவன்?"

"எனக்கு ஒண்டும் செய்யேல்லை, தேவையில்லாத வேலை பார்த்திருக்கிறார். வீட்டை போனனான், எங்கையோ போட்டாராம், விசர்ப்பயல்!"

"என்னப்பா ஒருநாளும் இல்லாத மாதிரி சோமுவைத் திட்டுறீங்கள் என்னெண்டு சொல்லுங்கோவன்!"

"எல்லாம் உன்ரை மகளாலை வந்தது." கத்தினார் தாமோதரன்.
"செல்லம் குடுத்து, மடியிலை வைச்சு, இப்ப செல்லம் நெல்லுக் கொழிக்குது." எரிந்து விழுந்தார். நீலா ஒன்றும் விளங்காமல் அவரைக் குழப்பத்துடன் பார்த்தாள்.

ஹோலுக்குள் அப்பாவும் அம்மாவும் ஒருநாளுமில்லாதவாறு சத்தமாகக் கதைப்பது கேட்டு, காதைக் கூர்மையாக்கியபடி எழுந்து கட்டிலில் உட்கார்ந்தாள் ராகினி.

"முரளியும் இவளும் லவ்வாம்.... சனமெல்லாம் கதைக்குது!"

"எனக்குத் தெரியாது!"

"கிணத்துத் தவளைக்கு வெளியிலை இடி முழங்கினாலும் கேட்காது."

"நான் கிணத்துத்தவளையே....!"

"இல்லை சமுத்திரத்துத்தேரை...!"

நீலா பதில் பேசவில்லை.

"கோகுலன் சொல்லித்தான் எனக்குத் தெரியும். நான் பேசாமல் இருந்திருக்கலாம்... உன்ரை தம்பிக்கு வாய் கிடக்காமல் சொல்லிப்போட்டன். அவர் பெரிய சண்டியன், இன்னொரு சண்டியன் நாதனையும் சிண்பிடிச்சுக்கொண்டு போய் அந்தப் பொடியனுக்கு பார்க்பிளற்சிலை வைச்சு அடிச்சிருக்கிறாங்கள்... நாயள்!" உறுமினார் தாமோதரன்.

கதவைப் பிச்சுக்கொண்டு புயல் வந்ததுபோல வந்து நின்றாள் ராகினி.

தாமோதரனும் நீலாவும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

"ஆர் அடிச்சது.... என்ரை முரளிக்கு ஆர் அடிச்சது?" தகப்பனை உலுப்பினாள் ராகினி.

"என்னடி சொல்லுறாய்?" மகளின் தலைமயிரை எட்டிப் பிடித்தாள் நீலா.

"அவளை விடு!"

"என்ன சொல்லுறாள் இவள்...?"

"ஒண்டும் சொல்லேல்லை.... நீ கையை விடு!" என்று நீலாவின் கையை விடுவித்தார் தாமோதரம்.

"முரளி எங்கை....?" கேட்டாள் ராகினி.

பதில் இல்லை.

"அடிச்சுக் கொன்று போட்டீங்களோ...?"

"என்னடி கதைக்கிறாய்?"

"முரளிக்கு ஏன் அடிப்பிச்சனீங்கள்... இப்ப எங்கை அவன்?"

"தெரியாமல் நடந்து போச்சு....!" சொன்னார் தாமோதரன்.

"என்னப்பா இப்பிடிச் சொல்லுறீங்கள்! மாமாவும், பிறன்டும் ஹோல் பாக்பிளற்சிலை வைச்சு அடிச்சிருக்கினம், உங்களுக்குத் தெரியாமலே....! அதோடை மாமா ஆர் முரளிக்கு அடிக்க...?" கண்ணீர் வழிந்தோடக் கேட்ட மகளை ஏதும் புரியாமல் பார்த்த நீலா,

"எனக்கு இங்கை என்ன நடக்குதெண்டே விளங்கேல்லை... நேற்றுவரை எல்லாரும் நல்லாத்தானே இருந்தனீங்கள்." என்று தகப்பனையும் மகளையும் பார்த்துக் கோபம் தொனிக்கக் கேட்டாள் நீலா.

"நேற்றுத்தானே அவனுக்கு அடிச்சிருக்கினம்."

"அவனுக்கு அடிச்சா உனக்கென்னடி...?"

ராகினி தாயை விழித்துப் பார்த்தாள்.

"சரி...சரி விட்டிட்டுப் போய்த் தேத்தண்ணியைப்போடு!"

"என்னப்பா சிம்பிளாச் சொல்லுறீங்கள் விட்டிட்டுப்போ எண்டு...! ஆரோ பெடியனுக்கு அடிச்சதுக்கு இவள் குத்தி முறியிறாள்! என்ன ஏதெண்டு விசாரிச்சா, நீங்கள் அக்கறையில்லாமல் சும்மா நிக்கிறீங்கள்!"

"எடியே.... போய்த் தேத்தண்ணி போடச்சொன்னா, போவன்... சும்மா வாள்...வாள்...எண்டுகொண்டு நிக்கிறாய்." என்று தாமோதரம் ஒருநாளுமில்லாமல் கத்த, நீலா முறைத்துப் பார்த்து விட்டு ஏதும் பேசாமல் சமையலறைக்குப் போனாள்.

"தேத்தண்ணி கொண்டு வந்து அம்மா தருவா, குடிச்சிட்டுப் போய்ப்படி!" என்று மகளைப் பார்த்தார்.

ராகினி முகத்தைப் பொத்திக்கொண்டு தன் அறைக்குக் கோபமாக நடந்தாள்.

தன் செல்லமகளின் கோபத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற தாமோதரன் பெருமூச்சு விட்டபடி சோபாவில் இருந்தார். சுவரில் தொங்கிய ராகினியின் படம் அவர் கண்களில் பட்டது.

அவள் உடம்பு புரட்டி இருக்கும்போது எடுத்தபடம்.

தூக்கி வளர்த்து விட்டாச்சு, இப்ப தாய், தகப்பனைப் பார்த்துக் கேள்வி கேட்குமளவுக்கு வளர்ந்துவிட்டாள்.

கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தோம். எது கேட்டாலும் மறுக்காமல், பிள்ளை ஆசைப்படுகிறாள் என்று சம்மதிச்சு, நல்லா இடம் கொடுத்து, அவள் கெட்டிக்காரி... பிழை விட மாட்டாள் என்று நம்பி சுதந்திரம் கொடுத்தால்.... இப்ப தாமோதரனுக்கு மகளின் மனதுக்குள் வளர்ந்து நிற்கும் வயதுக் கோலம் விளங்கியது.
அப்போ நீலா தேநீர் கொண்டு வந்தாள்.
"அவள் எங்கை.....?"

"கோவிச்சுக்கொண்டு தன்ரை அறைக்குப் போட்டாள்.... நீ இரு, கோபம் மாறி வரட்டும்."

"என்னப்பா இது...? எனக்குக் கை, கால் எல்லாம் உதறுது.. இவள்... இவள் போய் முரளியை...." என்று வார்த்தையை நீட்ட, அவள் கரத்தைப் பிடித்து,
"நீலா! பிள்ளை வளர்ந்திட்டாள்.... இது இந்த நாட்டிலை சர்வ சாதாரணம், நாங்கள் கொஞ்சம் கவனமாக இருந்திருக்க வேண்டும்." என்று யோசனையுடன் சொன்னவர்,
"அவளோடை சீறிச்சினந்து ஒரு பிரயோசனமும் இல்லை. கொஞ்சம் விட்டுப் பிடிக்கிறது நல்லது. இந்தக்காலத்துப் பிள்ளையள் என்ன செய்யும்... ஏது செய்யுமெண்டு தெரியாது."

"அந்தப்பொடியனை இவள் எங்கை கண்டவள்.....?"

"எங்கையன் கண்டிருப்பள்..... துடியாட்டக்காரிதானே உன்ரை மகள்!"

"ஏன் அவளைக் குறை சொல்லுறீங்கள், அந்தப்பொடியன் என்ன சொல்லி இவளின்ரை மனதைக் கெடுத்தானோ....?"

தாமோதரன் சிரித்தார்.
"இந்தப் பிரச்சனைக்கையும் உங்களுக்குச் சிரிப்பு வருகுது... என்ன மனுசனப்பா நீங்கள்...."

"அதில்லையடி.... நாங்கள் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கிறது எண்டது இதுதான்.!"படிச்சு, நல்ல உத்தியோகம் பார்த்து மதிப்பா இருப்பாள் எண்டு பார்த்தால் இவள் இந்த வயதிலை தெருவிலை கண்ட பொடியனை நினைச்சுக்கொண்டு இருக்கிறாள்.... இதெங்கை போய் முடியப் போகுதோ.... எனக்குப் பயமாக் கிடக்கு!"

"உனக்கு எல்லாத்துக்கும் பயம்!"

"பதினெட்டு வயது வரை வளர்த்துப் போட்டம், அம்மா... அம்மா.. எண்டு சீலைக்கை இருந்தவள், இப்ப அமசடக்கக்காரி மாதிரி ஒண்டும் வெளியிலை சொல்லுறேல்லை.... இஞ்சேப்பா!"

"என்ன?"

"பேசாமல் உங்கடை அக்கான்ரை ரங்கனுக்குக் கேளுங்கோ, அவன் கனடாவிலை படிச்சு நல்லாத்தானே இருக்கிறான். செய்து வைச்சிட்டாப் பிரச்சனை முடிஞ்சுது."

"இந்த வயசிலை கலியாணம் செய்து வைப்பம் எண்டுறாய்... உனக்கென்ன விசரே.....!"

"ஏனப்பா, எத்தினை பேர் இப்பிடிச் செய்து வைச்சிருக்கினம். இந்த நாட்டிலை பிள்ளையளை ஒழுங்கா வளர்க்க முடியாது. நான் சொல்லுறதைக் கேளுங்கோ!"

"நீ சொல்லுறதைக் கேக்கிறன். ஆனால்...."

"என்ன ஆனால்...."

"மூத்தவன் இருக்கேக்கை இளையவனைக் கேக்கிறம்... ஏதும் நினைப்பினம் எண்டு நினைக்கிறீங்களோ?"

"அதுக்கு நான் யோசிக்கேல்லை."

"பிறகேன் யோசிக்கிறீங்கள்..... எடுத்து அக்காவோடை கதையுங்கோ, நீங்கள் கேட்டால் அவை மாட்டம் எண்டு சொல்ல மாட்டினம்."

"நீ சொல்லுறது சரி!"

"சரியெண்டா... கதையுங்கோவன்."
தாமோதரன் தலையைக் குனிந்து கண்களை இறுகமூடி, கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு அமைதியாக யோசித்தார்.

அன்பைக்கொட்டி வளர்த்த ஆசைமகளை, அதுக்குள்ளை கலியாணம் கட்டிக்கொடுத்து அவளைப் பிரிய அவர் மனம் இடம் தரவில்லை.

வெளிநாட்டுக் கலாச்சாரத்துக்குப் பயந்து பலர் அப்படிச் செய்து இருக்கிறார்கள். ஆனால் படிக்கிற பிள்ளையின் படிப்பைக் கெடுத்து, அவர்களின் எதிர்கால நினைப்புகளைக் கருக்கி, சும்மா கலியாணம் ஒன்றைச் செய்து, கடமை முடிந்தது என்று திருப்திப்படுவதில் அர்த்தமில்லை என்று தோன்ற,
"இப்ப ஏன் அவசரப்படுவான்....? கொஞ்சம் பொறு! பயப்பிடுகிற அளவுக்கு ஒண்டும் நடக்கேல்லை, அவள் படிச்சு முடிக்கட்டும்." என்றார் தாமோதரன்.

நீலா கலங்கிய கண்களுடன் அவரைப் பார்த்தாள்.

வாழ்க்கை என்றால் பல பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும், ஒழித்து ஓட முடியாது. பார்ப்பம்... எங்கடை பிள்ளையள் எங்களை மிஞ்சிப் போகாதுகள், கவலைப்படாதை!" என்று சொல்லித் தேநீரை எடுத்தார்.

அப்போ ராகினி தன் அறையைவிட்டு வெளியே வந்தாள்.
"எங்கை போறாய்....?" கேட்டாள் நீலா.

"மெலானி வீட்டை..."

"ஒருடமும் போகவேண்டாம், வீட்டிலை இரு!" அதட்டினாள் நீலா.

மனைவியின் அடக்குமுறை தாமோதரனுக்குப் பிடிக்கவில்லை.
"இங்கை வா!" என்று ராகினியைக் கூப்பிட்டார்.

"போகவேண்டாம் எண்டால் நான் போகேல்லை." என்று தன் அறைக்குத் திரும்பி நடந்தாள் அவள்.

"ராகினி!" அழைத்தார் தாமோதரன்.

"என்ன?"

"இங்கை வா!"

மெதுவாக அவர் இருந்த இடத்துக்கு வந்தாள் அவள்.

"குடி!" என்று தேநீரைக் கொடுத்து, அவளைப் பக்கத்தில் இருத்தினார்.

"நானும் அம்மாவும் உன்னிலை உயிரையே வைச்சிருக்கிறம், அது உனக்குத் தெரியுமா?"
அவள் பேசாமல் இருந்தாள்.

"நீ கெட்டிக்காரி... நல்லாப் படிக்கிறாய்... படி! அப்பா உனக்கு எண்டால் உயிரையே கொடுப்பார், அது தெரியுமா உனக்கு?"

ராகினி மீண்டும் பதில் பேசவில்லை.

"சலங்கை வாங்கித் தந்தது அவன்தானே!" கேட்டாள் நீலா.

ஆம் என்ற அர்த்தம்படத் தலையை ஆட்டினாள் ராகினி.

சிறிதுநேரம் யோசனையுடன் கலந்த மௌனம் செறிந்திருந்தது.

"முரளி எங்கை...?" பெற்றோரைப் பார்த்துக் கேட்டாள் ராகினி.

"எங்களைக் கேட்டா...!" என்று நீலா கையை விரித்தாள்.

"முரளி எங்கை போறான் வாறான் எண்டு எங்களுக்கு எப்பிடித் தெரியும்?"

"முரளி வீட்டிலை இல்லை."

"உனக்கு எப்பிடித் தெரியும்?"

"போய்ப் பார்த்திட்டு வந்தனான்."

"எங்கையாவது போயிருப்பான்."

"நீங்கள் போக வைச்சிட்டீங்கள்!" குற்றம் சாட்டினாள் தகப்பனை.

"நான் என்னெண்டு போக வைக்கிறது?"

"ஹோலுக்குப் புறோக்கிராம் பார்க்க வந்தவனை அடிச்சுக் கலைச்சவை, பிறகும் என்ன செய்திருப்பினம் எண்டு

தெரிந்திருக்கத்தானே வேணும்... இல்லாட்டி பொலிஸிலை பிடிச்சுக் குடுத்திட்டீங்களோ?"

மகளின் குற்றம் சுமத்தும் வார்த்தைகள் நெஞ்சில் கோபத்தைப் பிறப்பித்தபோதும், நடந்த அசம்பாவிதத்துக்குப் பொறுப்பாளி தான்தான் என்பதை நினைத்தவராய் அமைதியாகப் பதில் சொன்னார் தாமோதரன்.

"எனக்கு உண்மையிலேயே என்ன நடந்ததெண்டு தெரியாது. கோகுலன் சொல்லித்தான் அடிபட்ட கதையே தெரியும்."

"அப்ப கோகுலன்மாமாவைக் கேளுங்கோ!"

"என்னத்தைக் கேட்கச் சொல்லுறாய்?" குறுக்கிட்டாள் நீலா.

"முரளி எங்கை எண்டதைத்தான்!"

"அவன் எங்கை போனால் உனக்கென்ன...?" கேட்டாள் நீலா.

"அவனை நான் பார்க்கவேணும்!" என்றாள் ராகினி.

"முரளி உன்னைவிட வயதிலை மூத்தவன், அவனை மரியாதை இல்லாமல் அவன் இவனெண்டு ஏனடி சொல்லுறாய்?"

"அப்பிடிச் சொல்லிப் பழகியிட்டுது!"

"பழகியிட்டுது எண்டால்....?"

"பழகியிட்டுது."

"அவனை எங்கையடி கண்டனி?"

"ஏனம்மா...?"

"இல்லை, சும்மா கேட்கிறன்."

"நான் முரளியைப் பார்க்க வேணும்."

"ஏன்?" கேட்டாள் நீலா.

"உன்ரை நினைப்புச் சரிப்பட்டு வராது, அப்பா சொல்லுறதைக் கேட்டு நட! இல்லாட்டி படிப்பும் இல்லை... மண்ணாங்கட்டியும் இல்லை எண்டு கலியாணம் கட்டி வைச்சிடுவம்."

"ஆரை....?"

"அதை ஏன் உனக்கு?"

"எனக்குக் கலியாணம் செய்து வைக்கப்போறம் எண்டு சொல்லுறியள் அம்மா, அப்ப ஆரை எண்டு கேட்கக்கூடாதோ?"

"கனடாவிலை இருக்கிற சின்னஅத்தானுக்கு!"

"ம்!" என்று சிரித்துக்கொண்டு எழுந்தாள் ராகினி.

"படங்களிலை வாறமாதிரி என்னெண்டாலென்ன செய்யுங்கோ, ஆனால் ஒருக்கா நான் முரளியைப் பார்க்க வேணும்."

"ஏன் பார்க்க வேணும்?"

"நான் அவனைப் பார்க்க வேணும்."

"ஏனடி?" என்று நீலா கையை ஓங்கினாள்.

"அடியுங்கோ! நல்லா அடியுங்கோ!"

"இவளை என்னப்பா செய்யிறது?" என்று செய்வதறியாது தாமோதரனைப் பார்த்தாள் நீலா.

"அவளை விடு, என்னெனன்டாலும் செய்யட்டும்."

ராகினி தன் அறையை நோக்கித் திரும்ப, "ஏன்... எங்கேயோ போகப்போறன் எண்டாய்.." கேட்டார் தாமோதரன்.

"போகலாமா...?" சிறைக்கைதி போன்ற உணர்வு வெளிப்பட்டது அவள் வார்த்தையில்.

---

தாமோதரனும் நீலாவும் கோகுலன் வீட்டுக்கு வந்தனர். யசோ அவர்களை வரவேற்று உபசரித்தாள்.

கோகுலன், "வாங்கோ!" என்று ஒற்றைச் சொல்லில் வரவேற்று விட்டு, முகத்தை "ம்" என்று வைத்துக்கொண்டிருந்தான். முரளிக்கு தான் ஆள் வைத்து அடிக்கவில்லை என்று தாமோதரன் அன்று தொலைபேசியில் கூறியும் அதை அவன் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைவிட முரளி முற்றுமுழுதாகக் கோகுலன் மீது குற்றம் சாட்டியிருந்தான். எல்லாவற்றையும் மனதில் நினைத்துப் பேசாமல் இருந்த கோகுலனைச் சமாளிக்க முனைந்தார் தாமோதரன்.

"தற்செயலாக நடந்துவிட்டது...... வேணு மெண்டு செய்யேல்லை, நீ வராமல் போகாமல் இருக்கிறதை எங்களாலை தாங்கிக் கொள்ளமுடியேல்லை, கடைப்பக்கம் வாறதையும் விட்டிட்டாய்."

கோகுலன் மௌனமாக இருந்தான்.

"எனக்கு என்ன நடந்ததெண்டே தெரியாதடா!" என்று நீலா தன் மனவருத்தத்தை வெளியிட்டாள்.
அப்போ யசோ,
"அந்தப்பிள்ளை பாவம், எவ்வளவோ பிரச்சனையிக்கை இருக்கேக்கை.... இது சரியில்லாத வேலைதானே! அவன்ரை சொந்தக்காரர் ஆரும் கிட்ட இருந்தால் விசயம் எப்பிடிப் பெருத்திருக்கும்?"

"அது சரி யசோ! எனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை எண்டெல்லே சொல்லுறன். அவன் சோமு தேவையில்லாத வேலை பார்த்து... சிக்!" என்றவருடைய வார்த்தைகளில் இயலாமை தொனித்தது.

"இப்ப என்ன செய்யிறது?" கேட்டாள் நீலா.

கோகுலன் தோள்மூட்டை உயர்த்தி, தெரியாது என்ற அர்த்தம் படக் கையை விரித்தான்.

"முரளி எங்கை போயிட்டான்?"

"தெரியாது, ஆரோ பிறண்டிட்டைப் போயிட்டு வாறன் எண்டு சொன்னான்."
"ராகினி ஒரே பிடியா நிற்கிறாள் அவனைப் பார்க்கவேணுமாம். சொன்னாள் நீலா.

“போடரிலை பிடிபட்டு, ஜெயிலிலை எண்டு அறிஞ்சம்.” யசோ கூறினாள்.

தாமோதரனும் நீலாவும் வாயடைத்துப் போயினர்.

“இனி ஒண்டும் செய்யமுடியாது, சிலோனுக்குத்தான்.”

“ஏன் விசா இருக்குத்தானே!”

“இந்த லோயர்மாரை நம்பிக் காசைக் கட்டினதுதான்... ஒண்டும் நடக்கேல்லை.”

“வடிவாத் தெரியாமல் ஒண்டும் சொல்லமுடியாது. நான் தெரிஞ்சாக்கள் மூலம் விசாரிக்கச் சொல்லியிருக்கிறன். சிக்கல் தான்!” சொன்னான் கோகுலன்.

“என்ன நசல் சிக்....!” என்று தாமோதரன் ஒருபோதுமில்லாதவாறு கவலைப்படுவதைக் கண்ட கோகுலனின் கோபம் தணிந்தது.

“அண்ணன் நீங்கள் ஏன் கவலைப்படுகிறீங்கள்? உங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லை. விசா முடிஞ்சு போ எண்டால், போகத்தான் வேணும்... இஞ்சத்தைச் சட்டம் அப்பிடி...!”

“முதலே அந்தப்பிள்ளை எங்கையன் மாறியிருக்கலாம்.” என்று நீலா சொல்ல,
“இப்பிடி எத்தினைபேரை அக்கா அனுப்பிப்போட்டாங்கள். அங்கை போயிருக்கலாமெண்டு ஜேர்மன்சட்டம் சொல்லுது எண்டு அனுப்பிறாங்கள். ஜேர்மனிஜெயிலுக்கை சிலதுகள் தூங்கியோ என்னவோ செத்துப்போயிருக்குதுகள்!”

“ஓ! இப்ப கிட்டடியிலையும் ஒரு பெடியன்.... சொல்லவே நாக்கு நடுங்குது, எவ்வளவு கஸ்டத்தை எங்கடை சனம் அனுபவிக்க வேண்டிக்கிடக்கு!”

“கோகுலன்! இவளொருத்தி வேறை சாப்பிடாமல், தண்ணி குடிக்காமல் உயிரை வாங்கிறாள்... முரளியைப் பார்க்க வேணுமாம்.” நீலாவின் கண்களில் ஈரம் தெரிந்தது.

"இனி அக்கா ஒண்டும் செய்யேலாது.... அவன் இஞ்சை வரமாட்டான். ஏதும் சொல்லி ராகினியைச் சமாளியுங்கோ!"! என்று கையாலாகாத நிலையில் சொன்னான் கோகுலன்.

"ஒண்டும் தெரியாத பிள்ளையெண்டு நினைச்சா, இப்பிடி ஒரு கல்லைத் தூக்கிப் போட்டிட்டு இருக்கிறாள். இந்தக்காலத்துப் பிள்ளையளை என்னண்டு நம்பிறது? பிள்ளை பிள்ளை எண்டு செல்லமாக வளர்க்க, இப்பிடி ஒரு வில்லங்கத்தை வாங்கிக் கொண்டு வந்து நிக்கிறாள்." என்று நீலா விக்கிவிக்கி அழத் தொடங்கிவிட்டாள்.

"அக்கா! நீங்கள் என்ன? பிள்ளையள் ஒருவயது வர ஒருத்தரை ஒருத்தர் விரும்புறது நோர்மல்தானே! ஏன் சிலோனிலை காதல் இல்லையே...? காதல்... கலகம் எண்டது வாலிபத்தில் பூக்கும் முள்மலர்கள்.... யாரை யார் குறை சொல்லுறது...?" என்று யசோவும்,
"ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ... நடக்கிறது நடக்கும்!" என்று கோகுலனும் ஆறுதல் சொன்னார்கள்.

"அவளுக்கு எங்கையாவது பார்த்துக் கலியாணத்தைச் செய்து வைக்கலாம் எண்டு யோசிக்கிறம்."

"அவசரப்படாதேங்கோ அக்கா! ராகினி கெட்டிக்காரி, தானாகவே மனம்மாறி வழிக்கு வருவாள். கலியாணம் அது இது எண்டு இப்ப அவள் படிப்பைக் கெடுத்துப் போடாதேங்கொ!" என்று ஆலோசனை கூறினாள் யசோ.

அப்போ கோகுலனும், "என்ன அக்கா நீங்கள், படியாத சனங்கள் மாதிரி.... அறிவில்லாமல் கதைக்கிறீங்கள். அவள் எவ்வளவு கெட்டிக்காரி... படிச்சு, பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டியவளை.... சும்மா குழப்பாதேங்கொ!" என்று கோகுலன் சொல்ல, அவர்கள் மனம் தேறி வீடு திரும்பினர்.

"பிள்ளையளை வளர்க்கிறது சரியான கஸ்டம்... எவ்வளவு ஒழுங்காக வளர்த்தாலும் சிலதுகள்... சிக்.... தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூன்றுகால் எண்டு பிடிவாதம் பிடிக்குங்கள். தாய், தகப்பன் செய்யிறது நன்மைக்குத்தானே எண்டதை நினைக்காதுகள்." சொன்னாள் யசோ.

"நாங்கள் மட்டும் என்ன குறைவே....? அப்பா, அம்மா படி! படி! எண்டு சொல்லக் கேட்டமா? களவாப் படத்துக்குப் போய், கள்ளப் பனை இறக்கி.... இப்ப வயது ஏற விளங்குது!"

"நீங்கள் அப்பிடி..... ஆனால் நான் அப்பிடியில்லையே! அப்பா, அம்மாவின்ரை சொல்லைக் கேட்டு ஒழுங்கா இருந்தன், காதலிக்கேல்லை.. களவாப் படத்துக்குப் போகேல்லை.... ஆனால் என்ன நடந்தது...? கலியாணம் பேசி அனுப்பி வைச்சினம், எங்கடை பிள்ளை வெளிநாட்டிலை நல்ல வாழ்க்கை வாழப் போகுது எண்டு... விதம் விதமான கனவுகளுடன் பயணம் ஏற்றி விட்டினம்... இங்கை வந்ததும் எல்லாம் தலைகீழாப்போச்சுது... பார்க்கேல்லையா?"

"பார்க்கேல்லை.... என்ன தலைகீழாப்போச்சு.... ஆரம்பம் அப்பிடி இப்பிடி எண்டிருந்தாலும், இப்ப எல்லாம் ஒகே தானே யசோ!"

"நீங்கள் சொல்லுவீங்கள்.... எனக்குள்ள குறை உங்களுக்கு என்ன தெரியும்?"

"உனக்கென்ன குறை....? நல்லாத்தானே இருக்கிறாய்!"

"கலியாணம் எண்டு வந்து ஏமாற்றப்பட்டன்... இது குறை இல்லையா?"

"ஏமாற்றப்பட்டாலும் உன்னை நான்கலியாணம் செய்யேல்லையா?"

"சுகமாக வந்த நான் தீராத வருத்தக்காரியானேனே... இது குறை இல்லையா?"

"வருத்தத்தைத்தான் குணப்படுத்தக்கூடியதாய் இருக்கே... இப்ப உம்மை ஆர் வருத்தக்காரி எண்டது...?"

"பிள்ளை இல்லாமல் இருக்கிறமே... இது குறை இல்லையா? இந்தக்குறை எப்பிடித் தீரும்?"

"யசோ!" என்று அழைத்து, அவளை ஆதரவு கனியத் தடவி, சோகத்தைத் தணிக்க முனைந்தான் கோகுலன்.

"குறை இல்லாத மனிசன் ஆர் இருக்கிறான்? எல்லாருக்கும் ஏதோ ஒரு குறை இல்லாமலில்லை. சிலர் அதைப் பெரிதுபடுத்தி

அழுதுகொண்டு, இருக்கிற சந்தோசத்தையும் கெடுத்து வாழ்க்கையை அழித்துக் கொள்ளுவினம்.... சிலர் இருக்கிற குறைகளைப் பெரிதுபடுத்தாமல் வாழ்க்கையை வாழக்கூடிய அளவுக்கு மகிழ்ச்சியோடு வாழ்வார்கள், எல்லாம் மனம்தான்."

"நீங்கள் ஆம்பிளை, கவலையை அடக்கிக்கொண்டு வாழ முடிகிறது. பொம்பிளை நான்.... கவலைப்படாமல் இருக்க முடியேல்லை."

"யசோ!"
அவள் அவன் தோளில் சாய்ந்தாள். கண்களில் கண்ணீர் பனித்தது.

"எங்களுக்கு ஒரு குறையுமில்லை, ஏன் அழுகிறீர்...? ஜேர்மனிக்கு வந்ததாலை உம்முடைய வருத்தம் ஆரம்பத்திலையே கண்டு பிடிக்கப்பட்டு... கிட்னியும் மாற்றி, சுகமாக இருக்கிறீர் தானே! படிச்சு வேலையும் செய்யிறீர்.... ஏன் கவலைப்படுகிறீர்?"

யசோ பேசாமல் இருந்தாள்.

"அப்பா, அம்மா எண்டு அன்போடு கூப்பிட இரண்டு பிள்ளையள் இலங்கையிலை இருக்கினம்..... இந்தப் பெருமை வேறை ஆருக்கு இருக்கு....! அங்க....? நீர் கவலைப்பட்டால் என்னாலை தாங்கிக்கொள்ள முடியாது.. பிளீஸ்!" என்று சமாதானப் படுத்தினான் கோகுலன்.

தொலைபேசி மணி அடித்தது.

கோகுலன் எடுத்தான்.
மறுமுனையில் முரளி. இலண்டனில் இருந்து கதைத்தான். கோகுலனால் நம்பவே முடியவில்லை.

"ஒண்டுக்கு இருக்க விட்ட இடத்திலை மாறியிட்டன், மற்றப் பெடியன் இன்னும் பொலிசிலைதான். நான் லொறி ஒன்றிலை ஏறி வந்து சேர்ந்திட்டன்.... பிறகு ஆறுதலாகக் கதைக்கிறன்."
தொலைபேசித்தொடர்பு முறிந்தது.

யசோ ஆவலுடன் கோகுலனைப் பார்த்தாள். முரளி என்றதும் பக்கத்தில் போய் நின்றிருந்தாள். பாவம் பெடியன் என்று இரக்கத்துடன் துடித்தது அவள் மனம்."கடவுளே! நான் பயந்து

போயிருந்தன். என்னனன்டு விட்டவங்கள்" ஆச்சரியத்தடன் மகிழ்ச்சி துளிர்க்கக் கேட்டாள் யசோ.

"முரளி, ஆள் கெட்டிக்காரன்.... இல்லாட்டி மீளேலாது. மற்றப் பெடியனை அனுப்பப் போறாங்களாம், இவனுக்கு இடையிலை ஒண்டுக்கு வந்ததிலை இப்ப லண்டனிலை நிக்கிறான்."

"எங்களிலை பழி வரப் போகுதெண்டு பயந்து கொண்டிருந்தன். இந்தமாதிரியான விசயங்கள் வாய்ப்பான் பொரிப்பான் தானே! இது முழுக்க முழுக்க முரளியின்ரை கெட்டித்தனம். ஜேர்மன் பொலிசிலை பிடிபட்டு நழுவுறது எண்டால்...... ஏதோ கடவுள் செயல்...!" என்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டவன், "இது தாமோதரனண்ணை வீட்டுக்குத் தெரியவேண்டாம்" என்றான்.

--------------------

மனோகரி படம் பார்த்துக்கொண்டிருந்தாள். சித்தி, வாழ்க்கை தொடர்நாடகம், அரட்டைஅரங்கம் என்று பல கசற்றுகள் மேசையில் இருந்தன. எதைப் பார்ப்பது என்று தெரியாமல் அவள் தவித்தாள்.

வடிவேலுவுக்கு நாடகங்கள், படங்கள் பார்க்கும் ஆவல் இருந்தும் அவனுக்கு நேரம் கிடைப்பது அரிது என்பதால், அப்பப்போ நல்லது என்று நண்பர்கள் கூறியதை சமயம் வரும் போது பார்ப்பதுண்டு.

அவனுக்குப் பிள்ளைகளின் வாழ்க்கை முக்கியமாகப்பட்டது. அவர்கள் படிக்கும்போது தெரியாதவற்றை விளங்கப்படுத்துதல், படங்கள் கீறும்போது அதில் தனக்குத் தெரிந்த நுணுக்கங்களைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தல், சிலநேரங்களில் தானும் சேர்ந்திருந்து படங்கள் வரைதல் என்று அவர்களோடு இணைந்து கொள்வான்.

சுவர்ணா வரைதல் போட்டிகளில் பல பரிசில்களைப் பெற்று இருந்தாள். படிப்புடன் கைநுட்பங்களிலும் அவள் சிறந்து விளங்கினாள்.

மகனோ, மகளோ இப்படியான கலையார்வமான விளையாட்டில் ஈடுபட்டிருக்கும்போது, தனக்கு ஓய்விருந்தால் தானும் அவர்களுடன் சேர்ந்து கொள்வான். இன்று அவ்வாறே வடிவேலு பிள்ளைகளுடன் தன் நேரத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் போது, நிகிலன் பள்ளியில் நிகழ்ந்த பகிடி ஒன்றைச் சொல்ல, மூவரும் சற்று உரக்கவே சிரித்துவிட்டார்கள்.

மனோகரிக்கு அது சினமாகவே இருந்தது. முறைத்துப் பார்த்தவள் பொறுக்காமல் வடிவேலுவுக்கு ஏசியும் விட்டாள்.

"குழந்தைப்பிள்ளை மாதிரி விளையாடிக் கொண்டிருக்கிறது பத்தாதெண்டு, நாய் மாதிரி வள் வள் எண்டு குரைக்கிறீங்கள்." என்று நையாண்டி செய்து நெளித்தாள். மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருந்த மூவரும், புலியின் உறுமல் கேட்டு, பயந்து பதுங்கும் மான்களைப் போல அடங்கிப்போயினர்.

சிறிதுநேரம் தொலைக்காட்சியின் ஒலிமட்டுமே கேட்டது. பிள்ளைகளைத் தனிய விளையாடச் சொல்லிவிட்டு, வடிவேலு எழுந்து சென்று, ஏதோ தனது வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

"என்ன செய்யிறீங்கள் உங்கை? இப்ப நான் படம் பார்க்கேக்கை பார்க்காமல் சும்மா பொழுதைப் போக்குவீங்கள், பிறகு தனியாப் பார்க்க வெளிக்கிடுவீங்கள். என்னெண்டு உங்களோடை வாழுறது....? விதி எண்டிட்டுக் கிடந்து அழுந்த வேண்டிக்கிடக்கு." என்ற மனோகரியின் வார்த்தைகள், மௌனமாக இருந்த அவனுக்குக் கோபத்தைக் கிளறிவிட,
"நீரும் பிள்ளையளோடை மினக்கெடமாட்டீர்... என்னையும் விட மாட்டீர்.... பிள்ளையள் என்ன செய்யுதுகள்.... என்ன படிக்குதுகள் எண்டு மற்றத்தாய்மார் அக்கறை காட்டுறமாதிரி நீர் செய்யிறீரோ? கண்ட நிண்ட படங்களையும் நாடகங்களையும் அள்ளிக்கொண்டு வந்து இராப்பகலா ரிவி பார்த்துக் கொண்டிருக்கிறீர்."

"இராப்பகலா ரிவி பார்க்கிறனோ....! வீட்டுவேலை ஆர் உங்கடை விமலாராணியே வந்து செய்யிறா....?"

"இப்ப ஏன் விமலாவை இழுக்கிறீர்.... அங்க...." கோபத்துடன் மனைவியை நோக்கி வந்தவனை,
"அப்பா!" என்ற சுவர்ணாவின் அழைப்பு சாந்தப்படுத்தியது.

பிள்ளைகளுக்கு முன் சண்டை போடுவதில்லை என்று அவன் பல தடவைகள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளுவான்.

ஒரு கை வீசி ஒலி எழும்பாதுதான், ஆனால் அது கூரிய ஊசி கொண்டு இன்னொருவர் மார்பிலே குத்த வந்தால் வேறு ஒரு கை மறிக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் இரத்தம் சொட்டி வேதனையால் துடிக்க வேண்டும்.

வடிவேலு பொறுமையை வரவழைக்க வெகு சிரமப்பட்டான். பாத்றூமுக்குட் சென்று கதவைச் சாத்திவிட்டு, "கடவுளே!" என்று வேதனையுடன் வாய்விட்டுக் குளறினான்.

மனோகரி அழகானவள், அவன் கல்யாணம் செய்தபோது அன்பாகவும் இருந்தாள்... ஆனால் இப்போ தினந்தினம் அவள் வார்த்தைகளால் அவனைக் குத்தும்போது அவள் அழகு தெரியவில்லை. றோஜாவின் கூரிய முட்கள் அவன் கண்களுக்குத் தெரிந்தன.

"சனியன் பிடிப்பான் நான்... ஏன் தான் இவளைக் கட்டினேனோ!" என்று தன்மீதே கோபத்தைக் கொட்டினான்.

'எங்கையாவது போய்ச் செத்துத் தொலைந்தால்....' என்றுகூட எண்ணினான். பிள்ளைகளின் நினைப்பு வந்தது.

கண்களில் படிந்திருந்த கண்ணீரையும் முகத்தையும் துடைத்து விட்டுக் கண்ணாடியைப் பார்த்தான். அதில் தெரிந்த அவன் முகம் அவனைப் பார்த்து,
'வடிவேலு நீ தோற்றுப் போயிட்டாய்... நல்லாத் தோற்றுப் போயிட்டாய்.... நீ என்ன செய்யமுடியும்? இது கடவுளும் சேர்ந்து உனக்குத் தரும் தண்டனை அனுபவி.. நல்லா அனுபவி!' என்றது.

திருமணம் என்றது எவ்வளவு இனிமையான ஒரு பெரும் கொண்டாட்டம். வாலிப வயதிலிருந்தே ஒவ்வொரு மனிதனும் இதுபற்றி எவ்வளவு கற்பனைகளை, கனவுகளை உள்ளம் நிறையக் கட்டிவைத்திருப்பான். எத்தனை பேருக்கு இந்தக் கற்பனைகள் நிறைவாகியிருக்கு!"

குடும்பமே ஈழம் ஆகி யுத்தம்... யுத்தம் என்று உத்தரிக்கும் மனிதர் எத்தனை பேர்?

கணவன் மனைவியின் கருத்துமோதல்களை யாருக்குச் சொல்லி மனம் ஆறுவது?

வடிவேலு ஆறுபேருடன் கூடப்பிறந்தவன்... அப்பா, அம்மா எல்லோரும் இருக்கிறார்கள். ஆனால் வேண்டாமென்று இருக்கிறார்கள். முதல் கலியாணத்தில் ஏற்பட்ட விரிசல் அது மீண்டும் ஒட்டவில்லை.

தொடர்புகள் அப்பப்போ கடிதமாக, தொலைபேசிக்குரலாக ஏற்பட்டாலும் நெஞ்சத்துக் குமுறல்களைக் கொட்டிக் குளறியழ அவனுக்கு ஒரு உறவில்லை.

'இந்த உலகத்திலே ஏன்டா நீ வாழ வேண்டும்...? போடா.... போய்ச் செத்துத்தொலை!' என்று கண்ணாடியில் அவன் முகம் விரட்டியது.

நிகிலன், சுவர்ணா எவ்வளவு அன்பான பிள்ளைகள்... அவர்களைத் தவிக்கவிடுவதா? அப்பா இல்லாமல் அவர்கள் துடிப்பதா?

'நீ ஒரு பாவப்பட்ட பிறவியடா! உன்னாலை ஒன்றுமே செய்ய முடியாது, உனக்கு இவ்வளவுதான்... கிடந்து உத்தரி!' என்று அவன் மனதிலிருந்து எழுந்த குரல் கண்ணாடி விம்பத்தில் ஒலித்து ஓய்ந்தது.

குளியலறையைத் திறந்துகொண்டு வெளியே வந்து ஹோலுக்குட் சென்றான். அங்கே மனோகரியைக் காணவில்லை. நிகிலன் விக்கிவிக்கி அழுதுகொண்டு இருந்தான். சுவர்ணா ஏதும் செய்ய மனமில்லாமல் சோர்ந்து போயிருந்தாள்.

படுக்கையறையைத் திறந்தான். மனோகரி போர்த்து மூடிக் கொண்டு படுத்திருந்தாள்.

“ஏன் அழுகிறாய்?“ என்று நிகிலனைக் கேட்டான் வடிவேலு.

“அம்மா சத்தம் போடவேண்டாமெண்டு அடிச்சுப் போட்டா!“ என்று அழுகையைத் தொடர்ந்தான்

கொஞ்சம் மெதுவாக் கதைக்கிறது." என்று வடிவேலு மகனுக்கு ஆறுதல் சொல்ல, சுவர்ணா
"அப்பா! நாங்களும் விளையாடத்தானே வேணு ம்" என்று தம்பிக்குச் சாதகமாகக் கருத்துச் சொன்னாள்.

"உங்கடை றூமுக்குள்ளை போய் விளையாடலாம்தானே!"

"அப்பா! அதுக்கை எங்கை இடம் கிடக்கு? இரண்டு கட்டிலும் அலுமாரியும் முழு இடத்தையும் எடுத்துப்போட்டுது, பத்தாததுக்கு தோய்த்த உடுப்புக் காயப்போடுறதும் அதுக்கை!" என்று சுவர்ணா விளக்கம் கொடுத்தாள்.

வடிவேலுவுக்கு இவை தெரிந்தவையே. ஒரு பிள்ளைகளின் அறை கொண்ட சிறிய வீடு அது. வசதியான வீடு எடுக்கிறதென்றால் வாடகை அதிகம், கிடைப்பதும் அரிது, தேட வேண்டும், பிள்ளைகள்பாடசாலை போய்வர வசதியாக இருக்க வேண்டும் என்று பலதையும் யோசித்து, அந்த வீட்டிலேயே தொடர்ந்து இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

"ஓகே!" என்று பிள்ளைகளைச் சமாதானப்படுத்திய வடிவேலு, "சுவிம்மிங் போவமா?" என்று கேட்டான்.

"ஓம்! ஓம்!" என்று நிகிலன் அழுகையைவிட்டு, உற்சாகமாக எழுந்து நின்று துள்ளினான்.

"போவம் அப்பா! பிற்ற...!" என்று சுவர்ணாவும் தன் ஆர்வத்தை வெளியிட்டாள்.

"போய் அம்மாவைக் கேளுங்கோ!" என்று பிள்ளைகளை ஏவினான் வடிவேலு.

"நான் வரேல்லை!" என்று சினத்துடன் மனோகரியிடமிருந்து பதில் வந்தது.

வடிவேல் நீச்சல்உடுப்புகளை எடுத்துக்கொண்டு, பிள்ளைகளுடன் காரிலேறிப் புறப்பட்டான்.

------------------

மனோகரியின்அக்கா தாயாரை ஸ்பொன்சர் செய்து ஜேர்மனிக்கு கூப்பிட்டிருந்தா. அவர்கள் வீட்டில் வசதிக்குறைவு என்பதால் மனோகரிவீட்டில் தங்கியிருந்தா.

மாமி தங்களுடன் இருப்பதையிட்டு வடிவேலுவுக்கு ஒரே குதுாகலம். அவவின் விமானச்செலவு முதற்கொண்டு எல்லாச் செலவும் ஏற்கனவே அவன் தலையில் இறங்கியிருந்தும் அதை எல்லாம் ஒரு பொருட்டாக அவன் நினைத்ததேயில்லை. தன் தாயின் இடத்தில் மாமி மீனாட்சியையும் அன்புடன் மதித்தான் அவன்.

ஆனால்.....
மனோகரி தன் தாயிடம் வடிவேலுபற்றி இல்லாததும் பொல்லா ததும் சொல்லித் தாயைத் தன் வசமாக்கிக் கொண்டாள்.

தாய், பிள்ளைகளுக்கு முன்தகப்பனைப் பற்றிக் குற்றம் கூறக்கூற அவர்களின் மனம் குழம்பிச் சங்கடப்பட்டது.

தகப்பன் அவர்களின் நலன் கருதி வாங்கிக் கொடுக்க மறுத்த விளையாட்டுப்பொருட்களை, தாயும் மகளும் பிள்ளைகளின் வாயை மூட வாங்கிக்கொடுத்தும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும் அவர்கள் போக்கில் நடக்கவிடவும் தலைப்பட்டனர்.

நாளாக மனோகரியும் தாயும் கூட்டாகவே வடிவேலை வார்த்தை களால் இராப்பகலாக மாறிமாறிக் குத்தினர்.

ஒருநாள் சுவர்ணா தாயின் அனுமதியுடன் டிஸ்கோவுக்குப் போகப் புறப்பட்டாள்.

வடிவேலு மகன் நிகிலனின் பாடசாலை வீட்டுவேலைகளைப் பார்த்து, அவனுக்குத் தெரியாதவற்றைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

பிள்ளைகள் முன்புபோல அவனிடம் நெருங்கிப் பழகாமல் சற்றுப் பயத்துடனே விலகி நடப்பதை அவன் உணர்ந்தான்.

இன்றுகூட வீட்டுவேலை செய்ய நிகிலன் பத்துத்தடவைகள் கூப்பிட்ட பின்புதான் தகப்பனிடம் வந்திருந்தான்.

மகள் சுவர்ணா என்ன செய்தாலும் தகப்பனிடம் தானாகவே சொல்லிவிடுவாள். இப்போ சொல்வதில்லை. கேட்டால் மட்டும் சொல்வாள். அழகாக வெளிக்கிட்டு மகள் போவதைக் கவனித்தும் குறுக்கே கேட்காமல், மனதுக்குட் கொந்தளிக்கும் குமுறல்களையும் அடக்கிக்கொண்டு, பாடம் சொல்லிக் கொடுப்பதில் கவனத்தைச் திருப்பினான் வடிவேலு.

மகனோ பாடத்தில் சிந்தனையில்லாமல் அரைகுறையாகக் கவனமின்றி இருந்தான். இது வடிவேலுவுக்கு சினத்தை ஊட்டிய போதும், பொறுமையை வரவழைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் விளக்கம் கூறி, மகனைப் படிப்பின் வசம் ஈர்க்க முயற்சித்தான்.

“தலையிடிக்குது அப்பா!“ என்று நிகிலன் பலமுறை சாக்குச் சொல்ல, இறுதியில், “சரி போ, நாளைக்குப் படிக்கலாம்“ என்று அவனை அனுப்பிவிட்டு நேரத்தைப் பார்த்தான். ’இரவுவேலை, நேரமாகிறது.... வெளிக்கிடச்சரி' என்று நினைத்தவனாய் வேலை உடுப்புகளை எடுக்கப் படுக்கையறைக்குச் சென்றான்.
கதிரையில் கழற்றிப் போட்டிருந்த உடுப்புகளைக் காணவில்லை. தேடினான்.
ஊத்தை உடுப்புக்கூடைக்கு மேல் கசக்கி வைக்கப்பட்டிருந்தது. அவற்றைக் கையில் எடுத்தவாறு மனோகரியைக் கூப்பிட்டான்.

சமையலறைக்குள் இருந்தபடி, “என்ன....“ என்றாள்.

“ஒருக்கா இஞ்சை வாரும்!“

“ஏன்?“

“இஞ்சை வாரும்!“ என்றான்.

“அவள் வேலையாய் இருக்கிறாள்.... என்னெண்டு சொல்லுமன்!“ என்று இடையில் புகுந்தா மாமி மீனாட்சி.

“வேலைக்குப் போடுற சேட்டை ஆர் இப்பிடிக் கசக்கிப் போட்டது?“ கோபமாகக் கேட்டான் வடிவேலு.

“வேலைக்குப் போடுற சேட்டுத்தானே.... கசங்கினால் என்ன?“ எதிர்க்கேள்வி கேட்டா மாமி மீனாட்சி.

"அது சரி.... வேலைக்குப் போறவன் எப்பிடியும் போகலாம்." என்று தன் மனக்கசப்பைக் கொட்டிவிட்டு, அலுமாரியைத் திறந்து வேறொரு சேட்டை எடுத்து தெறிகளைக் களற்றினான் வடிவேல்.

"என்ன வேலைக்குப் போடப் புதுசா எடுக்கிறீரோ?"

"புதுசில்லை.... வேலைக்குப் போடுற சேட்டுத்தான்."

"இப்பிடி இரண்டுநாளைக்கொரு உடுப்புப் போட்டா ஆர் தோய்க்கிறது?"

வடிவேலுவுக்குக் கொதிதான் வந்தது. 'இதென்னடா புதுச் சங்கடம். மனிசன் வேலைக்குப் போக வெளிக்கிட்டால் குறுக்கை வந்து வக்கீல் மாதிரி இவ விசாரணை நடாத்திக் கொண்டிருக்கிறா...' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு பேசாமல் தன் அலுவல்களைப் பார்த்தான்.

இதைப் பார்த்துவிட்டு நிகிலன், சமையலறைக்குள் நின்ற தாய் மனோகரியிடம், "அம்மம்மாவும் அப்பாவும் சண்டை பிடிக்கினம்.." என்றான்.

மனோகரி வெளியே வந்தாள்.

"ஏன் அம்மாவோடை சண்டை பிடிக்கிறியள்.... பிடிக்காட்டிச் சொல்லுங்கோ ஒரேயடியா நாங்கள் எங்கையாவது போறம். என்னோடை சண்டை பிடிக்கிறமாதிரி அம்மாவோடையும் தொடங்கியிட்டியள். இனி என்னாலை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது." என்று கோபமாகச் சீறினாள் அவள்.

வடிவேலுவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"இப்ப நீ என்ன விளங்கிக் கதைக்கிறாய்..... அங... பார்... என்ரை சேட்டைப் படுத்தியிருக்கிற பாடு! வேலையிலை நாலு பேருக்கு முன்னுக்கு நான் நிக்கிறேல்லையே?"

"பெரிய கவுணர்வேலை பார்க்கிறார் என்ரை மருமகன்... கசங்காத சட்டை போடப்போறார்!" நளினமாக நெளித்தா மாமி.

"நான் வேலைக்குப் போகாட்டி, இங்கை அடுப்புக்கை பூனை படுக்கும். வந்திட்டா இங்கை வக்காளத்து வாங்க!"

“அம்மாவோடை என்ன கதைக்கிறீங்கள்? வயது மூத்தவ எண்டும் பார்க்காமல்... மரியாதையில்லாமல்.... உங்கடை உழைப்பை நம்பி நாங்கள் ஒண்டும் இங்கை கையேந்தி வாழேல்லை, எங்களுக்கும் ஜேர்மன் சட்டங்கள் தெரியும்.“

“உறைக்கச் சொல்லடி! உதுக்குத்தான் மூத்தவளிட்டைப் படிச்சுப் படிச்சுச் சொன்னனான் படிச்ச மாப்பிள்ளை பார்க்கச்சொல்லி... கேட்டிச்சினமே....? என்ரை சொல்லைக் கேட்டிச்சினமே? இப்ப பார்! எல்லாம் ஊழ்வினை....“ என்று மீனாட்சி தலையிலே அடித்துக்கொண்டாள்.

வடிவேலுவுக்கு ஆத்திரமும் கவலையும் பொங்கியெழ, என்ன செய்வது என்று தெரியாமல் தன் உணர்வுகளை இழந்து கோபாவேசமாய் நின்றான்.

'கண்ணுக்குப் பட்டதையெல்லாம் அடித்து உடைத்தாலென்ன...? தலையைக் கொண்டு போய்க் கண்ணாடியில் மோதி உடைக்கவோ....? ரிவியைத் தூக்கி எறியவோ...?'
அந்த ஒரு வினாடியில் எத்தனையோ அனர்த்தங்கள் நடந்து முடிந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. கோபாவேசமாக கொதித்துக் கொண்டிருந்த அவன் கண்களில், சுவரில் தொங்கிய தாயின் புகைப்படம் தென்பட்டது.

இறந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.
'என்ரை குஞ்சு பொறடி.... கோபம் குடியை அழிக்கும். பொறு குஞ்சு! பொறுத்தார் அரசாள்வார்.... அமைதியாகு!' என்று அவன் அம்மாவின் படம் எடுத்துரைப்பது போலப் பிரமை உண்டானது.

வடிவேலு தன் கோபத்தைச் சிரிப்பாக மாற்றினான். வாய்விட்டுச் சிரித்தான்.

“மாமி! படிச்ச மாப்பிள்ளையாப் பார்த்து நீங்கள் உங்கடை மகளுக்குக் கட்டிக் கொடுத்திருக்கலாம். ஆரும் வேண்டாமெண்டு சொல்லேல்லை. ஏன் எனக்குக் கட்டிக் கொடுத்தனீங்கள்? என்ரை படிப்பு உங்களுக்குப் படிப்பாத் தெரியேல்லை. விரலுக்கு ஏற்ற வீக்கம் எண்டதுக்கமையத்தான் நாங்கள் வாழுறம்... நீங்கள் தான் எட்டாக்கொம்புக்குத் தாவப் பார்க்கிறியள்!“

"சும்மா கதைக்காதையும்.... என்ரை பிள்ளை படிச்சளவுக்கு நீர் படிக்கேல்லைத்தானே!"

"படிக்கேல்லைத்தான்.... அதுக்காக அவவை எனக்குத் தாலி கட்டச்சொல்லுறீங்களோ!"
"ஓ! கட்டினால் என்ன?"

"அம்மா, தேவையில்லாத கதை எங்களுக்கு வேண்டாம் வாங்கோ!"

"விட்டால் காதும் குத்தி, தலையிலை பூவும் சூடிப் போடுவீங்கள்."

"அப்பிடி நாங்கள் செய்யமாட்டம், நீர்தான் என்ரை பிள்ளையை ஒண்டும் தெரியாதவள் மாதிரி நடத்துறீர். பொம்பிளைக்குச் சுதந்திரம் இருக்குத் தம்பி! அவள் சொல்லுறதையும் நீர் கேட்டு நடக்கவேணும்! அவள் இரண்டு வகுப்பு மேலை படிச்சவள். உம்மைவிடக் கூடத் தெரியும்."

"என்ரை மனைவி என்னைவிடப் படிச்சவள் எண்டது எனக்குப் பெருமை... நாலு பேருக்கு முன்னுக்கு கூட்டிக்கொண்டு போகேக்கை எனக்குப் பெருமையாயிருக்கு.... ஆனா அப்பிடிப் போகேக்கை, என்ரை புருசனைவிட எனக்கு நிறையத் தெரியுமெண்டு என்ரை மனிசி நினைத்து, தலை நிமிர்த்திக் கொண்டு போனால் அது கர்வம்.... நல்லாய் இருக்காது!"

"எது நல்லாய் இருக்காது...... நீர் ஒரு குடிகாரன் எண்டு தெரிஞ்சும் என்ரை பிள்ளை உம்மைக் கட்டிச்சுதே... நீர் முதலே கலியாணம் செய்து விட்டவர் என்று தெரிந்தும் உம்மைக் கட்டினாளே என்ரை பிள்ளை.... இது நல்லாயிருக்கா...? என்ன சொல்லுறீர்?"

"என்னைக் கலியாணம் செய்யச் சொல்லி நான் உங்கடை மகளின்ரை காலிலை விழுந்தனானே... என்ன கதைக்கிறீங்கள்? உங்கடை மகள்தான் என்னை விரும்புறன் எண்டு கேட்டாள். உங்களின்ரை மூத்தமகளும் மருமகனும் வந்து முறையாக் கேட்டுத்தான் கலியாணம் நடந்தது.தெரியாட்டித் தெரிஞ்சு கொள்ளுங்கோ! எனக்கு ஏற்கனவே கலியாணம் ஆனதும் சரி, நான் குடிக்கிறதும் சரி மனோகரிக்குத் தெரியும். நான் என்ரை வாயாலையே சொன்னனான். சொல்லேல்லையோ எண்டு

கேளுங்கோ! சும்மா வாய் கிடக்கே எண்டு கண்டபடி உளறக்கூடாது."

"நானும் அம்மாவும் கதைக்கிறது உங்களுக்கென்ன உளறுற மாதிரியே கிடக்கு!"

"ஓ! உளறுற மாதிரியும் கிடக்கு, உறுமுற மாதிரியும் கிடக்கு... நான் ஒரு பேயன் எண்டு நினைச்சுக்கொண்டு நீங்கள் பித்தலாட்டம் ஆடுறீங்கள்.....!"

"ஆர் பித்தலாட்டம் ஆடுறது..... நீங்களோ...? நாங்களோ?"

"கேளடி... நல்லாக்கேள்!" என்று உற்சாகமூட்டினா மாமி.

"என்னத்தைக் கேக்கப் போறீங்கள்? கேளுங்கோ!"

"பித்தலாட்டம் ஆடுறதெண்டு சொல்லுறீங்கள்... அப்பிடி ஆர் ஆடுறது?"

"நீயும் மாமியும்தான்.... வேறை ஆர்?"

"ஏன் அப்பிடிச் சொல்லுறீங்கள்?"

"போடி..... போய் உன்ரை அலுவலைப் பார்! குடிகாரன் குடிசிட்டு உளறுற கதைக்கெல்லாம் காரணமே சொல்லுவான்? போ....!" என்றா மாமி.

"நான் குடிக்கிறேல்லை எண்டு தெரிஞ்சும் என்னைக் குடிகாரன் எண்டு குத்திக் காட்டிப் போட்டீங்கள்! ஆனால் நீங்கள் வாங்கோ... இருங்கோ.... போங்கோ... கெடுக்காதேங்கோ.... குடும்பத்தைக் கெடுக்காதேங்கோ. கை எடுத்துக் கும்பிடுகிறன். வயதுக்கு மூத்தனீங்கள், ஏற்கனவே குழம்பிப் போய்க் கிடக்கிற குளத்தை இன்னும் கலக்கி ஒண்டுமில்லாமல் செய்திடாதேங்கோ."

தன் தாய்க்கு வடிவேலு சொன்ன உறைக்கும் வாசகங்கள் மனோகரிக்குக் கோபத்தைத் தூண்டிவிட,

"அறிவுகெட்டத்தனமா அம்மாவைக் குறை சொல்ல வேண்டாம்." என்று கண்டித்தாள் அவள்.

"எனக்கு அறிவு கெடேல்லை... எனக்குத் தெரியாமல் நீங்கள் ஏதும் செய்யலாமெண்டு மட்டும் நினைக்காதேங்கோ! எங்கை சுவர்ணா.... அங்க... எங்கை போட்டாள்? பொழுதுபட்டு ஒன்பது மணியாகுது, வயதுக்கு வந்த பொம்பிளைப்பிள்ளை டிஸ்கோவுக்குப் போட்டுது.... நீங்கள் இரண்டு பேரும் ஒழிச்சு மறைச்சு ஏதோ பிடுங்கலாமெண்டு நினைக்கிறீங்கள். குழந்தைப் பிள்ளையளைக் கட்டுப்பாடா.... பண்பாடா வளர்க்கத் தெரியாத நீங்கள் என்ன பெரிசாப் படிச்சு வந்தனீங்களோ....?"

"ஓம் படிச்சுத்தான் வந்தனாங்கள். ஏன் பிள்ளையள் டிஸ்கோக்கு போகக்கூடாதே?" கேட்டா மாமி.

"நாகரீகம் தெரிஞ்சால்தானே இதுகள் விளங்கும்." என்றாள் மனோகரி.

"அவனவன் தன்தன் நாகரீகத்துக்குள்ளை அடங்கி வாழுறதுதான் நாகரீகம்... அடுத்த இனத்தவன்ரை நாகரீகத்தைத் தலையிலை தூக்கிறது அநாகரீகம்." என்றவன் நேரத்தைப் பார்த்துவிட்டு, "எனக்கு வேலைக்கு நேரமாகுது!" என்று வெளிக்கிட்டான்.

"சாப்பிட்டுப் போங்கோவன்." என்ற மனோகரியின் குரலுக்குப் பதில் வரவில்லை. கதவு இழுத்துச் சாத்தப்படும் சத்தம் மட்டும் கேட்டது.

"பசியிலை வயிறு காய எல்லாம் அடங்கும்." என்று மீனாட்சி மகளுக்கு ஆறுதல் சொன்னா. எனினும் பசியோடு கணவனை வேலைக்குப் போக விட்டுவிட்டோமே... என்ற மனவுறுத்தலுடன் தாயின் பின்னே நடந்தாள் மனோகரி.

மகளின் முகவாட்டத்தைக் கவனித்துவிட்டு மீனாட்சி கூறினாள். "இப்பிடித்தான் உன்ரை கொப்பரும் துள்ளியடிச்சார்.. போ! என்று துரத்திப் போட்டு, நான் உங்களையெல்லாம் வளர்த்து எடுக்கேல்லையே... நான் இருக்கிறன் தானேடி! ஒண்டுக்கும் யோசிக்காதை! உவன் குடிகாரனை உனக்கேன்....?" என்று தாய் முகத்தைப் பல கோணத்தில் நெளித்துக் காட்டினாள்.

மனோகரி பதில் சொல்லவில்லை.

தாய்க்கும் மகனுக்கும் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு, சாப்பிட மனமில்லாமல் படுக்கச்சென்றவள் தூக்கம் வராமல் உளன்று கொண்டிருந்தாள்.

இரவு பதினொரு மணியிருக்கும். சுவர்ணா வெளியே போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.
"விடியப் பள்ளிக்கூடமெல்லே?" விழித்திருந்த மனோகரி மகளைப் பார்த்துக் கேட்டாள்.

"உண்ட்....!" என்ற சுவர்ணா உடுப்புக்களைக் கழற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக எறிந்துவிட்டுப் படுக்கச் சென்றாள்.

"சாப்பிட்டுப் படேன்!"

"பசிக்கேல்லை."

"உன்னாலை இஞ்சை பெரிய சண்டை."

"ஏன்....?"

"டிஸ்கோவுக்குப் போனதுக்குத்தான்."

"நீங்கள்தானே போகச் சொன்னனீங்கள்." என்று சொல்லிவிட்டு, சோம்பல் கண்களை மொய்க்க அவள் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

வடிவேலு இருந்திருந்தால், இவ்வளவு நேரம் கழித்து வந்ததுக்கு ஏச்சு விழுந்திருக்கும்.

'முகம், கையைக் கழுவிப் போட்டு வா! நானும் சாப்பிடேல்லை... உனக்காகப் பார்த்துக் கொண்டிருந்தனான்.' என்று வடிவேலு நடந்து கொள்ளும் முறைகள் மனோகரியின் மனதில் நிழலாடின.

வேலையில் வடிவேலுவுக்கு மனம் செல்லாமல் வீட்டில் நடந்த விவாதமே தலைக்குள் சுழல, கவலை நெஞ்சில் புரண்டு இடி

முழங்க, கவனம் எங்கோ... கருத்தெங்கேயோ என்ற நிலையில்

ஓடிக்கொண்டிருந்த மெசினில் ஏதோ திருத்திக் கொண்டிருந்தவன் வழுக்கிச் சுழன்று கொண்டிருந்த சக்கரத்தில் கைபட்டு, தசை வெட்டப்பட்டு இரத்தம் வடிய, கூட நின்ற சக தொழிலாளி அவனது உபமேலதிகாரிக்கும் அறிவித்தான்.

மேலதிகாரி உடனே அம்புலன்ஸ்க்கு அறிவிக்க, அதுவும் கூவிக் கொண்டு வந்து வடிவேலுவை ஏற்றிக் கொண்டு வைத்திய சாலைக்குச் சென்றது. அங்கு பல சோதனைகள் நடாத்தியபின் வெறும் காயம் மட்டும் தான் வேறு விபரீதங்கள் இல்லை என்று திருப்தியுடன் மருந்தைக் கட்டிக் கொண்டு ரக்ஸி மூலம் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

எல்லோரும் நல்ல நித்திரை. அவர்களை எழுப்பாமல் தன் கட்டிலிற் போய்ப் படுத்துக் கொண்டான்.

மறுநாள்.....
வடிவேலு எழுந்து முகம் கழுவ வந்தான். பிள்ளைகள் இருவரும் பள்ளிக்கூடம் போய்விட்டார்கள்.

“கையிலை என்ன?“ கேட்டாள் மனோகரி.

“ஒண்டுமில்லை---- சின்னக்காயம்“ அவளைப் பார்க்காமலே பதில் சொன்னான்.

“இவ்வளவு பெரியகட்டுக் கட்டிக் கிடக்கு, சின்னக்காயம் எண்டுறியள்“ பதற்றத்துடன் குறைப்பட்டாள் மனோகரி.

“வெறியிலை எங்கையேன் மெசினுக்கை கையைக் குடுத்தால் வெட்டுந்தானே“ சோபாவில் இருந்து மாமி தொண தொணத்தா.

வடிவேலு சிரித்தபடி குளியலறைக்குட் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டான்.

குடியைவிட்டு வெகுநாளாகி விட்டது என்றது தெரிந்து கொண்டும் குடிகாரன் என்று திரும்பத் திரும்ப வார்த்தையினால் குத்தும் மாமியை வடிவேலு முதன்முதலாக அதுவும் தன் வீட்டிலே காணவேண்டிய துர்ப்பாக்கியசாலியாக நின்றான்.

என்ன செய்யலாம்......?

கைநோ சுள் என்று வலித்தது. கண்கலங்க கண்ணாயிடில் தன் முகத்தைப் பார்த்தான்.

'இப்படி ஒரு நிலை வந்தும் ஏண்டா நீ உயிரோடை இருக்கிறாய்.... சா! செத்துப் போ!

இல்லாட்டி.....

பெட்டிப்பாம்பாய்ச் சுருண்டு கிடக்காமல், சீறியெழும் வீரப் புலியாய், ஆம்பிளைச்சிங்கமாய் அவர்களின் வாயை அடைக்காமல் பேடிமாதிரி அழுது கொண்டு நிக்கிறியே! போ..... போய் அவர்களை இரண்டில் ஒன்று பார்.......போ!

பிடிக்கலையா.....? சரி அப்போ......!

குடி.....! மறுபடியும் குடி!'

வடிவேலுவின் மனதுக்குள் வேறுபட்ட வேதனைக் குரல்களின் மாறுபட்ட கருத்துக் கொந்தளிப்புக்கள்.

"அம்மா!" என்று அவன் உதடுகள் உச்சரித்தன. 'நீ இவ்வுலகத்தில் இல்லை. ஆனால் உன்சக்தியை நான் கண்ணாரக் கண்டவன்.

உன் மகள் ஒருத்தி டாக்டராக, மகன் பத்திரிகையாளனாக, இன்னொரு மகன் பாடசாலை அதிபாரக என்று பெயரோடு விலாசமாக நின்று, உன் உழைப்பின் சின்னமாக நடை போடுகிறார்கள். நான் நடுத்தெருவில்.........

உன் இரத்தத்தின் ஒரு துளியாவது என் இரத்தத்தில் ஓடாமலா இருக்கும்! அது எங்கே?

ஓடி ஓடி நீ நடந்து எத்தனை சாதனை படைத்தாய், உன் மகன் நான் இங்கு அடிமை அகதியாய், கட்டுண்டு, செயலிழந்து கோழையாக நிற்கிறேனே!

என்னால் இனிப்படித்து ஒரு நிலைக்கு வரமுடியும் என்றது நடவாத ஒன்றுதான். ஆனால்..... என் பிள்ளைகள் இரண்டையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரமுடியும். அதுக்காக நான் வாழ்ந்து தான் ஆக வேண்டும். இதுக்கு எனக்குச் சக்தியைத் தா!' என்று மனதிற்குள் வேண்டியவாறு முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

காரை எடுத்துக் கொண்டு கோகுலன் வீட்டுக்குப் போக நினைத்தான். இந்த மனக்குமுறலை யாரிடமாவது கொட்டித் தீர்க்க வேணும், இல்லாட்டி நெஞ்சு வெடித்து விடும் போல அவனுக்கு இருந்தது.

கதவை திறந்து உள்ளே ஏற, தலையில் காரின் கூடார விளிம்பு இடிக்க, 'சனியன்!' என்று வாய்க்குள் முனகியபடி சீற்றில் இருந்து காரை இயக்கினான்.

கை நோவுடன் காரைச் சிரமப்பட்டு ஓட்டி, கோகுலன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

வடிவேலு கண்கலங்கக் கூறிய அவன் குடும்ப விவகாரங்களை அனுதாபத்துடன் கோகுலனும் யசோவும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"ஒருக்கா நீங்கள் மனோவோடை கதையுங்கோ."

"ரெலிபோனிலை கதைக்கிறதைவிட நேரை கதைக்கிறது நல்லது." சொன்னாள் யசோ.

"எனக்கென்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. சங்கிலியாலை கட்டி ஜெயிலுக்கை போட்டமாதிரி ஒண்டுஞ் செய்ய முடியாத நிலையடாப்பா! கலியாணம் எண்டது இப்பிடி ஒரு நரகமாக வரும் எண்டு நான் நினைக்கேல்லை. தாயும் மகளும் சேர்ந்து என்னைப் படுத்தாத பாடு படுத்திறாளவை. என்ரை பிள்ளையளுக்காக இருக்கிறன், இல்லாட்டி எப்பவோ ஒரு முடிவுக்கு வந்திருப்பன். குடியை விட்டு, மறந்துபோய் இனிமேல் குடிக்கமாட்டன் எண்டு விட்டிட்டு இருப்பவனைப் பார்த்து குடிகாரன்.....குடிகாரன் எண்டால் யாருக்குத்தான் கோபம் வராது?" என்று தன் சோகங்களைக் கொட்டினான் வடிவேலு.

கோகுலனும் யசோவும் அவனுக்கு ஆறுதல் கூறித் தைரியம் ஊட்டினார்கள்.

வடிவேலு போன பின் இருவரும் சற்றுத் தங்களுக்குள் கலந்து யோசித்தபின் பிற்பகல் அவன் வீட்டுக்குப் போனார்கள்.

வழக்கமான வரவேற்பு இருந்தது.

தனியாக மனோகரியுடன் கதைக்கலாம் என்றால் மாமி மீனாட்சி இடத்தைவிட்டு அசைவதாக இல்லை. சோபாவில் அவவும் இருந்து எல்லாவற்றிலும் தனக்கு உரிமை உண்டு என்ற

மமதையுடன் மகளை முந்தி, தானே பதில் சொல்லிக் கொண்டிருந்தா.

வடிவேலு அந்தக் குடும்பத்துக்குத் தேவையில்லாத ஒருத்தன் என்பதுதான் மீனாட்சியின் அசைக்க முடியாத கருத்தாக இருந்தது.

தன்னைவிட வேறு யாருமே படித்தவர்கள் இல்லையென்று கொம்பு முளைத்தவ போல நிற்கிறா மாமி. பிள்ளைகளின் தகப்பன் அவன் என்றோ, தன் மகளின் கணவன் என்றோ நினைப்பதாகத் தெரியவில்லை. இருவரும் எடுத்தெறிந்து பேசினார்கள்

வடிவேலு ஏதும் பேசவில்லை.
கோகுலனும் யசோவும் அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சமாதானமாக இருக்கும்படி பணிவோடு கேட்டனர்.

“வயதுக்கு மூத்த உங்களுக்கு நாங்கள் புத்தி சொல்லுறம் என்று நினைக்காதேங்கோ. நீங்களும் ஒரு தாய்.... எவ்வளவோ அனுபவங்களைக் கண்டனீங்கள். உங்கடை பேரப்பிள்ளை யளின்ரை எதிர்காலத்தை யோசிச்சுப் பாருங்கோ!“

“இதிலை என்ன யோசிக்கக் கிடக்கு.....? பிள்ளையளை வளர்க்க எங்களுக்குத் தெரியும். ஜேர்மனியிலை பிள்ளையளை வளர்க்க அப்பா தேவையில்லை. அதுவும் குடிகார அப்பா...!“ முகத்தைச் சுழித்து, கையை நீட்டிக் காட்டிய மாமிமீனாட்சியின் வார்த்தைகள் கேட்கவே வெறுப்பாக இருந்தது.

மௌனவிரதம் பூண்டவன் போல இருந்த வடிவேலுவைப் பார்க்க யசோவுக்குக் கவலையாக இருந்தது. தன் அண்ணன் ஒருவனுக்கு அவன் மாமி இப்படிச் சொல்லியிருந்தால் எப்படிக் கோபம் கொப்பளிக்குமோ அப்படியொரு நிலையில் கொதிப்பு அடைந்தாள் யசோ.

“என்னம்மா இப்பிடிச் சொல்லுறீங்கள்....? நீங்கள் ஆற்றை வீட்டிலை இருந்துகொண்டு கதைக்கிறீங்கள் எண்டு நினைச்சுப்

பாருங்கோ! வடிவேலு அண்ணாவின்ரை தயவிலை இருந்து கொண்டு அவரை எடுத்தெறிஞ்சு பேசுறீங்கள். பிள்ளையளுக்கு அம்மா எவ்வளவு அவசியமோ அப்படி அப்பாவும் அவசியம்தான். உங்கள் மகள் வாழுற வாழ்க்கையைக் கெடுக்க கங்கணங்கட்டிக் கொண்டு நீக்கிறிங்கள்! நீங்கள் மனோவுக்கு அம்மாவோ இல்லாட்டிச் சித்தியோ!" யசோவின் வார்த்தைகள் சூடாகவே பாய்ந்தன.

மீனாட்சி கோபத்தில் சீறிக் கொண்டு எழுந்து நின்றா.

"மனிசனும் மனிசியும் வந்து வாய்க்கு வந்தபடி கதைத்துக் கொண்டிருக்கிறீங்கள். உங்களை ஆர் இங்கை வாங்கோ எண்டு வெத்திலை வைச்சு அழைச்சது? அங!... எங்களுக்கு எங்கடை வீட்டு அலுவல் பார்க்கத் தெரியும், நீங்கள் போய் உங்கடை வீட்டு வேலையைப் பாருங்கோ, பெரியநாச்சியார் நீ என்னைப் பார்த்து அம்மாவோ சித்தியோ எண்டு கேக்கிறியோ? கட்டின புருசனைக் கலைச்சு விட்டிட்டு இன்னொருத்தனைக் கட்டி இருக்கிறாய்...... ஒரு பிள்ளை பெற முடியாத மனிசி நீ என்னைப் பார்த்துக் கதைக்கிறியோ?" என்று மீனாட்சி ஆவேசம் பறக்க யசோவைத் தகாத முறையில் வைது தீர்த்தா.

இதைப் பொறுக்காமல் குதித்தெழுந்து வந்து, மீனாட்சியின் முன் கையோங்கிய நிலையில் நின்றான் வடிவேலு.

அவனைக் கோகுலனும் யசோவும் தடுத்து அமைதிப்படுத்தினர்.

"பாரடி! அடிக்கவாறான்... பார்த்துக்கொண்டு நிக்கிறாய்!" என்று மீனாட்சி மகளையும் துணைக்கு அழைத்தா.

"கோகுலன், யசோ நீங்கள் போங்கோ! கழுதை அறியுமா கற்பூரவாசனை? இதுகளுக்கு உங்கடை மதிப்புத் தெரியாது, இப்ப தெரியுதானே இங்கை என்ன நடக்குதெண்டு."

"பொறுங்கோ வடிவேலண்ணை! எங்களைப் பற்றி மாமி என்ன சொன்னாலும் பறவாயில்லை. நாங்க கோவிக்கவில்லை. எங்களுக்குப் பிள்ளை இல்லை எண்டு குத்திக்காட்டி காயப்படுத்தினால் சொல்ல வந்த நியாயத்தைச் சொல்லாமல் ஓடிவிடுவன் எண்டு மாமி நினைக்கிறா. அப்படி நினைக்காதேங்கோ!

நீங்க பெரியவங்க... உங்களோடு வாதஞ் செய்ய நாங்கள் வரேல்லை. உங்கடை காலிலை விழுந்து கெஞ்சிக் கேட்கிறம். குடும்பத்தைப் பிரியாதேங்கோ, தயவுசெய்து மனோக்காவையும் வடிவேலண்ணையையும் சேர்ந்து வாழவிடுங்கோ பிளீஸ்! கணவன், மனைவி விவகாரத்துக்குள்ளை மூன்றாம் ஆள் குறுக்கிட்டால் விரிசல்தான் அதிகமாகும்..... வேண்டாம், என்ரை அம்மா மாதிரி நினைச்சு, கையைப் பிடிச்சுக் கேட்கிறன்... வடிவேலண்ணை குடியைவிட்டுப் பல வருசங்களாகுது. அப்படி இருக்க நீங்கள் அவரைப் பார்த்துக் குடிகாரன் எண்டு சொல்லுறது எந்த விதத்திலை நியாயம்?" என்று நிதானமாகக் கேட்டாள் யசோ.

"மனோகரியின் புருசன் குடிக்கிறேல்லை எண்டு உனக்கு எப்பிடித் தெரியும்? அடுத்தவளின்ரை புருசன் பின்னாலை திரியிறதுதான் உன்ரை வேலையோ?"

வடிவேலுவும் கோகுலனும் மீனாட்சிக்குக் கோபத்துடன் ஏதோ சொல்ல முனைய, அவர்களை அமைதிப்படுத்தித் தானே பேசினாள் யசோ.
"தலைவரின் ஆணையில் முன் வரிசையிற் போகும் வீரப்புலி மங்கை காலில் முள் குத்தி விட்டதென்று களத்தை விட்டு ஓடமாட்டாள். சென்ற இலக்கை மோதி, எதிரி தலை கிள்ளி, தன்னுயிர் ஈர்ந்து என்றாலும் தமிழ்மண் மீட்க முன் நிற்பாள், பின் செல்லாள்... இவள் பின் செல்லாள்.

என்ரை அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என்னுடைய புருசனுக்கும் யசோ யாரெண்டு தெரியும். நீங்கள் கூரான ஆயுதங்களைத் தான் பயன்படுத்திறீங்கள், ஆனால் நாங்கள் அதையும் மழுங்கடிக்கும் ஆற்றல் கொண்டதால் அவை செயலிழந்து நிற்கின்றன." என்றவள் கோகுலனைப் பார்த்து,
"போவம்!" என்றாள்.

அவர்கள் செல்ல முனைய, இருவரையும் பார்த்து மீனாட்சி,
"திறந்தவீட்டுக்கை நாய் நுழைகிற மாதிரி இங்கை வந்தது போல வேறை வீடுகளுக்குள்ளையும் புகுந்து விடாதையுங்கோ, நல்ல மாட்டுக்கு ஒரு சூடு" என்றா.

"திருடனைப் பிடிக்கப் பொலிஸ் நாய், திறக்காத வீட்டுக்கையும் போகும் தெரிஞ்சு கொள்ளுங்கோ. இன்னொன்று, நீங்க இனியாவது ஒரு அம்மாவாக இருக்க முயற்சிங்கோ!"

"போடி வாய்க்காறி, நீயும் ஒரு ஆள் எண்டு இங்க அப்புக்காத்து வேலைக்கு வந்திட்டாய், போய் உன்ரை வேலையைப் பார்."

யசோ ஒரு சிரிப்புச் சிரித்து, மீனாட்சியின் வார்த்தைகளை விழுங்கி ஏப்பம் விட்டபடி கோகுலனுடன் வெளியே நடந்தாள்.

வீட்டில் இதுபற்றி பரதனுடனும் ஜானகியுடனும் கதைக்கப்பட்டது.
"ஒரு குடும்பத்தையும் கலாச்சாரத்தையும் காப்பாற்ற மருந்து ஒண்டு பாட்டிக்குக் குடுக்கத்தான் வேணும்." இறுதியாகச் சொன்னான் பரதன்.
என்ன மருந்து என்று கேட்க நினைத்த யசோ, ஜானகியே அது என்ன என்று கேட்காமல் இருக்கும் போது, வேண்டாம் கேட்பது அநாவசியம் என்று கேட்காமலே இருந்துவிட்டாள்.

நாட்கள் சில நகர்ந்தன.
வடிவேலு கொழும்புக்குத் தொலைபேசி எடுத்து, தன் முதல் மனைவி விமலாவுடன் அழுதான். அவள் சொன்ன வார்த்தைகள் அவனுக்கு ஆறுதலாக இருந்தன.
"இலட்சியவாதிகளுக்குச் சோதனைகள் வரும். சந்தர்ப்பம் சூழ்நிலைகளால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டாலும் படலாம். தூங்காமல் விழிப்புடன் இறுதிவரை பொறுமையுடன் போராடினால் வெற்றியைப் பல்வேறுவடிவில் இலட்சியவாதியால் அடையமுடியும்.

எங்கள் விடுதலைப்போராட்டத்தில்கூட எத்தனை சோதனைகளை நாங்கள் சந்தித்துவிட்டோம். உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என்று தியாகவேள்வி நடக்கும்போது, இப்படை வெல்லும்... இப்படை வெல்லும், இப்படைக்கு நிகராக எப்படையும் இல்லை." என்று அவள் சொன்னபோது வடிவேலுவின் நெஞ்சம் உறுதி அடைந்தது.

'நெருப்பெனக் குண்டுமழை பொழியும், எதிரிபடையை நிர்மூலம் செய்ய விண்ணதிர விரையும். கரும்புலிவீரனுக்கு எத்தனை வீரம், எத்தனை துணிவு, எத்தனை விவேகம் இருக்கும். அதில் ஒரு துளி எனக்கு வேண்டும்' என்று தன் மனதுக்குள்

இறைஞ்சினான்."நீங்கள் உத்தமர், எனக்குத் தெரியும். ஸ்ரீராமர் இல்லையெண்டு அவர்கள் சொன்னால் சொல்லட்டும். நீங்கள் வடிவேலன்... அழகிய வடிவேலன்...." அவள் கண்களில் நீர் வடிந்திருக்க வேண்டும். தொலைபேசியில் குரல் அடைத்தது.

"பிள்ளைகள் சுவர்ணாவையும் நிகிலனையும் உங்கள் இலட்சியப் படி வளர்க்க அவர்கள் தடையாக இருக்கலாம்.... நீண்ட நாட்களுக்கு அவையாலை அப்படியிருக்க முடியாது. மௌனத்தால் தடையை வெல்லுங்கோ... உங்களாலை முடியும், நம்புங்கோ!

உங்கடை பிள்ளை பிருந்தா, அவளை நான் உங்களின்ரை இலட்சியப்படி வளர்க்கிறன். உங்களையே உரிச்சு வைச்சு இருக்கிறாள். நடை, உடை எல்லாம் உங்களைப் போலத்தான்... இன்னொன்று..." என்று நிறுத்தினாள் விமலா.

"சொல்லு!" என்றான் வடிவேலு.

"நீங்கள் கோவிக்கக்கூடாது."

"கோவிக்கவில்லை, சொல்லு!"

"இன்னொருகலியாணம் செய்வதுபற்றி யோசிக்கச் சொன்னீங்கள், யசோ, ஜானகி இருவரையும் உதாரணம் காட்டி கடிதமும் எழுதி இருந்தீங்கள். அவைக்கு அது பொருந்தும்... எனக்கு அது பொருந்தாது. நிறையக் காரணங்கள் இருக்கு... அதுதான் நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்."

"என்ன....?"

"இப்ப வேண்டாம்." அவள் சொல்லவில்லை.

"ஜேர்மனியும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாமெண்டு உங்கை வெளிக்கிட்டு வரட்டோ எண்டுகூட யோசிக்கிறன்."

"பிளீஸ் வேண்டாம், மனோ பாவம்... அவ தாங்கிக்கொள்ள மாட்டா."

"நீ இருக்கிறியே! செல்லப்பிள்ளையா வளர்ந்த நீ, இப்ப தன்னந் தனியா... இவ்வளவு சோதனைகளையும் தாண்டி வாழேல்லை...?"

“இங்கை குண்டுகள் வெடிச்சு வெடிச்சு என் நெஞ்சிலை உறுதி உரம் ஏறியிட்டுது... நான் சமாளிப்பன். உங்கடை மகளை ஆளாக்கி, உயர்ந்த ஒரு உத்தியோகத்திலை தூக்கி நிறுத்த என்னாலை முடியும்.”

“நீ சொல்லுறது மனதுக்குச் சந்தோசமாகக் கிடக்கு, இருந்த கவலையெல்லாம் ஒரு ஓரம் போனதுபோலை... நிம்மதியாப் பெருமூச்சு விடக்கூடியதாய்க் கிடக்கு.” என்று ஆறுதலடைந்தான்.

“எனக்கு நீங்கள் காசு அனுப்ப வேண்டாம், இப்ப நாங்கள் ஓகே. வதனி பல வழிகளிலையும் உதவி செய்யிறா!” என்று கூறி, “எங்களுக்கு நீங்கள் உதவி செய்யத் துடிக்கிறீங்கள், அதுவே போதும்... அதை நினைக்கவே என்ரை மனசு ஆனந்தப்படுகுது. மற்றும்படி எனக்கு இங்கை எல்லாம் இருக்கு, மாமாவும் இடைக் கிடை பணம் அனுப்புவர். ரெலிபோன் எடுத்துக் கதைத்துச் சுகம் கேட்பர், எங்களைப் பற்றி நீங்கள் யோசித்துக் கவலைப் படவேண்டாம். என்னைப் பொறுத்தவரை நீங்கள் தெய்வம். அது நெஞ்சில் இருக்கும். நீங்கள் உங்கடை குடும்பம் திருப்திப்பட நடவுங்கோ, எனக்கு நீங்கள் காசு அனுப்பிறது மனோவுக்குப் பிடிக்கேல்லை... நான் ரெலிபோன் எடுக்கிறதாலை அவ உங்களோடை சண்டைக்கு வாறா. இது இனிமேல் வேண்டாம்.” என்று விடைபெற்று, தொலைபேசி உரையாடலை நிறைவுசெய்து கொண்டாள்.

அவன் சொல்ல நினைத்துச் சொல்ல முடியாமல் நின்றதை விமலா சொல்லிவிட்டாள்.

இனிமேல் வீட்டுக்கு தொலைபேசி எடுக்கவும் வேண்டாம், கடிதம் போடவும் வேண்டாம். அவசியமென்றால் கோகுலன் வீட்டுக்குத் தொடர்பு கொள்ளலாம் என்று சொல்ல நினைத்திருந்தான்.

காசுக் கஸ்டம் என்று விமலா சொன்னாலும் இனி அனுப்பவது இல்லை.

இந்த இரண்டு காரணங்களாலும்தான் மனோகரி மீண்டும் மீண்டும் விவாதத்தைத் தொடங்குகிறாள், இதனால் வெறுப்பு வளர்ந்து கொண்டே வருகிறது. மாமி இதை அணைத்து விடாமல்

ஊதிக் குடும்பத்தையே சுடுகாடாக்கப் பார்க்கிறா. இதுக்கு ஒரே வழி விமலாவுடன் கதைக்காமல், அவளுக்குக் காசு அனுப்பாமல் இருப்பது... மனச்சாட்சிக்கு விரோதம்தான், என்ன செய்வது? முதல் நடந்ததுமாதிரி இப்ப இருக்கும் குடும்பமும் பிரியும் நிலை வரத் தான் காரணமாகக்கூடாதென்று நினைத்தான்.

விமலா அப்படிச் சொன்னதும் அவனுக்கு என்னவோ போல இருந்தது. தொலைபேசியை வைத்துவிட்டு, கலங்கிய கண்களைத் துடைத்தபடி யோசனையுடன் உட்கார்ந்திருந்தான் வடிவேலு.

..........................

ஒருநாள்....
வெளிநாட்டலுவலகத்திலிருந்து மாமி மீனாட்சிக்கு விசா தர முடியாதெனக் கடிதம் வந்தது.

சுவர்ணா கடிதத்தைப் படித்துச் சொல்ல, மாமி தலையிலை கையை வைத்துக்கொண்டு எல்லாமே கடலில் மூழ்கிவிட்டது போல உட்கார்ந்திருந்தா.

மனோகரி தன் அக்காவுடனும் அத்தானுடனும் தொலைபேசியில் கதைத்துவிட்டு, தாயிடம் கொடுத்தாள். மீனாட்சி மூத்தமகளுடன் அழுதழுது கதைத்தா.
வக்கீல் வைத்தும் வீணாகிப் போச்சு, இனிக் காசு கட்டிப் பிரயோசனம் இல்லை என்ற அர்த்தத்தில் மகள் சுறோ கதைத்தாள்.

"அப்ப என்னடி பிள்ளை செய்யிறது...? ஊருக்குத் திரும்பிப் போகட்டோ...? அங்கை கொண்ணையின்ரை மனிசியோடை என்னாலை இருக்கமுடியாது." என்று அழுது புலம்பினா மீனாட்சி.

"ஏன் அம்மா அண்ணியைக் குறை சொல்லுறீங்கள்? அவ உங்களை வடிவாத்தானே கவனிக்கிறவ. அதோடை அண்ணை

உங்களிலை உயிரையே வைச்சிருக்கிறார்." என்று தொலைபேசி யில் சொன்னாள் சறோ.

"கொண்ணை பெண்டாட்டியின்ரை சொல்லைக் கேக்கிறவன், சுண்ணாம்பு வேணுமெண்டாலும் மனிசியிட்டைக் கேப்பான். அவனை நம்பி நான் அங்கை போகட்டோ...?"

"வேறை என்னம்மா செய்யிறது....? இஞ்சத்தைச் சட்டங்கள் அப்பிடி, லோயருக்குக் காசு கட்ட இனி இவர் சம்மதிக்கமாட்டார் வேணுமெண்டா தங்கச்சியிட்டைக் கேளுங்கோ, அவை சம்மதிச்சா எனக்குப் பிரச்சனையில்லை. இன்னொருக்கா அப்பீல் வைச்சுப் பார்க்கலாம்." என்று சறோ நழுவிக் கொண்டாள்.

மீனாட்சி சோகமே வடிவாக இடிந்து போய் உட்கார்ந்திருந்தா. வழக்கமாக ஆசையாகக் கேட்கிற விசுவின் 'அரட்டை அரங்கம்' தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்தும் அதைப் பார்க்காமல் யோசனையுடன் இருந்தா.

மறுநாள், கோயில் தேர்த்திருவிழா.
தாயைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்ட வேண்டுமென்று மனோகரி ஆசைப்பட்டாள். நீண்டபயணம் என்றும் பார்க்காமல் வடிவேலு குடும்பமாகக் காரில் கூட்டிக்கொண்டு போனான்.
ஊர்த்தேர்த்திருவிழா போன்று மக்கள் திரள்திரளாகக் காணப் பட்டனர். நிறைந்த ஒரு தெய்வீகவைபவம் வெகு விமர்சையாக, பக்திமயமாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

சுவாமியைத் தரிசித்து, சனநெரிசல்களினிடையே வடிவேலு புகுந்து அர்ச்சனையும் செய்தாகிவிட்டது. அப்போ மீனாட்சியைக் காணவில்லை.

"அம்மா எங்கையப்பா...?" தேடினாள் மனோகரி.

"இப்ப இதிலை நிண்டவ!" பதில் சொல்லியபடி வடிவேலுவும் தேடினான்.

"விலக்கினாப் பிடிக்கேலாது, பக்கத்திலை நிக்கச் சொன்னனான். கேட்டாவே....! இனி இந்தச் சனத்துக்கை எங்கை தேடுறது?" பயந்த குரலில் பதறினாள் மனோகரி.

"இதுக்கைதானே நிற்பா, பொறு தேடிப் பார்ப்பம்!" என்று வடிவேலு சொல்ல அங்குமிங்கும் தேடியபடி மெதுவாக நடந்தனர். மீனாட்சியோ மகள், மருமகன் தேடுவார்கள் என்ற எண்ணமில்லாமல் தன் ஊரைச் சேர்ந்த இன்னொரு பாட்டியைக் கண்டு குசலம் விசாரித்துக்கொண்டிருந்தா.

குளிர்காற்றும் மழையுமாக இருந்தது. ஒதுங்கி ஒரு கூடாரத்து க்குள் நின்றவாறு கதைத்தார்கள்.

"நல்லூர்த்தேர் மாதிரி சனமடி மீனாட்சி!"

"இவ்வளவு சனம் ஜேர்னியிலை இருக்கோடி இலட்சுமி?"

"எல்லாம் இளசுகள்.... கலியாணம் கட்டிப் பிள்ளையளோடை பெரியபெரிய புதுக்கார்களிலை வந்து இறங்குகினம்!"

"முன்னேற்றம்தான்"

"சரி, அது கிடக்கட்டும்... நீ எப்ப போறாய் மீனாட்சி?"

"எனக்குப் போக விருப்பமில்லை, இஞ்சை இருக்கலாமெண்டு பதிஞ்சு போட்டன்... ஆனா அவுஸ்லாண்டங்காரன் போகச் சொல்லிக் கடிதம் போட்டிருக்கிறான். நீ பதியேல்லையோ இலட்சுமி....?"

"போடி விசரி, இஞ்சை நாங்கள் இருந்து என்னடி செய்ய....? நாலு சுவரைப் பார்த்துக்கொண்டு வீட்டுக்கை இருக்கப் பைத்தியம் பிடிச்சிடும். பிள்ளையள் என்னைப் பார்க்கக் கூப்பிட்டுதுகள். பாத்திட்டன், எல்லாரும் நல்லா இருக்கினம். என்னை இருங்கோ அம்மா எண்டு மறிக்கினம், ஆனால் நான் போகப் போறன். அங்கை வீடு கிடக்குது, மகன் உத்தியோகம்... உனக்குத் தெரியும்தானே.... மருமகள் தங்கமான பிள்ளை, நான் பேரப்பிள்ளையளைப் பார்த்துக்கொண்டு, கோவில் குளமெண்டு போய்வாற சந்தோசம் இங்கை எங்கையடி கிடக்கு மீனாட்சி?"

"நீ சொல்லுறாய்.... எனக்கெண்டா இஞ்சை இருக்கிற வசதிகளை விட்டிட்டுப் போகப் பிடிக்கேல்லை. அதோடை என்ரை இளைய மகள் மனோவின்ரை புருசன் தண்ணிக்காரன், அவனை விட்டிட்டு

வேறை வீடு மாறி தனியா இருக்கப் போறாள், அவளுக்குத் துணையா இருக்கலாமெண்டு நினைச்சா....!"

"என்ன மனோ தனியா இருக்கப்போறாளோ....? என்னடி கதை இது...? நீயும் சாதாரண கதை மாதிரிக் கதைக்கிறாய், வெளிநாட்டிலை தனிய இருந்து என்ன செய்யப் போறாளாம்? நீ புத்தி சொல்லுறதை விட்டிட்டு, அவளுக்குத் துணையா இருக்கப் போறன் எண்டுறாய்... அதோடை மீனாட்சி..." என்று காதருகில் வந்து, "மருமகனைத் தண்ணிக்காரன்... குடிகாரன் எண்டெல்லாம் மாமி சொல்லக்கூடாது!" என்று புத்தி சொன்னா இலட்சுமி.

"இல்லையடி, அது உனக்குத் தெரியாது... சின்ன மருமகன் படிப்புக் கொஞ்சம் குறைவு, மனோ படிச்சவள்தானே... அவள் சொல்லுறபடி இவர் நடக்கலாம்தானே!"

"இதுகளுக்கையெல்லாம் நாங்கள் தலையிடக்கூடாது. புருசனும் பெண்டாட்டியும் பார்த்துக்கொள்ளுவினம், பாட்டிமார் நாங்கள் இதுக்கை தலையிடக்கூடாது."

"இலட்சுமி! உனக்கொண்டும் தெரியாது. நான் இல்லாமல் அந்த வீட்டிலை ஒண்டும் நடக்காதடி... என்ரை பிள்ளை தனிச்சுப்போம்."

"எனக்கென்னண்டா நீ சொல்லுறது நல்லாப் படேல்லை, இஞ்சை பார் மீனாட்சி! குடும்பம் எண்டா சண்டை சச்சரவுகள் இருக்கத் தான் செய்யும். புருசன், பெண்டாட்டி சண்டையிக்கை மூன்றாம் ஆள் போனால் சண்டை பெருக்குமேயொழிய, தணியாது. என்ரை மகனின்ரை வீட்டிலையும் இடைக்கிடை மகனும் மருமகளும் அடியாபிடியா எண்டு சண்டை போடுவினம். நான் கண்டும் காணாமலும் அங்காலை போயிருந்திடுவன். பிறகு பார்த்தால் அதுகள் சோடிப்புறாக்கள் போலை.... ஒருத்தரிலை ஒருத்தர் அன்பென்றால் அன்பு....!"

"நீ சொல்லுறதும் ஒரு விதத்திலை சரி மாதிரித்தான் கிடக்கு, சரி அப்ப நீ எப்ப ஊருக்குப் போறாய்?"

"வாற சனிக்கிழமை, இஞ்சை என்னடி வாழ்க்கை, பிள்ளையளைக் கண்டதெண்ட சந்தோசம்தான், ஆனா எனக்குப் பிடிக்கேல்லை, எங்கடை நாடு.... எங்கடை கலாச்சாரம்... அது வேறை எங்கையும் வராது."

"நீ சொல்லுறாய், ஆனால் இஞ்சை இருக்கிற வசதி அங்கை வருமோ...? கறண்டுமில்லை, காருமில்லை... அங்கை போய் என்னாலை வாழமுடியாது."

"நீ வசதியைப் பாரக்கிறாய்... அங்கைதானே பிறந்து வளர்ந்தனா ங்கள். கடவுள் எங்களை அந்த நாட்டிலை வாழ எண்டுதான் படைச்சவர். இங்கை வாழ வேண்டுமெண்டால் இங்கை படைச்சு இருக்கலாம்தானே! புருசன் வேலையாலை வர, பெண்சாதி வேலைக்குப் போறாள், நிற்க இருக்க நேரமில்லை. ஒரே ரிவி... இல்லாட்டி பேத்டே அதுஇதெண்டு காரிலை ஏறிச் சவாரி. எனக்குப் பிடிக்கேல்லை."

அப்போ வடிவேலு மாமியாரைத் தேடிக்கொண்டு வந்தவன், கண்டுவிட்டு, "மாமி! உங்களை எங்கையெல்லாம் தேடுறது?" என்றவன் பக்கத்திலே நின்ற இலட்சுமியையும் பார்த்துப் பணிவுடன் வணக்கம் சொல்லி, சுகம் விசாரித்தான்.

இன்னொருநாள்.....
மீனாட்சிக்கு வெளிநாட்டலுவலகம் விசா கொடுக்க மறுத்து விட்டது. வீட்டில் ஒரே சோகமயம். மீனாட்சி கப்பல் கவிழ்ந்தது போலத் தலையைத் தொங்கப்போட்டவாறு ஹோல் சோபா ஒன்றில் அமர்ந்திருந்தா.

"பிள்ளையள் எண்டிருந்தும் எல்லோரும் தன்தன் பாடு... என்ரை சோகத்தை ஆருக்குச் சொல்லியழ? அனாதை மாதிரி நிக்கிறன்." வடிவேலுவின் காதில் விழும்படி கூறினா மீனாட்சி.

வடிவேலு நின்று மாமியைப் பார்த்தான். அவன் அவவுடன் கதைத்துப் பல மாதங்கள் இருக்கும்.
அவனை அவ ஒரு மனிதனாகவே மதித்ததில்லை. படியாதவன், குடிகாரன், சோம்பேறி.... என்று வீட்டிலும் வெளியிலும் தூற்றிக் கொண்டு திரிபவ.

அநாவசியமாகக் குடும்ப விசயத்தில் தலையிட்டு, மனோகரியையும் அவனையும் ஒற்றுமையாக இருக்கவிடாது பிரித்து வைத்துப் பழக்கப்பட்டவ. இதனால் மாமி என்ற மதிப்பு இருந்தும் வடிவேலு சற்றுத் தள்ளியே நின்று கொள்வான்.

விசாப்பிரச்சனை அவன் அறிந்திருந்தான். ஆரும் வந்து அவனுடன் என்ன செய்வது என்று ஆலோசனை இன்றுவரை கேட்கவில்லை. இப்ப மாமி தனக்குச் சொல்லத்தான், யாருக்கோ சொல்வது போல சொல்கிறா என்றதைப் புரிந்துகொண்டு, சற்றுக் கிட்டவாகச் சென்று மாமியைப் பார்த்தான்.

கோபமாகத் திட்டிக்கொண்டும், 'குடுகுடு' என்று சிலுப்பிக் கொண்டும் திரியும் மீனாட்சி, புதைகுழியில் வீழ்ந்த யானைபோல மிரண்டபடி, வாடிய முகத்துடன் சோர்ந்து உட்கார்ந்திருந்தா.

"இப்ப எல்லாருக்கும் சந்தோசந்தானே!" வடிவேலு பதில் சொல்லவில்லை.

"காசு காசு எண்டு சாகிறவை... என்னைப் பற்றி யார் நினைக்கப் போயினம்? ஐந்து சதம் அம்மாவுக்குச் செலவழிக்க எந்தப் பிள்ளை இருக்கு?" மீனாட்சியின் கண்களில் கண்ணீர் ஒடியது.

வடிவேலுவின் மனம் உருகியது!
அவன் நெஞ்சில் இருந்த கோபங்கள் எங்கோ காணமற் போய் விட்டன.
"மாமி!" என்றான்.

"மருமகன், என்னை அனுப்பி விடுங்கோ! அங்கை போய் எங்கையாவது தெருவோரத்திலை பிச்சை எடுத்து பிழைச்சுக் கொள்ளுகிறன். இல்லாட்டி பொன்னாலைக்குப் போய் கண்ணன்ரை கோவில் மண்டபத்திலை ஒரு மூலையிலை படுத்தொழும்புவன்."

"இப்ப என்ன பிரச்சனை மாமி?"

"என்னைப் பிடிச்செல்லே அனுப்பப் போறாங்கள் தம்பி!"

"உங்களுக்கு விருப்பமில்லை எண்டாச் சொல்லுங்கோ! நான் பார்க்கிறன்."

மீனாட்சி வடிவேலுவைப் பார்த்தாள். 'உன்னாலை என்ன முடியும்' என்று மீனாட்சி மனதுக்குள் நினைத்தாள். ஆனால் இன்றைய

நிலையில் ஆதாரம் இல்லாமல் நிற்கும் அவவுக்குத் துரும்பும் இரும்பு போல ஆதாரமாகப்பட்டது.

"உங்களை எல்லாம் விட்டிட்டு அங்கை போய் நான் என்ன மருமகன் செய்யிறது..... ஏன் நாயே இருக்கிறாய் எண்டு கேக்க ஆர் இருக்கினம்? மருமகள் இராட்சகி, அவளை நினைச்சாலே நெஞ்சு படபடவெண்டு அடிக்குது. என்ன மந்திரம் போட்டாளோ தெரியாது, என்ரை பிள்ளை அவளே தஞ்சம் எண்டு கிடக்கிறான்."

"அழாதேங்கோ!" பக்கத்திலிருந்து மாமியாரின் கண்களில் வழிந்த கண்ணீரை வடிவேலு துடைக்க, மனோகரி உள்ளே வந்தாள்.

இந்தக்காட்சி அவளுக்கு அதிர்ச்சியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது என்பது அவள் முகத்தில் விரிந்த மலர்ச்சியிலிருந்து தெரிந்தது.

"லோயர் முடியாது எண்டிட்டராம்" என்ற மனோகரி,

"முந்தி நீங்க சொன்னதுமாரி பாரீஸிலை கூட்டிக்கொண்டு போய் பதியலாமோப்பா?"

"செய்யலாம் எண்டுதான் நினைக்கிறன், பிறகு பாஸ்போட் கிடைக்க இஞ்சை வரலாம். கொஞ்சக்காலம் கஸ்டந்தான், நாங்கள் போய்ப் பார்க்கலாம் தானே."

"ஆர் கூட்டிக்கொண்டு போய் விடுகிறது?"

"நான் போறன்!"

"அத்தானையும் கேட்டுப்பார்க்கலாம்."

"அவர் பயந்தவர் உதுகளுக்குச் சம்மதிப்பர் எண்டு நான் நினைக்கேல்லை." சொன்னா மீனாட்சி.

"அப்ப என்ன செய்யிறது?" மனோகரி யோசனையுடன் கேட்டாள்.

"நான் செய்யிறன் எண்டுறன், ஏன் நம்பிக்கையில்லையே?" என்ற வடிவேல் மாமியாரைப் பார்த்து,

"நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்லை... றெடி பண்ணுங்கோ, நாளைக்கு இரவு வெளிக்கிடுவோம்." சொல்லி விட்டு அவன் வெளியே போனான்.

......................

கண்ணனுக்கும் வேணிக்கும் பெண்குழந்தை பிறந்திருந்தது. சுகிர்தா என்று பெயர் வைத்திருந்தார்கள். அன்று பல்லுக் கொழுக்கட்டை கொட்டுவதென்று அழைக்க, பரதன், ஜானகி, பிள்ளைகளும் கோகுலனும் யசோவும் சாரதா, குமார் பிள்ளைகளும் வந்திருந்தார்கள்.

மாமன் கோகுலன் சுகிர்தாவின் மீது மெதுவாகக் கொழுக்கட்டை கொட்ட, பரதன் படம் எடுக்க, சிறுவர்கள் விழுந்த கொழுக்கட்டையை எடுத்துக் கடிக்க.... ஒரே குதூகலமாக இருந்தது.

எல்லோரும் கொழுக்கட்டை சாப்பிட, ஜானகியும் யசோவும் தேநீர் தயாரித்தார்கள். கோடைகாலம் என்பதால் மாலையாகியும் பகல் போல வெளிச்சமாக இருக்க, சிறுவர்கள் வெளியே சென்று விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

குழந்தை சுகிர்தாவும் தானும் வெளியே போக அடம்பிடித்து, அழுது குளறிக்கொண்டிருந்தாள். அப்போ யசோ அவளைத் தூக்கி விளையாட்டுக் காட்டினாள். சுகிர்தா அடங்கவில்லை.

"விடுங்கோ யசோ, போய் விளையாடட்டும்!" சொன்னாள் வேணி.

"பெரிசுகள் பந்தடிக்குதுகள்.... பிள்ளை பாவம், தனிய விடப் பயமில்லையே?" என்று தயங்கியபடியே விட்ட யசோ, தானும் பின்னாலே சென்றாள்.
மாலைச்சூரியனின் கதிர்கள் மென்மையாக வருட, இதமாக வீசிய காற்று உடலுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. அதிகநேரம் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்ததால் 'அம்' என்று இருந்த தலைக்கு அது மிகச் சுலபமாக இருந்தது.

குழந்தைகள் ஓடி, விளையாடி, விழுந்து, எழுந்து, மகிழ்ந்து சந்தோசப்படுவதை யசோ மிகவும் இரசித்தாள். கின்டர்காடின் ஆசிரியைக்குரிய பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் அவள், சிறு குழந்தைகளுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடன் கலந்து விளையாடுவது வழக்கம்.

பெரியவர்கள் கூடி என்ன பெரிதாகப் படைத்துவிடப் போகிறார்கள்....
சமையலைப் பற்றிக் கதைப்பார்கள்... புடவையைப் பற்றிக் கதைப்பார்கள். அடுத்தவரைப் பற்றிக் கதைப்பார்கள்... சித்தி போன்ற தொடர் நாடகங்கள் பற்றி... தமிழ் தொலைக்காட்சி பற்றிக் கதைப்பார்கள்... அரசியல் கதைப்பார்கள் அல்லது பகிடி விட்டுச் சிரிப்பார்கள்.
குற்றம் கூற முடியாது. ஏனென்றால் வேறு என்னத்தைத்தான் செய்வது என்ற ஒரு நிலை!

அப்போ உள்ளே,
சாரதா வேணியிடம்,
"யசோவுக்குப் பிள்ளையள் எண்டால் காணும்." என்றாள்.

வேணி மெதுவாக,
"தன்னாலை பெறமுடியாதெண்டு தெரிஞ்சு போச்சு, அடுத்த ஆக்களின்ரையைப் பார்த்தாவது மனம் ஆறட்டும்.? என்றாள்.

"சீ! ஏன் அப்பிடிச் சொல்லுறாய்.... பாவம் யசோ!"

"உண்மைதானே சறோக்கா, சும்மா அண்ணையின்ரை வாழ்க்கையைக் கெடுத்துப் போட்டாள். ஆக்கள் வெளியிலை பூசி, மெழுகி இருந்தால் மட்டும் காணுமே....?"

அப்போ ஜானகி வர, வேணி வாயை மூடிக்கொண்டாள்.

வெளியே சுகிர்தா வீரிட்டு அழுவது கேட்டது. யசோ தூக்கிக் கொண்டு உள்ளே அவசரமாக ஓடிவந்தாள். நாடியில் சிறிய உரசல், பெரிதாக ஒன்றுமில்லை.

வேணி பதறியடித்துக்கொண்டு வந்து, யசோவிடமிருந்து மகளைப் பறித்துக்கொண்டு, கோபமாக "மலடிக்குத் தெரியுமே பிள்ளை

பார்க்க....?" என்று உரத்த சொல்லில் சொன்னது எல்லோர் காதிலுமே வீழ்ந்தது.

யசோ கவலையில் ஒரு கணம் தன் கண்களை இறுக மூடிக் கொண்டு அசையாமல் நின்றாள்.

ஜானகி வேணியைக் கண்டித்தாள்.
"வார்த்தையை அளந்து பேசு, ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணை அவமானப்படுத்துவது கொடுமையடி!"

கோகுலன் ஓடி வந்து வேணியின் கன்னத்தில் ஓங்கி ஒன்று போட்டிருப்பான். பரதன் அவனைத் தடுத்துவிட்டான்.
'கொசு உறுமிக் கோபுரம் ஆடாது.'

கண்ணன் கோபம் கொண்டு மனைவியைப் பார்த்தான்.

"என்ன....? உண்மையைச் சொன்னால் ஏன் கோவிக்கிறீங்கள்? பாருங்கோ! பிள்ளை விழுந்து நாடியை உடைச்சுப் போட்டுது, பார்த்துக்கொண்டு தானே நின்றவ... அவவுக்கு எரிச்சல்!"

அப்போ யசோ சீருக்கு வந்திருந்தாள்.
"மச்சாள் சொல்லுறதிலையும் நியாயமிருக்கு. எனக்குப் பிள்ளை இல்லை, ஆனா உங்கடை பிள்ளையைப் பார்த்து எரிச்சல் படுமளவுக்கு நான் இல்லை." என்ற யசோவை ஜானகி தடவி ஆறுதற்படுத்தினாள்.

இரவுச்சாப்பாடு தயாராகி இருந்ததால் மறுக்க முடியாமல், சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்திருந்தார்கள்.

யசோ ஊரிலிருந்து வந்த சூரியாவினதும் சர்மியினதும் கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.
அவள் வெம்பியழுது, கண்ணீர் சொரிவதைப் பார்த்து கோகுலன் மனம் உருகியது. எழுந்து அவளருகே வந்து, அவளைத் தன் மார்போடு அணைத்து ஆறுதல் பகிர்ந்தான்.

அம்மா.... அம்மா என்று வார்த்தைக்கு வார்த்தை சூரியாவும் சர்மியும் எழுதியிருந்தார்கள்.
தான் பெறாத பிள்ளைகள் அவர்கள், உருக்கமாக எழுதியிருந்த வாசகங்கள் நெஞ்சிலே ஏதோ ஒரு இனந்தெரியாத, விபரிக்க

முடியாத எண்ணங்களை அலைபோன்று தோற்றுவிக்க, இருவரும் ஒருவரையொருவர் நெருங்கினர்.

இருவர் கண்களும் புதுமையாக நோக்கின.
கோகுலனின் கரங்களுக்குள் யசோ.... இல்லையில்லை அவளின் கரங்களுக்குள் அவன்... இல்லையில்லை எவர் கரங்களுக்குள் எவர் என்று சொல்லமுடியாத வகையில் கண்கள் கதை படிக்க நெஞ்சம் ஒன்றிப் போயினர்.

யாருமே இல்லாத உலகத்தில் அவர்கள் இருவரும் மட்டுமே!

புறாக்களாக வானிலே பறந்து மகிழ்கிறார்களா?
மீன்களாகக் கடலில் நீந்தி விளையாடுகிறார்களா?

இரவு களைத்து ஒதுங்கியது.
தொலைபேசிமணி ஒலித்தது.
விடிந்து பத்துமணியாகிவிட்டது. யசோ தொலைபேசியை எடுத்து, தூக்கக்குரல் தொனிக்க, "ஹலோ!" என்றாள்.

"முரளி" என்று மறுமுனையில் ஒலித்தது.

"முரளி.... டேய் முரளி.....! எங்கை நிக்கிறாய்?" என்று மகிழ்ச்சித் துடிப்பில் நித்திரைச் சோம்பல் எங்கோ மறைந்தோடக் கேட்டாள்.

"லண்டனிலை!" என்ற முரளி, தான் சுகமாக இருப்பதாகவும், விசாவும் கிடைத்து, பெற்றோல் செற் ஒன்றில் வேலை செய்வதாகவும் கூறினான்.

தனது தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்து, ராகினி பற்றியும் ஆர்வமாக விசாரித்தான்.

"காதலுக்குக் கண்ணில்லை என்று எல்லோரும் சொல்வார்கள், உண்மையாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். இதனால்தான் உபத்திரவங்களும் பிரிவுகளும் மோதல்களும் பிறக்கின்றன. என்னைப் பொறுத்தவரை, இப்படி ஒன்று வந்து என்னைத் தூக்கி விட்டுள்ளதென்று நினைக்கிறன். உங்கிருந்தால் அனுப்பப்போறான் என்ற பயத்தில் நாட்களை எண்ணிக் கொண்டிருந்திருப்பன்.

பழகிய இடத்தைவிட்டுப் போக மனமில்லாமலிருந்தது.

ராகினி உபத்திரவம் என்ற பெயரில், இப்போ எனக்கு உதவி செய்திருக்கிறாள் என்று தான் நான் நினைக்கிறன். அவள் தகப்பன் ஆள்வைச்சு அடிக்காமல் விட்டால், இப்ப உங்கையோ இல்லாட்டி சிலோனிலையோ... வாழ்க்கை கேள்விக்குறியாக இருந்திருக்கும்.

கோகுலன் அண்ணையின்ரை உதவி மறக்கமுடியாது. நான் பிறகு எடுத்துக் கதைக்கிறன்." என்று தொலைபேசி உரையாடலை நிறைவு செய்தான்.

யசோ இதனைக் கோகுலன் எழுந்ததும் சொல்ல, இருவர் மனமும் ஆறுதலடைந்தது.

.................................

ராகினி உயர்தரவகுப்பு திறமையாகச் சித்தியடைந்திருந்தாள். அதுபற்றிய சந்தோசம் அவளிடம் காணப்படவில்லை. பாடசாலை யில் நடைபெற்ற இறுதிக் கொண்டாட்ட விழாவுக்கும் ஏனோ தானோ என்று போய் வந்தாள்.
அடுத்து என்ன செய்வதென்று அவள் யோசிக்காமல், முயற்சியும் செய்யாமல் தன்னறைக்குள் முடங்கிக் கிடந்தாள்.

தாமோதரனும் நீலாவும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அலுத்துப் போய் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள்.

ஒரு பிள்ளை என்று செல்லம் கொடுத்து வளர்த்ததின் விளைவு, இன்று தாய்க்கும் தகப்பனுக்கும் கழுத்தை நெரிக்குமளவுக்குக் கவலையைக் கொடுத்தது.

"இப்பிடிப் பிடிவாதமாக நிற்கிறாள், எங்கடை பிள்ளை தானோ இவள்... சீ... ஒரு சொல்லும் கேட்கிறாள் இல்லை!" பெருமூச்சு விட்டபடி, நீலா தாமோதரனைப் பார்த்தாள்.

“கேட்டதையெல்லாம் வேண்டிக் கொடுத்தம், பெரியவளாகுமட்டும் சாப்பாடுகூடத் தீத்தி விட்டம்... இப்ப தனக்கு எல்லாம் தெரியும் போங்கோ என்கிறாள்.“ நீலாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

மனைவியின் கண்ணீரைத் துடைக்கிற நிலையில் தாமோதரம் இல்லை. யாரை யார் தேற்றுவது என்று தெரியாத நிலை.

'உயிரை வைத்து வளர்த்து, எல்லாமே இவள்தான் என்று நம்பி இருக்க, இப்படிப் பேய் பிடித்தமாதிரியாகிவிட்டாள்.'
இப்படிச் சோகமாக அவர்கள் இருவரும் ஒரு நாள்கூட இருந்தது இல்லை.

“உழை உழை என்று உழைத்து, இப்ப என்னத்தைக் கண்டம்...? இராப்பகலா, சனி, ஞாயிறு என்றும் பார்க்காமல் நீங்கள் கடை நடத்தி.... கார் ஓடி, வியாபாரம் செய்து... பாருங்கோ பெற்ற ஒரு பிள்ளையை உருப்படியாக வளர்க்க முடியவில்லை.“

தாமோதரனுக்குப் பேச்சு வரவில்லை. நெஞ்சுக்குள் சோகம் புயலாக அடிக்க, இதழ்களைக் கடித்துக்கொண்டு யோசித்தார்.

“கடையும் வேண்டாம், ஒண்டும் வேண்டாம் வாங்கோ! கனடாவுக்கு இல்லாட்டி சிலோனுக்குப் போவம்... ஜேர்மனிக்கு வந்து கண்டது போதும்...“

அப்போ, மெதுவாகத் தொண்டை கரகரக்கச் சொன்னார் தாமோதரன்.
“நானும் மற்றச் சனங்களைப் போலை எட்டு மணித்தியாலங்கள் வேலையை செய்திட்டு பிள்ளையைக் கவனிச்சிருக்லாம். சொந்தத்தொழில் எண்டு நீ ஒருபக்கம், நான் ஒருபக்கம்... கடை.... கடை எண்டு...காசு சேர்த்தமே தவிர, பிள்ளையைக் கொன்றோல் பண்ணி வளர்க்கத் தவறிவிட்டம்.“ என்று மனச்சுமையுடன் தலையை அங்குமிங்கும் ஆட்டினார்.

உங்கடை அக்காவின்ரை மகன் பிரதீபனுக்குக் கட்டிக்கொடுப்பம். கொழும்பிலை நல்ல வேலை செய்யிறான். நாங்களும் அங்கை போய் இருப்பம், அவ்வளவு சனமும் உந்தப் பிரச்சனைக்கை அங்கை வாழுதுகள்தானே!“

"வெளிநாட்டுக்கு வந்தபோது இருந்த அந்தச் சந்தோசம்.... பார்! இப்ப ஒரு துளிகூட இல்லை, ஏன் வந்தமெண்டு நினைக்கத் தோன்றுது"

"அப்பா! ரெலிபோன் பண்ணி மச்சாளோடை கதையுங்கோ!" என்று மேலும் நீலா தாமோதரனைத் தூண்டினாள்.

அவருக்கு இந்த யோசனை சரியாகப்படவில்லை.

"நீ சொல்லுறது சரியில்லை, கட்டாயக் கலியாணம் செய்யப் போய், அந்தப் பெடியன்ரை வாழ்க்கையும் கெட்டுப்போகும்!"

"ஏனப்பிடிச் சொல்லுறீங்கள்? உங்கை எத்தினை இடத்திலை அப்பிடிச்செய்து சந்தோசமாக இருக்கேல்லையோ?"

"இருக்கினம் நீலா! ஆனால் ஒற்றுமையில்லாமல் இழுபறிப்படு வதும்.... பிரிஞ்சு போவதும் கூட நடக்குதுதானே! அதோடை சாதாரணமா வளர்ந்த பிள்ளையெண்டால் கலியாணம் கட்டினால் கட்டுப்பட்டு அடங்கியிருப்பாளெண்டு எதிர்பார்க்கலாம். ஆனால், ராகினி சுதந்திரமாக வளர்ந்தவள், விபரம் தெரியாதவள், நாகரீகம் கண்டவள், வசதிக்கு மேல் வசதிகள் இருப்பவள்.... இவளிட்டை இதை எதிர்பார்க்கேலாது. மருந்து குடிப்பன்... சாகப் போறன் எண்டு நிற்பாள்."

"அப்ப என்ன செய்யலாம்....? இப்பிடியே விட்டால்... இப்பவே எலும்புந்தோலுமாய்ப் போய்விட்டாள். அவள் வயதுப் பிள்ளையள் எல்லாம் யூனிவெசிற்றிக்கு எழுதிப்போட்டு முன்னேற வழி பார்க்குதுகள். இவள்...." மீண்டும் நீலா அழத் தொடங்கிவிட்டாள்.

"சரி, அழாதை.... எங்களிலை ஒண்டுமில்லை. கடவுளிலை பழியைப் போட்டுவிட்டு நடக்கிறதைப் பார்ப்பம். அந்தப் பெடியனுக்கு என்ன பெயர்....?"

"முரளி" என்றாள் நீலா.

"எங்கையெண்டு தெரியாது, கோகுலனோடை கதைச்சாத் தெரியும்."

"கதையுங்கோஅப்பா....!"

"ரெலிபோனிலை வேண்டாம்... நான் போய் நேரை கதைச்சிட்டு வாறன், அப்பதான் ஆறுதலாக எல்லாம் கதைக்கலாம்." என்றார் தாமோதரன்.

..........................

வடிவேலு வீட்டில் தொலைபேசிமணி ஒலித்தது.
மீனாட்சி தொலைபேசியை எடுத்துக் கதைத்தா. மறுமுனையில் விமலராணியின் குரல் ஒலித்தது.

"கொஞ்சம் பொறுபிள்ளை, நான் மருமகனிட்டைக் கொடுக்கிறன்." என்று, "தம்பி! கொழும்பிலையிருந்து ரெலிபோன்... ஓடி வாரும், பிள்ளை கதைக்கிறா....." என்றதும் வடிவேலு வந்து தொலைபேசியை வாங்கினான்.

மாமியின் குணமாற்றம் வடிவேலுவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மனோகரியும் தாயை விநோதமாகப் பார்த்தாள்.

மற்றவேளைகளில் என்றால் துள்ளிக் குதிக்கும் தாயும் மகளும் இன்று ஒன்றுமே எதிர்ப்புக் காட்டாமல் நடந்து கொண்டதை வடிவேலு கண்டுங் காணாமலும் இருந்தான்.

தான் கொழும்பிலே இருக்க முடிவு செய்திருப்பதாகச் சொன்னாள் விமலா.

தற்காலிகமாகப் படிப்பிக்க ஆசிரியை வேலை கிடைத்திருப்பதும் நண்பி வதனி வீட்டுக்குக்கிட்ட ஒரு வீடு வாடகைக்கு எடுத்திருப்ப தாகவும் சொன்னாள்.
மகள் பிருந்தா நன்றாகப் படிப்பதுபற்றியும் சொல்லிச் சந்தோசப் பட்டாள்.

இப்ப எல்லாம் ஓகே என்று அவள் மனம் ஆறுதற்பட்டதை அறிய வடிவேலுவுக்கு நெஞ்சம் நிறைந்தது.

தொலைபேசியை வைத்துவிட்டு வந்த வடிவேலுவிடம்,
"சுகமாக இருக்கினமாமோ?" என்று மனோகரி கேட்க, ஓம் என்று தலையாட்டிய வடிவேலுவின் கண்கள் ஏனோ கண்ணீரால் தழும்பியன.

"காசு ஏதும் வேணுமெண்டால் அனுப்புங்கோவன்."

"வேண்டாம்.... அவையைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளட்டும்." என்றான் வடிவேலு. ஏதாவது இசக்குப் பிசக்காகச் சொல்லி மீண்டும் ஒரு யுத்தம் பிறப்பிப்பதை அவன் விரும்பவில்லை.

மனோகரி உங்கள் விருப்பம் என்பதைப்போல, கையை விரித்து, கண்களை அசைத்துக் காட்டிவிட்டு எந்தவொரு எதிர்ப்பும் காட்டாமற்போவதை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இத்தனை நாட்களில் விமலாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்து இன்றுதான் முதன்முதலாக வீட்டில் வில்லங்கம் ஒன்றும் எழாமல் அமைதியாக இருந்தது. இதற்கு அடிப்படைக் காரணம் மீனாட்சி அம்மாவின் விசாப்பிரச்சனை என்பது வடிவேலுவுக்குப் புரிந்தது.

எவ்வளவு சண்டை வீட்டில் நடந்திருக்கும். அந்தச் சண்டையை ஓயவிடாது சகுனி மாதிரி எரிகிற நெருப்பிலை எண்ணையை ஊற்றிஊற்றி சண்டையை வளர்த்துக்கொண்ட மாமியானாலும் வடிவேலுவால் வெறுக்க முடியவில்லை.

குடிகாரன் என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லுவா. 'படியாதவன் என்ரை மகளைவிட அவருக்குப் படிப்புக் குறைவு...' பலபேருக்கு முன் ஏதோ சாதனை படைத்தது போலச் சொல்வா.

வடிவேலு ஒரு சிரிப்புடன் அந்தக் கடினமான வார்த்தைகளை விழுங்கி, தன் மனதுக்குள்ளே கண்ணீரைக் கொட்டியிருப்பான். மாமி போகப் போகிறா என்றதும், பிள்ளைகளைவிட கலங்கிப் போய் நின்றவன் வடிவேலுதான்.

உதவிக்கு மேலே உதவி பெற்று, மாமியின் சோசல் பணத்தை எல்லாம் எடுத்து சேமிப்புப் புத்தகத்தில் விழுங்கி வைத்திருக்கும் சறோ.... மனோகரியின் அக்காவோ, கணவனோ

போனாற்போகட்டும் என்று அரட்டையரங்கம் அடிச்சுக் கொண்டு இருந்தார்கள்.

.........................

தாமோதரன் கோகுலன் வீட்டுக்கு வந்தார்.

"வாங்கோ அண்ணை!" என்று வரவேற்றாள் யசோ.

"கோகுலன் இல்லையே?" கேட்டவாறே ஹோலில் உள்ள சோபாவில் உட்கார்ந்தார்.

"படுத்திருக்கிறார், எழுப்பிவிடுகிறன்!" என்று யசோ போக,

"என்ன இவ்வளவு நேரமும் படுத்திருக்கிறான்... இராத்திரி எங்கையாவது போனவனே?"

"ஏதோ அலுவலாக பாரீசுக்குப் போய், இண்டைக்கு விடியத்தான் வந்தவர்.

"அப்ப விடும் யசோ, படுக்கட்டும்... நான் பிறகு வாறன்." தாமோதரன் எழுந்தார்.

"இல்லையண்ணை இருங்கோ! தேத்தண்ணி வைக்கிறன், குடியுங்கோ..." என்று யசோ அவரை அன்புடன் தடுத்து, சமையலறைக்குட் செல்ல முனைந்தாள்.

அப்போ....
"யசோ!" என்று தாமோதரன் கலங்கிய குரலில் கூப்பிட, அவள் எதிர்பாராத அதிர்ச்சியுடன்,
"என்னணை...?" என்று நின்று அவரைப் பார்த்தாள்.

தாமோதரனை அப்படி ஒரு சோகநிலையில் யசோ பார்த்தது இல்லை. கண்கள் கூடக் கலங்கியிருந்தன.

மகளின் செயல்களை அவளிடம் சுருக்கமாகக் கூறினார். மனக் கலக்கத்தினால் அவர் தொண்டை கரகரத்தது. பலமுறைகள் செருமிக்கொண்டார்.

ஆறுதல் சொன்ன யசோ,
"நான் அவரை எழுப்பி விடுகிறன், கதையுங்கோ!" என்று படுக்கையறைக்குட் சென்றாள்.

சிலநிமிடங்கள் செல்ல, கோகுலன் நித்திரை இடையே முறிந்த சோம்பலுடன் ஹோலுக்குள் வந்தான்.

"அண்ணை சொல்லுங்கோ!"

"இப்பதான் படுத்தனியாம், நான் போயிட்டுப் பிறகு வாறன்.. நீ போய்ப்படு!"

"சீ... சும்மா படுத்திருந்தனான், பஞ்சியாக் கிடந்தது. இனி எழும்பத்தானே வேணும்." என்று சோம்பலை முறித்துக் கொஞ்சம் உற்சாகத்தை வரவழைத்தான் கோகுலன்.

அப்போ தேநீருடன் யசோ வந்தாள்.

தாமோதரன், கவலை வார்த்தைகளில் தொனிக்க... ராகினி, முரளி போனபின் எதிலுமே ஆர்வமின்றி, சொல்வதும் கேட்காமல் பேய் பிடித்தவள் போல இருப்பது பற்றிக் கூறினார்.

கோகுலன் எழுந்து சென்று முகத்தைக் கழுவிவிட்டு வந்து, சிறு தாளிலே முரளியின் தொலைபேசி இலக்கத்தைக் குறித்துத் தாமோதரனிடம் கொடுத்தான்.

அதை வாங்கிப் பார்த்துவிட்டு, புரியாதவராய் கோகுலனை நோக்கினார் தாமோதரன்.

"லண்டனிலை இருக்கிறான்... எனக்கும் இரண்டு நாளுக்கு முதல் தான் இந்த நம்பரைத்தந்தவன், விருப்பமெண்டால் கதையுங்கோ"

"பிள்ளையளைச் செல்லமாக வளர்த்ததன் விளைவு இப்பதான்டா தெரியுது! ஐயோ எண்டு குளறியழவேணும் போலை கிடக்கும்"

"ஒரு பிள்ளையெண்டு கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து, கண் கலங்காமல் மகாராணி மாதிரி வளர்த்துவிட, இப்பிடிப் பிடிவாதமா... தான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்கிறாள்... ஒண்டும் செய்ய முடியாமற் கிடக்கு!"

"யோசிக்காதேங்கோ அண்ணை!" என்றாள் யசோ.

"வெளிநாடுகளிலை பிள்ளைகளை வளர்க்கிறது சரியான கஸ்டம்.. நீங்கள் வடிவா வளர்த்தும்.. சூழ்நிலையள் பிள்ளையளைக் கெடுத்துப் போடும். கவலைப்படாதேங்கோ, ராகினி நல்லவள்.... ஏதோ கஸ்டகாலம்....!" ஆறுதல் கூறினான் கோகுலன்.

"நீலாக்காவைக் கவலைப்பட வேண்டாமெண்டு சொல்லுங்கோ, பின்னேரம் வீட்டை வாறம்" சொன்னாள் யசோ.

தாமோதரன் போய்விட்டார்.
"முரளியுடன் ஒருக்காக் கதையுங்கோ!" என்று யசோ சொல்ல, கோகுலனும் எடுத்துக் கதைத்தான்.

தாமோதரன் வந்து ராகினி பற்றிக் கதைத்ததைக் கேட்டதும் முரளி ஒருகணம் மௌனமாக இருந்தான்.

ராகினியை அவன் மறக்கவில்லை என்றது புரிந்தது. தொடர்பு கொண்டு கதைத்தால் இருபகுதியினருக்கும் நல்லது என்று கோகுலனுக்குப்பட்டது.

தாமோதரனிடம் தொலைபேசி இலக்கம் கொடுத்ததையும் அவர்கள் எடுத்துக் கதைத்தால் கோபிக்காமற் கதைக்கும் படியும் ஆலோசனை கூறிவைத்தான் கோகுலன்.

..............................

முரளியின் தொலைபேசி இலக்கத்தை கோகுலன் கொடுத்ததை நீலாவிடம் சொல்லி, இருவரும் மகளின் அறைக்குப் போனார்கள்.

அசோகவனத்தில் சீதை சிறைப்பட்டிருப்பதுபோல தோற்றத்தில் ராகினி இருந்தாள். நாட்கணக்காக ஒழுங்கு செய்யாமல் அறையில் சாமான்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன.

தாயைக்கூட அறைக்குள் நுழைய அனுமதிக்கமாட்டாள் ராகினி. கோபமே உருவாகக் குளறுவதும் போட்டடிப்பதுமே அவள் செயற்பாடாக இருக்கும். அதனைப் பார்த்துப் பார்த்துத் தாயும் தகப்பனும் சலித்து, மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் சோர்ந்து, வாடி இருந்தவர்களுக்கு, கோகுலன் கொடுத்த முரளியின் தொலைபேசி இலக்கம் மீண்டும் ஒரு நம்பிக்கை ஊற்றாக எழுந்தது.

தாமேதாதரனும் நீலாவும் கதவைத் திறந்து உள்ளே வர, சீறிக் கொண்டெழுந்தாள் ராகினி.
"அவனைக் கொன்றது மாதிரி என்னையும் கொல்லுங்கோ!" என்றாள் ஆவேசத்தில்.
தாமோதரன் 'ம்' என்று சோகமாகச் சிரித்தார். தன் மகளின் அறியாமையையும் விளக்கமின்மையையும் எண்ணி வேதனையுடன் பார்த்தார்.

"உன்னைப் பெற்றவங்களடி நாங்கள்.... என்ன கதைக்கிறாய்? நீ நல்லாய் இருக்கவேணும் எண்டுதானே நாங்கள் நினைப்பம், ஏன் சும்மா வார்த்தைகளாலை எங்களைக் கவலைப்படுத்திறாய்?"

"என்னை நீங்கள் கவலைப்படுத்திறதை விடவோ....!"

"உன்னை ஆர் கவலைப்படுத்தினது?" கேட்டார் தாமோதரன்.

ராகினி பேசவில்லை. முறைத்துப் பார்த்துவிட்டு, வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

நீலா முரளியின் தொலைபேசி நம்பரை நீட்டினாள்.

"என்ன....?" என்று சினத்துடன் வாங்கிப் பார்த்த ராகினி, அதில் 'முரளி' என்று எழுதி, தொலைபேசி இலக்கம் இருப்பதைக் கண்டதும், அவள் முகம் கதிரவனைக் கண்ட கமலம் போல மலர்ந்தது.

"எடு! எடுத்துக்கதை!" என்று சொல்லிவிட்டு தாமோதரன் வெளியே போனார். அவரை முந்திக்கொண்டு ஹோலுக்குள் இருந்த தொலைபேசியை நோக்கிப் பறந்தாள் ராகினி.

எங்கிருந்து இவளுக்கு இவ்வளவு சக்தி வந்ததென்று ஆச்சரிய மாகப் பார்த்தாள் நீலா.

தொலைபேசி இலக்கங்களை அமர்த்த, மறுமுனையில் ,"ஹலோ!" என்று முரளியின் குரல் ஒலித்தது.

"டேய் முரளி!" என்று ஆனந்தத்தில் ஆரவாரித்த மகளின் சந்தோசத்தைக் கண்டு, நீலா, தாமோதரனின் மார்பில் கண் கலங்கியபடி சாய்ந்தாள்.

"அவள் விருப்பப்படி நடக்கட்டும்.... அவள் சந்தோசம்தான் எங்கள் சந்தோசம்!" மனைவியின் முதுகை ஆதரவுடன் வருடியவாறு கூறினார் தாமோதரன்.

ராகினி நீண்டநேரம் முரளியுடன் கதைத்தாள். அவளுக்கு இடையூறு செய்யாமல் தாமோதரனும் நீலாவும் அங்கிருந்து வெளியேறினர்.

பிள்ளைகளின் மீது வைத்திருக்கும் பாசத்தினாலும் பிற்காலத்தில் அவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்பதாலும் தான் பெற்றோர் கண்டிப்புடன் நடந்து கொள்கிறார்கள் என்பதை அதிகமான பிள்ளைகள் புரிந்துகொள்வதில்லை. பிறகு அவர்கள் வளர்ந்தபின் அதைப் புரிந்து கொள்ளும் போது காலம் கடந்து விடுகிறது.

.........................

கண்ணனின் தந்தை கடினமான சுகயீனமுற்றிருந்தார். பிள்ளையைப் பார்க்க ஆசைப்படுவதாகவும் வசதிப்பட்டால் வரும்படியும் ஊரிலிருந்து கடிதம் வந்திருந்தது.

சமாதானத்துக்கான கதவுகளைத் திறந்துவிட்டு, தமிழ்மண் மீட்கும் விடுதலை வீரர்கள் இரண்டாயிரமாம் ஆண்டு மார்கழியில் தொடங்கிய போர்நிறுத்தம் தொடர்ந்துகொண்டிருந்தவேளை....

வெளிநாடுகளிலிருந்து தமிழர்கள் தங்கள் உறவுகளைப் பார்க்க பெருவாரியாக யாழ்ப்பாணம்வரை போய் வந்து கொண்டு இருந்தார்கள்.

கண்ணனும் போக விழைந்தான். மனைவி வேணிக்கு விருப்பம் இல்லை... தடுத்தும் பார்த்தாள். 'அதிக பணம் செலவாகும், உறவினர்களுக்கு வேறை கொடுக்க வேண்டும் என்பார்... பள்ளிக்கூடம், கோவில் என்று அன்பளிப்புக்கு வருவார்கள்.' என்று எண்ணினாள் அவள்.

"கைக்குழந்தையுடன் என்னை விட்டுவிட்டு நீங்கள் ஊருலாத்தப் போறீங்கள்!" என்று அவன் மனதை மாற்ற நினைத்தாள்.

யசோ, கோகுலன், ஜானகி, பரதன் யாவரும் கண்ணன் பக்கம் பேசினார்கள்.

"ஏன் மறிக்கிறீர்....? நாங்களெல்லாம் இருக்கிறம்... உம்மைப் பார்ப்பம்... போயிட்டு வரட்டும்!" என்றாள் யசோ.

"ஆம்பிளைப்பிள்ளை எண்டு ஆசையோடு பெத்து வளர்த்ததுகள், நினைவோடு இருக்கேக்கை, ஆசைப்படேக்கை தடுக்கக்கூடாது. போட்டுவரட்டும்... எவ்வளவு பேர் போய் வருகினம், மறிக்காதை. போய் வருமட்டும் நீயும் பிள்ளையும் எங்கடை வீட்டிலை வந்து இருக்கலாம்." என்றாள் ஜானகி.

"உங்களுக்கென்ன சொல்லுவீங்கள்... ஏதாவது நடந்தால் பாதிக்கப்படுகிறது நானெல்லோ! அதோடை பிளேன் ஓடாட்டி என்ன செய்யிறது? பிந்தினால் லீவும் முடிஞ்சு போகும். வேலையாலை நிற்பாட்டி விடுவாங்கள்... எல்லாம் அரோகராத்தான்." சொன்னாள் வேணி.

"ஏன் இப்பிடி அபசகுனமாப் பேசிறாய்? அங்... உனக்கு ஒருநாளும் நல்ல வார்த்தையே வாயிலை வராதே...!" கண்டித்தான் கோகுலன்.

"சாவது ஒரு நாள்
வாழ்வது பல நாள்
சரித்திரம் படைப்போம்
தமிழர்கள் நாங்கள்!" கவிதையாகச் சொன்ன பரதன், "ஒன்றும் நடக்காது.... கொள்ளி வைக்க, தவம் செய்து பெற்றபிள்ளையை, தான் சாக முதல் ஒருக்காக் கண்ணாலை பார்க்க ஆசைப்படுது கள்... மறிக்காதையும்... ஒரு பயமுமில்லை, போயிட்டு வரட்டும்." என்று வேணிக்குச் சமாதானம் சொல்லி, கண்ணனுக்கு உற்சாகமூட்டினான்.

..............................

கோடைகாலவிடுமுறை நாட்கள் கொழுத்தும் வெயில் நாட்களை யும் உள்ளடக்கியதாக விரைந்து கொண்டிருந்தன.

பிரதான நெடுஞ்சாலைகளில் எல்லாம் கார்கள் நெருக்கமாக நிற்பதும் ஊர்வதும் விடுமுறை காலங்களில் ஜேர்மனியில் வழக்கமானதொன்றாகும்.

வேலை செய்யும் இடங்களில் இவ்வேளைகளில் லீவு எடுக்க முடியாத திண்டாட்டமாக இருக்கும். பிள்ளைகளுக்குப் பாடசாலை லீவு என்பதால் ஒரே விளையாட்டும் கொண்டாட்டமுமாக இருக்கும்.

குசன் சிறுவர் பாடசாலை வாழ்க்கை மூன்று ஆண்டுகளை முடித்துக்கொண்டு பள்ளிக்குப் போகக் காத்துக் கொண்டு இருந்தான்.

விடுதலை முடிந்து ஆவணியில் பள்ளிக்கூடம் தொடங்கவிருந்தது. அப்போ குசன் முதலாம் வகுப்பில் அடியெடுத்து வைக்கப் போகிறான்.

முதலாம் வகுப்பு என்று விளையாட்டாக நினைத்துவிட வேண்டாம்.
எத்தனையோ வைத்திய பரிசோதனைகள்... அறிவுத்திறன்கள், இவையெல்லாம் ஒழுங்குமுறையில் இடம்பெற்று, தகுதி இருக்கு என்று சான்றுகள் பெற்று, பிள்ளைகள் பல்கலைக்கழகம் ஒன்றுக்குப் போவது போன்று வீட்டில் ஒரு ஆர்ப்பரிப்பு நிலவ, தோளில் கொழுவும் பாக்கிலிருந்து... புத்தகம், கொப்பி... அடடா எவ்வளவோ தயார்நிலையில்....! முதல்நாள் எந்த உடுப்புப் போட்டுக்கொண்டு போவதென்று அது வேறு திட்டம் தீட்டலுமாய் நாட்கள் சென்றன.

"கொம்பனியிலை சொல்லிச் செய்த மாதிரி வான் வாங்கியிருக்கி றீங்கள்!" என்று கேட்டுக்கொண்டு தாமோதரனின் தங்கை சாரதா வந்தாள்.

"நாங்கள் ஆறுபேர்தானே!" சொன்னாள் ஜானகி.

பரதனண்ணையின்ரை இரண்டு பிள்ளையள்... உங்கடை இரண்டு பிள்ளையள்... இனி உங்களுக்கு ஒரு பிள்ளை... சரி தானே...ஏழு சீற் வானுக்கு ஏழுபேர்!"

"சாரதாவுக்கு எங்களைப் பார்த்துக் கிண்டல் செய்யாட்டி நித்திரை வராது." சொன்னான் பரதன்.

"ஏன் நான் சொல்லுறதிலை ஏதாவது பிழை இருக்கே?" கேட்டாள் சாரதா.

"நாங்கள் வாழுறது ஜேர்மனி. இங்கை எப்பிடியும் கதைக்கலாம், எப்பிடியும் வாழலாம். ஆனால் எங்களுக்கெண்டு ஒரு பாதை இருக்கு... அதிலை நாங்கள் பயணம் செய்யிறோம். நீ சொன்னது உனக்குச் சரியாக இருக்கலாம்... ஆனால் எங்களுக்கு அது பொருந்தாது." சொன்னாள் ஜானகி. அவள் முகம் சற்று வாடியிருந்தது.

"ஏன் ஜானகியக்கா கோவிக்கிறீங்கள்? பகிடிக்கெல்லே சொன்னனான்." சமாளித்தாள் அவள்.

பள்ளிக்கூடபாக்குடன் குசன் அங்குமிங்கும் ஓடித் திரிய, "பள்ளிக்கூடம் போகப்போகிறீரோ?" குசனைப் பார்த்து சாரதா கேட்டாள்.

"ஓமன்ரி!" பதில் சொல்லிவிட்டு ஓடினான் குசன்.

நாங்கள் பிள்ளையளை எவ்வளவு ஆசையா வளர்த்து கின்டர்காடின் போகுது பிள்ளை... பள்ளிக்கூடம் போகுது பிள்ளை... உயர்படிப்புப் படிக்குது பிள்ளை என்று சந்தோசமா மார்பு தட்டிக்கொண்டு... பிள்ளை எங்கடை சொல்லுக் கேட்கும், பிற்காலத்திலை எங்களைப் பார்க்கும் எண்டு கனவு கண்டு கொண்டிருக்கிறம். அதுகள் எங்கெங்கை ஓடுதுகளோ ஆர் கண்டார்?" என்று விரக்தியுடன் சொன்னாள் சாரதா.

"ஏனப்பிடிச் சொல்லுறீர்....?" புரியாமற் கேட்டான் பரதன்.

"ராகினியைப் பார்க்கேல்லையே... அண்ணையும் அண்ணியும் எவ்வளவு செல்லமா வளர்த்தவை.... இப்ப பாருங்கோ... படிப்பும் வேண்டாம், பணியாரமும் வேண்டாம் எண்டு எரிஞ்சு விழுகிறாள்."

"நாகரிக வேகத்திலை சில பிள்ளையள் குழம்பும் எண்டதை நான் மறுக்கேல்லை...பிள்ளையளின்ரை வளர்ப்புப் பெற்றோரிலை தங்கியிருக்கு!"

"பரதனண்ணை! நீங்கள் சொல்லுறது இந்த நாடுகளிலை பொருந்தாது. ரிவியிலையிருந்து பள்ளிக்கூடம் வரை வெள்ளைக் காரரன்ரை நாகரிகத்தைப்பார்க்கிற பிள்ளையள், தாய்.. தகப்பன்ரை சொல்லைக் கேட்கப் போகுதுகளே? இன்னும் கொஞ்சநாள் சென்றால் பிள்ளையள் எங்களைப் பெயர் சொல்லித்தான் கூப்பிடுங்கள்."

"ஏதோவொன்றுக்கு இங்கை வந்து ஒதுங்கி..... ஏதேதோ எல்லாத்தையும் பறி கொடுக்கிற நிலையிலை இருக்கிறம்." சொன்னாள் ஜானகி.

தாய், தகப்பன், பிள்ளையளுக்காக நேரத்தை ஒதுக்கவேணும்.. பணம் சேர்க்கவேணும் எண்டு குழந்தைகளை விட்டிட்டு அப்பா, அம்மா இருவரும் வேலைக்குப் போகும்போது... குழந்தை பாவம்,

போதிய அரவணைப்பில்லாமல் தவிக்கும்..... இது சிறுபிள்ளை மனதிலே பெரிய பாதிப்பைக் கொடுக்கும்." சொன்னாள் ஜானகி.

"நீங்களும் வேலைக்குப் போறீங்கள்தானே.... பிறகென்ன?" ஜானகியிடம் விதண்டாவாதமாகக் கேட்டாள் சாரதா.

"பிள்ளை பள்ளிக்குப் போனபின் இரண்டு மணித்தியாலங்கள் போறன்.... அவங்கள் வீட்டுக்கு வரும்போது நான் வீட்டிலை நிற்பன்."

"சின்னவயதிலையென்ன.... ஏ.எல் படிக்கேக்கைகூட, வீட்டை வரும்போது கேற்றுக்கு வெளியிலேயே 'அம்மா...!' என்று கூப்பிட்டுக்கொண்டு வருவம்.... அந்தநேரம் பார்த்து அம்மா வீட்டிலை இல்லாட்டி இருந்த உற்சாகமெல்லாம் இடிந்து போய் விடும்."

"பரதண்ணை நீங்கள் சொல்லுறீங்கள் சரி.... இந்த நாட்டிலை அதென்னெண்டு ஒத்துவரும்...? வீடு வாங்கிறம்... ஊருலாப் போகிறம்... பிள்ளையளக்கு மாறிமாறி விளையாட்டுச்சாமான், உடுப்பு எண்டு காசுக்கு மேலை காசு வேண்டிக்கிடக்கு!"

"ஆசைகள் வளர்ந்துகொண்டே போகும்.... அடக்கி வாசிக்கத் தெரியாட்டி தாமோதரமண்ணை மாதிரி, காலங்கடந்து கலங்க வேண்டியிருக்கும். அதோடை அதிகமான பிள்ளைகள் இங்கை படிப்புக்கு நெஞ்சில் இடம் ஒதுக்குவதில்லை. புதியபுதிய விளையாட்டுக்கருவிகளைக் கவர்ச்சிகரமாக வியாபாரத்துக்காகத் தினந்தினம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதில் மயங்கி தம்பொழுதை வீணடித்து பாழாக்குகிறார்கள். என்ன செய்ய... படிக்கிறபிள்ளை படிக்கும் எண்டிருக்காமல் நாங்கள் முழு அக்கறை எடுக்க வேண்டும்.

எங்கடை நாட்டிலை சண்டையும் கஸ்டமும் ஓட்டமும் பதுங்கலும் என்ற போர்க்கால சூழலிலும்... படிக்க ஆமான விளக்கு இல்லாத போதும்கூட எவ்வளவு திறமையாகப் படிக்கிறார்கள்." என்று பரதன் சொல்லிக் கொண்டிருக்கும் போது தொலைபேசி அடித்தது.

ஜானகி தொலைபேசியைத் தூக்கி,"ஹலோ!" என்று குரல் கொடுத்தாள்.

மறுமுனையில் தாமோதரன்....
கோகுலனும் யசோவும் நிற்கினமா என்று விசாரித்தார்.

“வரேல்லை....“

“வாறன் எண்டிச்சினம்... காணேல்லை, அதுதான் கேட்டனான்.“

“என்னவாம் ராகினி... இன்னும் பிரச்சனை குடுக்கிறாவோ?“

“ஜானகி! ஒருத்தருக்கும் சொல்லாதையும்.... முரளியின்ரை நம்பர் கிடைச்சது.... கோகுலன்தான் தந்தவர். அவனோடை எடுத்துக் கதைச்சதும் என்னாலையே நம்பமுடியவில்லை. ஓடிப்போய் குளிச்சாள்... தண்ணிச்சத்தத்துக்கு மேலாலை பாட்டுச்சத்தம்... தானாகவே தாயிட்டைக் கேட்டுச் சாப்பிட்டுவிட்டு, யூனிவெசிற்றி யிலை இருந்து அவளுக்குப் படிக்க இடம் கொடுப்பது பற்றி வந்த கடிதங்களைப் பிரித்துக்கொண்டிருக்கிறாள்.“ என்ற அவர் வார்த்தைகளில் சந்தோசம் தொனித்தது.

..........................

அன்று ஆடி இருபத்திநான்கு.....
வேணிவீட்டுத் தொலைபேசி காலை எட்டுமணிக்கே அடித்தது.

கண்ணனாகத்தான் இருக்கும்.... யாழ்ப்பாணத்திலை இருந்து எடுக்கிறார் என்று ஆவலும் அவசரமும் போட்டியிட, தொலை பேசியைத் தூக்கிக் குரல் கொடுத்தாள்.

மறுமுனையில் சாரதா.....
“கொழும்பிலை பெரிய பிரச்சனை.... கட்டுநாயக்கா எயர்போர்ட் எல்லாம் எரியுது.... நீ என்ன இன்னும் படுத்திருக்கிறாய்!“

“எயர்போர்ட் எரியுதோ....?“ தூக்கக்கலக்கத்தில் ஒலித்தது வேணியின் குரல். எயர்போர்ட்டுக்குப் பக்கத்திலை இருந்த

விமானத்தளம் என்று சாரதா றேடியோவில் ஒலித்த செய்தியை அப்படியே வேணிக்குச் சொன்னாள்.

அத்துடன், "எங்கை கண்ணன் இன்னும் கொழும்புக்கு வரேல்லையே?" கேட்டாள்.

"இல்லை சாரதா!" அழாக்குறையாக வேணியிடமிருந்து பதில் வந்தது.

"விசர்ச்சனங்கள்... கறுப்பு யூலை... ஏதும் நடக்குமெண்டு குழந்தைக்குக் கூடத் தெரியும். சும்மா போய் மாட்டுப்பட்டு நிக்கிறார்." கிண்டலாகக் கூறினாள் சாரதா.

"இவர் மட்டுமே.... எவ்வளவு சனம் போயிருக்கும்!"

"கொழும்பு எயர்போர்ட் பூட்டியாச்சு... இனி எப்பெப்ப திறக்கி றாங்களோ! அதோடை யாழ்ப்பாணத்திலையிருந்து கொழும்புக்கு பிளைற்றும் ஓடுதோ தெரியாது." விடயத்தைப் பூதாகரமாக வர்ணித்தாள் சாரதா.

வேணி கலங்கிப்போனாள்.

"வாறகிழமை வேலைக்குப் போகவேணும். பிந்தினால் நிற்பா ட்டிப் போடுவாங்கள்." அங்கலாய்த்தாள் அவள்.

சாரதா தொலைபேசியை வைத்ததும் வேணி ஜானகி வீட்டுக்கு எடுத்துப் புயல் போலச் சீறினாள்.

"உங்கள் எல்லாருக்கும் இப்ப சந்தோசம்தானே!" ஜானகிக்கு விளங்கவில்லை.

பரதன், கோகுலன், யசோ யாவரும் ஹோலுக்குள் இருந்தார்கள். அவர்கள் செய்தியறிந்து றேடியோவில் மேலும் புதிதாக ஏதாவது செய்தி வருகிறதா என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

வேணி குற்றம் சுமத்தினாள்.
"ஒண்டும் நடக்காது, போட்டுவா! என்று அனுப்பினீங்கள். பாருங்கோ! இப்ப அந்தாள் அங்கை என்னபாடு படுகுதோ? வேலையும் போகப்போகுது....."வேணி பேசுவது மற்றவர்களுக்கும்

கேட்பதற்காக, ஜானகி தொலைபேசியின் ஒலிபெருக்கியை அழுத்திவிட்டாள்.

வானொலியின் சத்தத்தைக் குறைத்துவிட்டான் கோகுலன். எல்லோர் செவிகளும் தொலைபேசி உரையாடலில் இலயித்தன. வேணி, ஜானகிக்கும் யசோவுக்கும் வாயில் வந்தபடி ஏசுவது கேட்டது.

"நீங்கள் ஒழுங்காக் குடும்பம் நடாத்தினால்தானே நன்மை, தீமை விளங்கும். நீ பரதனை இரண்டாந்தரமாகக் கட்டிக்கொண்டு கூத்தடிக்கிறாய்.... அவள் யசோ மலடி.... அண்ணையை மயக்கிக் கட்டிக்கொண்டு ஜேர்மன்காரியள் மாதிரி மினிக்கிப் பூசிக் கொண்டு திரியிறாள்... நான் அந்தாளைச் சிலோனுக்குப் போக விட்டிட்டு வயிற்றிலை நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறன்..." என்று ஜானகியை இடையே பேசவிடாமல் 'பொலபொல' என மழையாகப் பொழிந்துவிட்டு, 'படார்' என்று தொலைபேசியை வைத்துவிட்டாள்.

ஜானகிக்கு நெஞ்சு படபடத்தது. 'என்ன பேசுறாள் இவள்...? தன்ரை பிரச்சனையைத் தூக்கி எங்கடை தலையிலை போடுறாள், நானும் யசோவும் காரணம் எண்டிட்டு, வாயிலை வந்ததையெல்லாம் கக்கிறாள்.' ஜானகியின் குரலில் கவலை கரைபுரண்டது.

யசோ வாய் திறக்கவில்லை.... வேணி கூறிய விசம் கலந்த சொற்கள் நெஞ்சிலே கூரிய அம்புகளாகக் குற்றி, கண்களைக் கலங்க வைத்தன.

"தமிழரின் வீரத்துக்கு மற்றுமொரு வெற்றி முத்திரை பதிக்க சிங்களத்தின்கோட்டைக்குள்ளேயே புகுந்து சரித்திரம் படைத்திட்ட மாவீரர்களைப் பற்றி ஒருகணம் சிந்தித்தாவா இந்த வேணி மச்சாள்.....? கண்ணனை மாதிரி எத்தினைபேர் யாழ்ப்பாணத்தில் கொழும்பில் என்று போய் நிற்கினம்.... அங்கை ஒரு பயமும் இல்லை....அப்பிடித்தான் ஏதும் நடந்தாலும், தாய் தகப்பனைப் பார்க்கப்போன இடத்தில் செத்தாலும் அது ஒரு துணிச்சலான சா தானே! சனங்கள் பாராட்டிப் புகழும்.... மண்ணில் இருந்து கொண்டு தாய்த்தமிழுக்காக மரணத்தை நேசிக்கும் தியாகிகள் பிறந்த பொன்னான நிலம் எங்கள் தமிழீழம்.... அங்கே பிறப்பதற்கும்சரி, இறப்பதற்கும்சரி கொடுத்து வைக்க வேண்டும்." காரமாக வந்தன பரதனின் வாயிலிருந்து வார்த்தைகள். வேணி

இருந்திருந்தால் நாவை ஒட்ட வெட்டியிருப்பான். அப்படியொரு கோபம் அவன் நெஞ்சிலே கொப்பளித்தது.

"இருபது வேங்கைகள் அந்நியமண்ணிலே அரச இயந்திரங்களின் கண்ணில் மண்ணைக்கொட்டிவிட்டு, தமிழரின் அடிமைத்தளை உடையும்.... விடியும் தமிழீழம் என்று உலகெங்கும் அதிர இடிமுழங்கிவிட்டுப் போனார்களே!

அந்தத் தியாகிகளையும் அவர்களின் உறவுகளையும் ஒருகணம் நெஞ்சில் நிறுத்திப் பார்க்கவில்லை.... எங்களைக் குற்றம் சொல்லவந்திட்டா. அவவின் வார்த்தைகளுக்கு நீங்கள் ஏன் கவலைப்படுகிறீங்கள்?" என்று ஜானகியையும் யசோவையும் பார்த்தான் பரதன்.

......................

கண்ணன் யாழ்ப்பாணத்தில் தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் பெற்றவர்களையும் கூடப்பழகியவர்கள், கூடப்படித்தவர்கள் என்று எல்லோரையும்... எத்தனையோ தாக்கங்கள்... இழப்புகள்... இடம் பெயர்வுகள்... மரணங்கள், மறைவுகள், பிரிவுகள் என்று பல சோதனைகளை... சந்தித்த உறவுகளை மீண்டும் அருகே கண்டு அளவளாவவும் சந்தோசத்தில் மனம் நிறைந்திருந்தான்.

யசோவின் பெற்றோர் கண்ணனின் வீட்டாருக்குப் பெரிதும் உதவியாக இருந்ததைக் கண்டான்.

யசோவைக் கலியாணம் செய்யாததுபற்றி ஒரு சொல்லுக்கூடக் கண்ணனை அவர்கள் கேட்கவில்லை. பெருந்தன்மையாக அவர்கள் நடந்துகொண்டது அவனின் நெஞ்சைக் குத்தியது.
போதாததுக்கு தாயும் தகப்பனும் தம்பியாரும் அவனைக் கடிந்து கொண்டார்கள்.

"நீ விட்டது பிழையடா மகனே! என்ன இருந்தாலும் அந்தப் பிள்ளைக்கு நீ துரோகம் செய்திருக்கக்கூடாது.

வெளியழகை மட்டும் கொண்டு மனிசரை அளவு போடக்கூடாது. யசோவின் உள்ளம் தங்கமடா! நீ கொடுத்துவைக்கவில்லை."

கண்ணனின் தகப்பன் வருத்தமாக இருந்தவர், மகனைக் கண்டதும் பாதி வருத்தம் நீங்கியவராய் எழுந்து நடந்து திரிய ஆரம்பித்துவிட்டார்.

கட்டுநாயக்கா தாக்குதலின் எதிரொலியாக யாழ்-கொழும்பு விமானப்போக்குத் தடைப்படலாம் என்று பயந்தபோதும் அப்படி ஏதும் நடக்கவில்லை. கண்ணன் திட்டமிட்டபடி மீண்டும் கொழும்பு பயணமானான்.

என்ன அழகான நிலம்..... அதனை அரசு படுத்தியிருக்கிற அலங்கோலத்தைப் பார்க்க, கண்ணனுக்கு நெஞ்சு செயலிழந்து போனது.

எங்கு பார்த்தாலும் இராணுவம்... மூலைமுடுக்கெல்லாம் அரசின் அட்டகாசங்கள்... சோதனை... சோதனை... சோதனை பார்க்க மனங்கொதித்தது.

சோலையாக இருந்த பூமி, சூறையடிக்கப்பட்டு சுடுகாடாகிக் கிடந்தது.
ஏக்கப்பெருமூச்சு விட்டான் கண்ணன். இதுவரை காலமும் மொழிப்பற்று, மண்பற்று என்று எதிலும் ஈடுபடாதிருந்த அவன், நேரிலே அந்த நெறிகெட்டவர்களின் நீசச்செயல்களின் சுவடுகளைக் கண்டு மனம் இளகிப்போனான்.

தமிழனுக்கென்றொரு நாடு தேவைதான், வேறு வழியில்லை.
'கொடுமைக்கு மேல் கொடுமையிழைக்கும் நீதி கெட்டவர்களை நீதியான வழியில் பாடம் கற்பிக்க முடியாதபோது, அநீதியான வழியிலே சென்றாவது நீதியைக் காக்க வேண்டும்' என்று கீதையில் கண்ணனின் வாசகங்களை எப்பவோ கேட்டதை நினைத்துக்கொண்டான்.

காய்ந்து ஒட்டிய உடலும் மறுபொழுது என்ன நடக்குமென்ற பீதியும் வெளியே போவோர், திரும்பி வருவாரோ என்ற நிச்சயமற்ற நிலையுமே வாழ்க்கையாகக் கொண்ட தமிழ்உறவுகளின் சுறுசுறுப்பை பார்த்தபடி... பிரிய மனமில்லாமல் யாழ் மண்ணை விட்டுப் பிரிந்தான் கண்ணன். கூட்டிக்கொண்டு வந்த

யசோவின் அப்பாவையும் சகோதரனையும் கட்டியணைத்து விடைபெற்றான்.

யாழ் சிங்கள மகாவித்தியாலயத்தில் சோதனைகளையெல்லாம் தாண்டிக்கொண்டு காத்திருந்த கண்ணன், பேருந்தில் செல்ல பெயர் கூப்பிட ஏறி அமர்ந்துகொண்டான்.

வழியெங்கும் போரின் சுவடுகளைத் தாங்கி நிற்கும் கூரையிழந்த சுவர் இடிந்த வீடுகள், பாடசாலைகள், கட்டிடங்கள், கோவில்கள் என்று வேதனையாய் பலாலி வரை நீண்டு கொண்டேயிருந்தது.

இடையில் பேருந்திலிருந்த பிரயாணிகளை இறக்கி, விசேட பரிசோதகரால் பஸ் சோதிக்கப்பட்டபின், மீண்டும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு நகர்ந்தது.

பலாலியில் மேலும் சோதனை... அணுவணுவாகச் சோதனை, வெயிலின் அகோரம் ஒருபக்கம்... தண்ணீர்விடாய் மறுபக்கம்.... பிறந்தமண்ணைவிட்டு, உயிர்உறவுகளைப் பிரிந்து மீண்டும் அந்நியமண்ணுக்குப் போகிறோம் என்ற துக்கம் நெஞ்சை அடைக்க, தகரக்கொட்டகைக்குள் இருந்த பிளாஸ்ரிக்கதிரையில் மற்றப்பயணிகள் எல்லோருடனும் சேர்ந்து அவனும் உட்கார்ந்தான்.

விமானங்கள் போவதும் வருவதுமான இரைச்சல் ஒலித்துக் கொண்டே இருந்தது. எல்லாம் இராணுவவிமானங்கள் தான்.

நேரம் பிற்பகல் ஒருமணி.... பயணிகள் விமானம் வந்து சேர்ந்தது. விமானத்திலிருந்து கொழும்பால் வந்த பயணிகள் இறங்கி வரிசையாக நடந்து பேருந்தை நோக்கிவர, பேருந்திலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் வரிசையாக விமானத்தை நோக்கிச் செல்ல அனுமதித்தனர்.

பலாலி வெட்டவெளி விமானநிலையப்பரப்பில் தமிழ்ப்பயணிகள் பலரும் பயங்கலந்த மௌனத்துடன் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பேரிரைச்சலுடன் அந்தச் சிறிய விமானம் பிரயாணிகளைத் தாங்கிக்கொண்டு வான்பரப்பில் கொழும்பை நோக்கிப் பறந்தது.

கோகுலனும் யசோவும் தாமோதரன் வீட்டுக்குச் சென்றார்கள்.

“கடையை விடப் போறீங்களெண்டு சனமெல்லாம் கதைக்குது... என்னண்ணை....?“ கேட்டான் கோகுலன்.

“உனக்குத் தெரியும்தானே ராகினியின்ரை பிரச்சனை! ஒண்டுக்கும் மனமில்லாமல் இருந்தது. இண்டைக்குத்தான் அவள் முகம் கொடுத்துப் பேசக்கூடியதாக இருக்கிறாள்.“ பெருமூச்சுடன் கூறினார் தாமோதரன்.

“அதுவும் நீங்கள் அந்த பெடியன்ரை நம்பரைத் தந்ததாலை... அவனுடன் எடுத்துக் கதைச்சபிறகு, அவளிலை தெரிஞ்ச மாற்றம் என்னப்பா இது..! என்றபடி நீலா தேநீர் கொண்டு வந்து உபசரித்தாள்.

“நாங்கள் என்ன செய்யிறது...?'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' எண்டுசொல்லுவினம், ஒண்டும் கதைக்கேலாது. என்னெண்டாலும் செய்யட்டும்!“ கவலைப்பட்டார் தாமோதரன்.

“கெட்டிக்காரப்பிள்ளை! ஊரெல்லாம் புகழ கலகலப்பா இருந்தவள்... நம்பவே முடியேல்லை...“ என்றாள் யசோ.

“அண்ணை! முரளி நல்லவன்... நீங்கள் யோசிக்காதேங்கோ, படிக்கட்டும்.... பிறகு பார்த்துப் பேசிச் செய்து வைக்கலாம். இப்ப ஏன் யோசிக்கிறீங்கள்?“ ஆறுதல் சொன்னான் கோகுலன்.

“எங்களிலை ஒண்டுமில்லை கோகுலன், இந்த நாட்டிலை பிள்ளையளை வளர்த்தெடுப்பது கஸ்டம். தான்தான் நினைத்த படியே அவர்கள் நடக்கிறார்கள். நல்லது இது... கெட்டது இது எண்டு சொல்லலாமே தவிர, தாய்தகப்பன் எண்ட உரிமையிலை எதையுமே கண்டித்துச் சொல்லமுடியாமற் கிடக்கு!“

“சாவன், விழுவன் எண்டுதுகள்.... தண்ணியைப் போட்டிட்டு வருகுதுகள்... இல்லாட்டிப் பொலிசுக்குச் சொல்லப்போறன் என்று சொல்லுதுகள்... ஏன் வெளிநாட்டுக்கு வந்தம் என்று போச்சுது.“

"நீங்கள் நினைக்கிறமாதிரி ஒண்டும் தலைமுழுகிப் போகேல்லை. வயதுப்பிள்ளையள் ஒண்டையொண்டு விரும்பிறது என்ன புதினமே? எல்லாம் தானாகச் சரிவரும்... கவலையை விடுங்கோ" என்றான் கோகுலன்.

அப்போ ராகினி பைலுடன் தன் அறையிலிருந்து வந்தாள். செந்தளித்த முகத்துடன், ஒழுங்காகத் தலை சீவி, அடக்கமாக அரைப்பாவாடை சட்டை போட்டுக்கொண்டு, இளந்தளிர்போல நடந்து வந்த ராகினியைக் கோகுலனும் யசோவும் கவனித்தார்கள்.

"அன்ரி! அங்கிள்!" என்று ராகினி கோகுலனுக்கும் யசோவுக்கும் வணக்கம் தெரிவித்து அவர்கள் பக்கத்தில் போய் அமர்ந்தாள். அவள் படிப்பைப்பற்றிக் கோகுலனும் யசோவும் விசாரித்தார்கள்.

ராகினி தன் கையில் உள்ள பையிலிருந்து தன் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளைக் காட்டினாள். அத்துடன் தொடரந்து படிக்க தான் விண்ணப்பித்திருக்கும் பல்கலைக் கழகங்களின் விபரங்களையும் விபரித்தாள்.

நீலா இரவுச்சாப்பாடு தயாரிக்கச் சமையலறைக்குட் சென்றாள்.

கோகுலனும் யசோவும் ராகினியுடன் தனியக் கதைக்கட்டும் என்று நினைத்து தாமோதரனும் எழுந்து சென்றார்.

ராகினி கதைக்கக்கூடிய பிள்ளை... முரளிக்கு அடி விழுந்தது... அவன் காணாமற் போனது என்ற அதிர்ச்சியில் மனம் குழம்பி, கோபக்காரியாய் பிடிவாதம் பிடித்துக்கொண்டு இருந்திருந்தாள்.

இப்போ எல்லாம் சுமுக நிலைக்குத் திரும்பி, பழையபடி சொல்வழி கேட்ட ராகினியாக நின்றாள். அவளுடன் சிறிதுநேரம் கோகுலனும் யசோவும் மனம்விட்டுக் கதைத்தார்கள்.
அப்பா, அம்மா கவலைப்படுவார்கள் என்பதைத் தெளிவு படுத்தினார்கள்.

ராகினி எதிர்வார்த்தை பேசவில்லை.
"முரளியை நான் ஒருக்காப் பார்க்கவேணும்" என்று மட்டும் கேட்டுக்கொண்டாள்.

தாமோதரன் வந்து சோபாவில் அமர்ந்துகொண்டார்.

நீலாவுக்கு உதவி செய்ய யசோ சமையலறைக்குச் சென்றாள்.

தாமோதரனும் கோகுலனும் கடைக்கதை கதைக்க, ராகினி பைலைப் புரட்டியவாறு தான் தொடர்ந்த படிப்பது பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள்.

..............................

வடிவேலு கடைகளுக்குப் போய் வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு வந்தான். பிள்ளைகள் சுவர்ணா, நிகிலன் இருவருக்கும் இனிப்பான தின்பண்டங்கள் சிலவும் வாங்கியிருந்தான்.

"இவ்வளவு நேரமும் எங்கை போட்டுவாறியள்...?" மனோகரியிடம் இருந்து கேள்வி வந்தது.

"ஏன் கடைக்குப் போட்டு வாறன்!" சப்பாத்தைக் கழற்றியபடி பதில் சொன்னான் வடிவேலு. மாமி மீனாட்சி பிரான்சுக்குப் போன பிறகு ஒப்பந்தமற்ற யுத்தநிறுத்தம் நிலவியது.

"இந்த இரண்டு சாமான்களும் வாங்க இவ்வளவு நேரமோ? எங்கை ஆரையேன் இழுத்துப் பிடித்துசமா வைச்சுக் கொண்டிருந்துவிட்டு, கடைக்குப் போட்டுவாறன் எண்டு சாட்டுச் சொல்லுறீங்கள்... எனக்கு உது விளங்காதோ...?"

"விளங்கினால் பிறகேன் கேக்கிறாய்.... தெருவிலை ஆராவது தெரிஞ்சாக்களைக் கண்டால் 'ஈ' எண்டொரு இழிப்போடை கொம்பியூட்டர்ப்பொம்மை மாதிரி 'கம்' எண்டு போன அலுவலைப் பார்த்திட்டு வாறதுக்கு நான் என்ன ஜெயில்லையே இருக்கிறன்?" பதில் கூறிக்கொண்டே, வியர்த்து நனைந்த சட்டையைக் கழற்றி விட்டு, சோபாவிற் போய் அமர்ந்தான்.

சுவர்ணாவும் நிகிலனும் தங்கள் அறைக்குட் போய் நின்றபடி இனிப்புப்பையைக் கூட உடைக்க மனமின்றி, தாய் தந்தையர் போடும் சண்டைக் கண்டு பயம், சோகம் என்ற உணர்வலைகள் பிஞ்சு நெஞ்சங்களில் அலைமோத, கதவு நீக்கலூடாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வடிவேலுவின் பேர்ஸைத் திறந்து காசுக்கணக்கைப் பார்த்த மனோகரி, நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இது வழக்கமாக அவள் செய்யும் காரியமென்பதால் அவன் அதனைப் பொருட் படுத்தாமல், "சுவர்ணா! அப்பாவுக்கு கொஞ்சம் யூஸ் கொண்டு வாம்மா!" என்று மகளுக்குக் கூறினான்.

"எங்கை மிச்சக்காசு....?"

"இதுக்குத் தான் நான் கடைக்குப் போகமாட்டன் எண்டுறது...! கூட வந்திருக்கலாம்தானே.... மலிவான சாமான் வாங்கவேணும். எங்கை ஒரு பெனிக் குறைவா இருக்கோவெண்டு தேடித்திரியவேணும். இத்தனையும் பார்த்துச் சாமான் வாங்கி, இந்தக் கொழுத்தும் வெயிலிலை... காருக்கை அவிஞ்சு... வியர்க்க வியர்க்க சாமான் தூக்கிப் பறித்து வீட்டுக்கை கொண்டு வந்தால், பிரம்பும் புத்தகமுமாக நிற்கிற ரீச்சர்மாதிரி கணக்குக் கேட்கிறீர்! இங்கை குந்தியிருந்து ரிவி நாடகங்களை மாறிமாறிப் பார்த்தநேரம் என்னோடை கூட வந்திருக்கலாம் தானே." சூடாகவே வடிவேலுவிடமிருந்து பதில் வந்தது.

"என்ன.... மாறிமாறிப் படம் பார்க்கிறேனோ? சிவாஜியின்ரை இறுதி ஊர்வலக்கசற் வந்தது... பார்த்தனீங்களே? உங்களுக்கு ஒண்டிலுமே இன்றஸ்ற் இல்லை.... அப்பிடி என்னாலை இருக்க ஏலாது." உறுமினாள் மனோகரி.

"ஓம்....ஓம், எனக்கு ஒண்டிலுமே இன்றஸ்ற் இல்லைத்தான்... பக்கத்துவீட்டுக்காரன்கள்தான் வந்து எல்லா வேலையளும் செய்திட்டுப் போறாங்கள்."

அப்போ சுவர்ணா, குளிர்பானம் கொண்டு வந்து கொடுக்க, அதனை வாங்கிக் குடித்தான் வடிவேல்.

அப்போ, "அப்பா பிளீஸ்!" என்று மெதுவாகச் சொல்லிவிட்டுப் போன மகளைப் பார்த்துவிட்டு, மறுபக்கம் திரும்பினான். கதவு நீக்கலுக்குள் மகன் நிகிலன் பீதியுடன் நிற்பது தெரிந்தது.

'நாங்கள் தேவையில்லாமல் ஏதோ விவாதம் செய்து கொண்டு இருக்கிறம்... பாவம் பிள்ளையள்... ஏதோவென்று நினைத்துப் பயந்து கலங்குதுகள்' வடிவேலுவுக்குப் புரிந்தது.

"அம்மா இல்லையெண்ட நினைப்பிலை அட்டகாசம் போடாதேங்கோ! உங்களுக்கு என்னைப்பற்றித் தெரியாது. மனோகரி எண்டைக்கும் மனோகரியாகத் தான் இருப்பளே தவிர, விமலாவாக இருக்கமாட்டாள்."

'இஞ்சை வா! இப்ப ஏன் விமலாவை இழுக்கிறாய்....? உனக்கு என்ன மண்டையிலை சுகமில்லையே?' என்று சொல்ல வாய் வந்தது. வேண்டாம் என்று நினைத்து மனதைச் சமாதானம் செய்து கொண்டான்.

'கதைக்கக் கதைக்க கதை வளருமே தவிர, நியாயம் பிறக்காது. அந்தளவுக்கு மனோகரி இல்லை.' என்று நினைத்தவனாய் வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்தான்.

மனோகரி மேலும் மேலும் ஏதேதோ சொன்னாள். ஒருகை வீசி சத்தம் வராது என்பதுபோல, அவள் வார்த்தைகளும் சத்தமில்லாமற் போயின.

மறுநாள்....
மேசையில் ஒரு சிறிய குறிப்பு இருந்தது.
'அம்மாவுக்கும் அப்பாவுக்கும்! நீங்கள் ஒற்றுமையாக இருக்கு மட்டும் நாங்கள் வீட்டுக்கு வரமாட்டோம், தேடவேண்டாம், நாங்கள் பத்திரமாக இருப்போம்.' என்று சுவர்ணாவும் நிகிலனும் எழுதி வைத்துவிட்டு எங்கோ போய்விட்டார்கள்.

மனோகரி குளறியடித்தாள். வேலையால் வந்த வடிவேலுவுடன் நீதான் எல்லாத்துக்கும் காரணம் எண்டு எரிஞ்சு விழுந்தாள். அவன் அமைதியாக இருந்தான். சிறிதுநேரத்தின் பின் மனோகரியும் அமைதியானாள்.

"இப்ப என்ன செய்யிறது? என்ரை பிள்ளையள் எங்கை போட்டுதுகள்...? தேடுங்கோவன்!"

வடிவேலு மனைவியை நிமிர்ந்து பார்த்தான்.

"குத்துக்கல் மாதிரி இருக்கிறீங்கள்... பிள்ளையள் எங்கையெண்டு தேடிப்பாருங்கோ! இல்லாட்டி பொலிசுக்கு அறிவியுங்கோ! ரிவியிலை ஒவ்வொருநாளும் பிள்ளையள் தொலைந்து போகினம் எண்டு சொல்லுற மாதிரி, எங்கடை பிள்ளையளுக்கும் ஏதும் நடக்கப்போகுது....!"

"நானும் நீயும் ஒற்றுமையாக இருக்குமட்டும் தாங்கள் இங்கை வரப்போவதில்லை எண்டு எழுதி வைச்சிருக்குதுகள்." மெதுவாக அவள் காதில் விழக் கூறினான் வடிவேலு.

"மாமி இங்கை இருக்குமட்டும் எங்களை ஒற்றுமையா இருக்க விடேல்லை."

"அம்மாவை ஏன் குறைசொல்லுறீங்கள்? அந்த இராட்சகி விமலா இருக்குமட்டும் நானும் நீங்களும் ஒற்றுமையாக இருக்கேலாது."

ஒன்றுமறியாத விமலாவை இராட்சகி என்று நரும்பியது வடிவேலு வுக்கு நெஞ்சிலடித்தது போலிருந்தது. ஆனால் குடும்பம் என்று வாழவேண்டுமென்றால் பல அடிகளைத் தாங்கித்தானாக வேண்டுமென்று நினைத்தான்.

இதில் நியாயமும் இருந்தது. இங்கு எத்தனை குடும்பங்களில் கணவன், மனைவி இருவரும் சம அன்புடன்... சமஅந்தஸ்துடன் இருக்கிறார்கள்! சில குடும்பங்களில் கணவனின் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கும்... சில குடும்பங்களில் எதிர்மாறாக மனைவியின் கை ஓங்கி நிற்கும்.

அதிகாரம் செலுத்துபவர் மற்றவரை பல கோணங்களில் அடக்கி ஆள்வார்கள். நெஞ்சிலுறைக்க வார்த்தைகளால் அடிப்பார்கள்.

குடும்பம் குலைந்து போகக்கூடாது என்பதற்காகக் கட்டுக்களை உடைக்காமல், மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு இருப்பவர்கள் பலர். அவர்களில் ஒருவனாகத் தானும் இருந்திட்டுப் போகிறேன் என்று மனதைத் தேற்றினான் அவன்.

........................

கண்ணன் கொழும்பு வரும் வழியில், ஜேர்மனிக்குப் போய்க் கொண்டிருக்கும் இராஜேஸ்வரன் என்பவரைச் சந்தித்துப் பழக்கம் ஏற்பட்டது.

இருபது வருடங்களுக்கு மேல் ஜேர்மனியில் வசித்து வரும் இராஜேஸ் நாற்பது வயது கடந்துவிட்டபோதும் இன்னமும் திருமணம் கைகூடாதவராய் ஒண்டிக்கட்டையாக இருந்தார்.

யாழ்ப்பாணம் சென்று உறவுகளைப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தார். இரண்டு நாட்களில் கண்ணன் பிரயாணம் செய்யவிருந்த விமானத்தில்தான் அவரும் செல்வதால் இருவருக்கும் நெருக்கம் அதிகமாக, கொழும்பில் எங்கே தங்கி இருப்பதாகக் கண்ணனிடம் விசாரித்தார்.

"லொட்சிலைதான் தங்க வேணும். இந்தப் பிரச்சனையான நேரம் ஒரே செக்கிங்காத்தான் இருக்கும்.... பார்ப்பம்!" என்று கண்ணன் பதில் சொன்னான்.

"நான் தங்கச்சி வீட்டிலை நிற்கப்போறன்... இரண்டு நாள்தானே, நீரும் வாரும்!" அன்பாக அழைத்தார் இராஜேஸ்வரன்.

கண்ணனுக்குக் கடவுளைக் கண்டதுபோல இருந்தது. இந்த நெருக்கடியான நேரத்தில் ஹோட்டல்களில் இருப்பது பயம்தானே கொழும்பிலிருக்கும் தூரத்து உறவினர் ஒருவரின் உதவியைத் தான் நாடவிருந்தவன், இப்படியொரு அழைப்பு வந்ததும் தயங்காமற் சம்மதித்தான்.

இரத்மலான விமானநிலையத்தில் இறங்கி, ஆட்டோ ஒன்றைப் பிடித்து இருவரும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

வதனிவீடு அது....
யாரோ ஒரு பெண், திருமணமாகிப் பிரிந்து இருப்பவளை தான் சந்தித்தது பற்றி ஏற்கனவே இராஜேஸ் சொல்லியிருந்தான். பெயர் சொல்லவில்லை. அவளும் வதனி வீட்டுக்கு இருவீடுகள் தள்ளித் தங்கியிருந்தாள்.
பெயர் விமலா... அவளுடன் கதைத்தபோது ஜேர்மனியில் அவளது கணவர் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து குடும்பமாக இருப்பது தெரியவந்தது. மேலும் விசாரித்தபோது....

கண்ணன் ஆச்சரியம் தலைக்கேற நின்றான். அந்தப்பெண் வேறு யாருமில்லை... வடிவேலுவின் முதல்மனைவி விமலா எனத் தெரிந்தது.

வடிவேலுவுக்கும் கண்ணனுக்கும் நெருங்கிய பழக்கம் இல்லை என்று சொல்லலாம். ஒரேநகரத்தில் இருப்பதால் தெரிந்திருந்தது. மற்றைய விபரங்கள் கோகுலன், யசோ மூலம் அறிந்திருந்தான். வடிவேலுவீட்டில் நிகழும் குடும்பச்சண்டையும் அவன் நினைவுக்கு வந்தது.

இன்னும் ஓரிரவு தான் இருந்தது.
மறுநாள் ஜேர்மனிக்குப் பயணம்.

விமலாவின் மகள் தன் நண்பனும் கொஸ்டலில் தங்கியிருப்பவனுமான சூரியாவைக் கூட்டிக்கொண்டு வந்தாள்.
சூரியா ஜேர்மனியில் இருக்கும் தன் பெற்றோருக்குக் கொடுத்து விடக் கொண்டுவந்த சிறிய அன்பளிப்புப் பொட்டலத்தைக் கையில் வைத்திருந்தான்.

இராஜேஸ் முகவரியையும் பார்சலையும் வாங்கிப் பார்த்துவிட்டு, கண்ணனைப் பார்த்து,
"உங்கடை இடம்தான்!" என்று முகவரியைக் காட்டினான்.

அது கோகுலன், யசோவின் முகவரியாகும். மீண்டும் அதிர்ச்சி நரம்புகளிற் பாய, ஒன்றும் புரியாமல் நின்றான்.

"சரி!" என்று இராஜேஸ், அதனைத் தன் பெட்டிக்குள் பத்திரப் படுத்திவிட்டு வந்தார்.

கண்ணனுக்கு இரவு நித்திரை வரவேயில்லை.

..........................

அதியுயர் பாதுகாப்புடன்கூடிய கட்டுநாயக்க விமானநிலையத்தை கண்ணனும் இராஜேஸ்வரனும் வந்த வான் சென்றடையப் போதும்போதுமென்றாகிவிட்டது.

ஒரே சோதனை.... அணுவணுவாக ஆராய்ந்து இறுதியில் செல்லவிட்டார்கள்.

அவர்கள் இருவரும் ஒரு ஆறுதற்பெருமூச்சுடன் விமானத்தில் ஏறினார்கள்.

---

கார் கழுவிவிட்டு வந்த வடிவேலு, மனோகரியிடம் "வேலைக்குப் போடுற உடுப்புகள் மினுக்கேல்லையே?" கேட்டான்.

"நான் என்ன சும்மாவே இருக்கிறன்!" மனோகரியின் குரலில் கோபம் தொனித்தது.

"கோவிக்காதையும்! ஏன் கோவிக்கிறீர்? பிள்ளையள் எங்கை... என்ன செய்யுதுகள் எண்டு கவலைப்படாமல், விடிஞ்சால் பொழுது பட்டால் ரீவி, ரெலிபோன் எண்டுசும்மா பொழுதை ஓட்டுகிறீர்!"

"ஓ...ஓ நான் சும்மா தான் இருக்கிறன்... நீங்கள் தான் எல்லாம் செய்யிறீங்கள்!" நளினம்பட நெளித்தாள் அவள்.

"இஞ்சைபாரும் மனோ! இப்ப எத்தினை மணி? விடிஞ்சு எழும்பி இவ்வளவு நேரமும் வீடியோவிலை கசற்றைப் போட்டிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்... சொன்னாக் கோபம் வருகுது. இரண்டுமணிக்கு நான் வேலைக்குப் போகவேணும். கடைக்குப் போனன்... கார் கழுவினன்... நீரும் ஏதாவது எழும்பிச் செய்யுமன் ஆரும் திடீரெண்டு இந்தவீட்டுக்கை வந்தா என்ன நினைப்பினம்?"

"உங்களை நினைப்பினம்... சும்மா ஏன் எரிஞ்சு விழுகிறீங்கள்... கசற் திருப்பிக் கொடுக்கவேணும். பார்த்து முடிக்கலாமெண்டா நாரதர் மாதிரி வந்து கலகம் செய்யிறீங்கள்... சீ இந்த வீட்டிலை ஒரு நிமிசம் மனிசர் ஓய்வா இருக்கேலாது!" சினந்தபடி தொலைக்காட்சியை நிற்பாட்டினாள் மனோகரி.

"உம்மை ஆர் ஓய்வெடுக்க வேண்டாமெண்டு சொன்னது? நாங்கள் ஓயாமற் சண்டை பிடிக்கிறதாலை பிள்ளையள்கூட ஓடியிட்டுதுகள். கொஞ்சம் யோசிச்சுப் பாரும்... வேலை இல்லாத ஆள் மாதிரிப் படம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்...."

"எல்லாம் உங்களாலைதான்... ஏன்தான் உங்களைக் கட்டினேனோ தெரியாது. சட்டை வாங்கிறதெண்டாலும் நூறு

தரம் புரட்டிப்புரட்டிப் பார்த்து வாங்குவன்... சீ... கலியாணத்திலை ஏமாந்து போனன்."

"நீ மட்டும் ஏமாறேல்லை... நானும்தான் ஏமாந்துபோனன். வீட்டுக்கு ஒரு பொம்பிளை வேணுமெண்டு நினைச்சன், வந்தது பறநாகம்."

"என்னைப் பார்த்தா பறநாகம் போலையோ தெரியுது?"

"எடுத்ததுக்கெல்லாம் சீறிக்கொண்டிருக்கிறாய்... வேறை என்ன எண்டு சொல்லுறது....!"

"சீ... உங்களோடை வாழுறதைவிடச் செத்துத் துலைஞ்சு போகலாம்."

"இஞ்சை வா மனோ! நானும் நீயும் குழந்தைப்பிள்ளையள் இல்லை. ஊர் சிரிக்காமல் வாழப் பழகவேணும். இவ்வளவு நாளும் மாமி இங்கையிருந்து எங்கடை சின்னப்பிரச்சனைகளை எல்லாம் பெரிசாக்கி, எங்களை ஒற்றுமையாகவிடாமல் சண்டையை வளர்த்துக் கொண்டேயிருந்தா."

"ஓ, அதுதான் அவவைப் பாரீசுக்குக் கலைச்சனீங்கள். இங்கை அம்மா இருந்தா உங்களாலை வாலாட்ட முடியாது."

"நான் என்ன குரங்கே வாலாட்ட....?"

"குரங்குதான்.... மனிதக்குரங்கு!" என்று நரும்பிக்கொண்டு மனோ படுக்கையறைக்குட் சென்று கதவை அடித்துச் சாத்தினாள்.

கதவின் 'படார்' ஒலி வடிவேலுவின் நெஞ்சை அதிரவைத்தது.

'இரண்டு மனைவி.... மூன்று பிள்ளைகள் இருந்தும் சந்தோசம் இல்லை.' என்று நினைத்த வடிவேலுவுக்கு இந்துசமயம் சொல்லும் துறவறம் நினைவுக்கு வந்தது.

'எல்லாத்தையும் விட்டிட்டு சிலோனுக்குப் போய் எங்கேயாவது ஒரு கோவிலில் தங்கி, தொண்டு செய்து கொண்டிருந்தாலென்ன, என்ன செய்தாலும் இவள் திருந்தப்போவதில்லை... குரங்கு எண்டு முகத்திலை அறைஞ்சது போலச் சொல்லிவிட்டாள்.

ம்... இனி எந்த முகத்தை வைத்துக்கொண்டு இவளோடை கூடி வாழுறது?

பிள்ளையள் எங்கை போட்டுதுகளோ தெரியாது... இனிப் பொலிசிலை சொல்லாட்டி எங்களிலைதான் பிழை வந்து சேரும்.

சீ... சனியன் பிடிச்ச வாழ்க்கை...' என்று வடிவேலு தன் தலையில் கையால் அடித்தான்.

அப்போ மேல்வீட்டில் வசிக்கும் தமிழர்வீட்டு ரேடியோவில்,
'காசிக்குப் போகும் சந்நியாசி... உன் குடும்பம் என்னாகும் நீ யோசி....' என்ற பாடலின் ஒலி அவன் காதுகளில் மெதுவாகக் கேட்டது.

................................

கோகுலன் நித்திரையால் எழுந்து ஏதோ தவறு விட்டவன்போல சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தான்.

யசோ வழக்கம் போல வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருந்தவள், ஒரு நாளுமில்லாமல் கோகுலன் சோகமாக இருப்பது கண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்து,
"என்ன...?" என்று அவன் கழுத்தைத் தன் கரங்களால் மாலையாக அணைத்தாள்.

முதல்நாள் இரவு நிகழ்ச்சி அவன் மனதை உறுத்துவதை யசோ புரிந்துகொண்டாள். அவளைப் பொறுத்தவரை அப்படியொரு தவறும் நடந்ததாக அவள் மனம் சொல்லவில்லை. எல்லாத் தம்பதிகளும் வழக்கமாக எப்படி நடந்துகொள்வார்களோ அப்படித்தான் நாங்களும் நடந்துகொண்டோம் என்று நினைத்த துடன், இனந்தெரியாத ஒரு புதிய சுகம்... அதற்கும் மேலாக எப்படிச் சொல்வதென்று தெரியாதளவுக்கு ஏதோவொரு புதுமை, எழுந்து நடக்கவே முடியாத முடவன் என்று நினைத்துக் கொண்டிருந்தவன், ஏதோ ஒரு வேகத்தில் தன் நினைப்பைக் கடந்து எழுந்து ஓடியபோது... என்னாலும் நடக்கமுடியும், நான்

முடவன் இல்லையென்று கண்டபோது இருக்கும் அந்த உத்வேகம் அவள் மனதிற் பாய்ந்தது.

மாறாகக் கோகுலனோ, யசோவின் உடல்நிலையை, தான் நினைக்காமல் ஏதோ வேகத்தில் ஆரோக்கியமுள்ளவளைப் போல எண்ணி நடந்து கொண்டதை நினைத்து வருந்தியவனாய் இருந்தான்.

"முகத்தைக் கழுவுங்கோ... ரீ கொண்டு வாறன்!" என்று போக விழைந்த யசோவின் கரத்தைப் பற்றி, தன் கண்களில் ஒற்றிவிட்டு தவறிழைத்த குழந்தை போல விழித்த அவனை அன்பொழுக அணைத்து,
"நான் நல்ல சுகமாக இருக்கிறன்.... என்னாலும் அம்மாவாக முடியுமென்று என்மனம் சொல்லுது!" என்று தன் மகிழ்வு பொலிந்த நம்பிக்கையை வெளியிட்டாள்.

கோகுலன், அவள் முகத்தை அன்போடு நோக்கினான். அவள் முகம் நிறைமதிபோல ஒளிவீசியது. உள்ளத்தில் துள்ளியடிக்கும் இன்பஅலைகளின் எழுச்சி அந்த முகத்தில்அள்ளி நிறைக்கப்பட்டு இருந்தது.

"நீ அம்மா ஆகிறது, எங்களுக்கு ஒரு பிள்ளை பிறக்கிறது... எல்லாம் சந்தோசம், எண்டாலும் உனக்கு ஒண்டெண்டால் என்னாலை தாங்கிக்கொள்ள முடியாது!" சொன்னான் கோகுலன்.

"நாங்கள் கூடி வாழ்ந்ததுக்கு அடையாளம் பிள்ளைதானே, அதை வளர்த்து, படிப்பித்து ஆளாக்கி, எங்கள் நினைப்புகளைச் சாதிக்கும் சான்றோனாக்க வேண்டும். இது என் கனவு!" என்றாள் யசோ.

"எங்கடை சூரியா இருக்கிறான்.... சர்மி இருக்கிறாள்... சாதிப்பார் கள்... படிப்பிலை புலிகள்... நினைத்ததை முடிப்பார்கள்... ஏன் யோசிக்கிறாய்....?"

"நான் யோசிக்கேல்லை... சூரியாவும் சர்மியும் அன்பாலை எங்கடை பிள்ளைகளானவர்கள்.... இது கோகுலன், யசோ இரண்டுபேரின் உறவைச் சொல்லும் விருட்சம்!" சொன்னாள் யசோ.

அவளைத் தன் மார்போடு அணைத்து,

"நீ சொல்லுறது சரிதான், ஒரு காலத்திலை நான் இல்லாதபோது என்னுருவில் எங்கள் பிள்ளையைப் பார்க்கலாம்!" என்றான்.

"ஏனப்பிடிச் சொல்லுறீங்கள்? எனக்கு நீங்களும் வேணும், பிள்ளையும் வேணும்!"

"எனக்கும்தான்!" என்ற கோகுலன்,
"நீ தினமும் 'ஸ்ரீராமஜெயம்' எழுதுகிறாய், எங்கடை குறையைச் சொல்லி எழுதலாம்தானே!"

"ஸ்ரீராமன் எல்லாம் அறிந்தவன்... அவனுக்கு எங்கள் குறையை நாங்கள் சொல்லித்தான் அறிய வேண்டுமென்றில்லையே. உலகம் முழுக்க அவன் நெஞ்சுக்குள் அடக்கம்."

"எனக்கு சாமி கும்பிட வேண்டிய தேவை அதிகம் வரவில்லை. உன்னைச் சந்தித்தபோது, உன் வருத்தத்தைக் கண்டு குணமாக வேண்டுமென்று சேச்சுக்குப் போய் மெழுகுவர்த்திக் கொழுத்திக் கும்பிட்டன்." என்று அவன் சொன்னபோது யசோவின் நெஞ்சு பூரிப்படைந்து ஆனந்தக்கண்ணீர் தழும்பியது.

........................

வடிவேலுவின் வீட்டுக்கு ஜானகி வந்தாள்.
வடிவேலு-மனோகரியின் ஒற்றுமைக்காக அன்றொருநாள் கதைக்க வந்து மீனாட்சியம்மா, ஜானகியை "நீயும் ஒரு பெண்ணா... விதவைப்பெண் பூசி மெழுக்கிக்கொண்டு இன்னொருவனையும் கட்டிக்கொண்டு திரியிறாய்..." என்று வாயில் வந்தபடி வைததையும் பொருட்படுத்தாமல், நல்லது நடக்கட்டும் அல்லாததைக் கடவுள் பார்ப்பார் என்று நோர்வே தூதுவர் எரிக்செல்கைம் எங்கள் சமாதானத்தை ஏற்படுத்த மீண்டும் மீண்டும் முயற்சித்தது போல வந்திருந்தாள்.

வடிவேலு கடைக்குப் போயிருந்தான்.
மனோகரியுடன் கதைத்தாள் ஜானகி.

"உங்கம்மா சொல்லுறதைக் கேட்டு உன் வாழ்க்கையைப் பாழாக்காதை, வடிவேலு முந்திக் குடிச்சவர்... முதலும் ஒரு கலியாணம் செய்திருந்தார் என்று பழையதையே கிளறி, உங்கள் வாழ்க்கையை நீங்கள் அழிக்கிறது போதாதெண்டு, சின்னஞ் சிறிசுகள் உங்கடை குழந்தைகளின் வாழ்க்கையையும் கெடுக்காதேங்கோ!"

"ஜானகியக்கா! நான் என்ன செய்யிறது? இவரை எனக்கு என்னத்துக்கு....? இவர் இல்லாட்டி நான் வாழமாட்டனே....! சீ... குரங்கு மனிசன்... தான்தான் பிள்ளையளை எங்கையோ மறைச்சு வைச்சுக்கொண்டு என்னைச் சமாதானப்படுத்தலாமெண்டு நினைக்கிறார்." என்ற மனோகரியின் முகத்தில் வெறுப்பு மின்னித் தெளித்தது.

"என்ன மனோகரி நீ....! புருசனை இப்பிடி வாயிலை வந்தபடி சொல்லுறாய்... வடிவேலுவை உன் புருசன் எண்டு ஏற்று, கலியாணமும் செய்து, அவரோடை வாழ்ந்து, இரண்டு பிள்ளை களையும் பெற்று சந்தோசமாக இருந்த நீ, உலகம் தெரியாதவள் மாதிரிக் கதைக்கக்கூடாது. புருசனை நீ புருசனாக மதி!"

"அவருக்கென்ன மதிப்பு வேண்டிக்கிடக்கு...?" முணுமுணுத்தது மனோகரியின் வாய்.

ஜானகிக்கு அது பிடிக்கவில்லையென்பது அவள் தலையை அங்குமிங்கும் ஆட்டியதிலிருந்து தெரிந்தது. சிறிது நேர மௌனத்தின் பின்....
"குடும்பம் எண்டால் சிறுசிறு சண்டையள் இருக்கத்தான் செய்யும். ஆனால் கணவனும் மனைவியும் எந்தக்கட்டத்திலும் நீ வேறு... நான் வேறென்று பிரித்துப் பார்க்கும் நிலைக்கு வரவே கூடாது."

"தாயும் பிள்ளையுமெண்டாலும் வாயும் வயிறும் வேறு எண்டு சொல்லியிருக்கினம்."

"தாயோடு இறுதிவரை கூடி வாழ்ந்த பிள்ளைகள் எத்தனை பேர்! கலியாணம், குடும்பம் எண்டு வந்ததும் மனைவி, பிள்ளைகள் என்று தனிக்குடித்தனம், உழைப்பு, வெளிநாடு என்று பிரிந்து விடுவார்கள். ஏன் கனக்க....? எங்களைப் பாரன்! வெளிநாட்டுக்கு வந்திட்டம்.... அப்பா, அம்மாவுக்கு வருத்தம், துன்பமெண்டால் போய்ப்பார்க்க முடிகிறதா? போனாலும் ஒரு கிழமை, இரண்டு

கிழமை நின்றுவிட்டு ஓடி வந்திடுகிறம். ஆனால் கணவன் மனைவி என்ற பந்தம் மரணம் வரை தொடரும்.... கொஞ்சம் யோசிச்சுநட! இல்லாட்டி உங்கடை சண்டையிலை பிள்ளைகளின் வாழ்க்கைதான் பாதிக்கப்படும்."

மனோகரி கேட்டுக்கொண்டிருந்தாள்.

"நல்லாத்தானே இருந்தனீங்கள், ஏன் இடையிலை இப்பிடிச் சண்டை? உன்ரை பேச்சைக் கேட்டு வடிவேலு குடியைக்கூட விட்டிட்டு இருக்கிறார்."

"நீங்கள் சொல்லுறீங்கள்... அவரைப்பற்றி உங்களுக்குத் தெரியாது அக்கா... அவராலைதான் அம்மா போனா... இப்பபிள்ளையள் போட்டுதுகள்.. பொல்லாத மனிசன்.. படிப்பறிவு கெட்ட ஜென்மம்.... கண்டாலே பிடிக்கேல்லை."

"என்ன மனோகரி நீ....! விரும்பித்தானே கட்டினனீ... பிறகேன்...? கூடாது.. வாழ்க்கை எவ்வளவு நாளுக்கெண்டு தெரியாது.... இண்டைக்கு இருக்கிறம்... நாளைக்கு இருக்கிறமோ தெரியாது. இருக்கிற நாளைக்கு அன்பா, ஒற்றுமையா, விட்டுக்கொடுத்து வாழவேணும். பிள்ளையளுக்காக உன்ரை மனதை மாற்று.. பிளீஸ்!"

"பிள்ளையள்... அதுகளும் தகப்பன் பக்கம்தான் கதைக்குதுகள், நான் அனாதை... இருந்த அம்மாவையும் துரத்திவிட்டிட்டார் பாவி!"

"வடிவேலுவை ஏன் குற்றம் சொல்லுறாய்? விசா முடிஞ்சதாலை நீங்கள் தானே எல்லாரும் சேர்ந்து பிரான்சுக்குப் போய் இருக்க விட்டனீங்கள்!"

"விசா முடிஞ்சும் அப்பீல் எடுத்தெடுத்துக்கொண்டு எத்தினை பேர் இன்னும் இருக்கினம்!"

"ஆனா உங்கடை அம்மாவின்ரை கேஸ் முடிஞ்சுது. அதோடை அப்பீல், லோயர் எல்லாத்துக்கும் வீண்செலவு எண்டு உன்ரை அக்கா திரும்பத்திரும்பச் சொன்ன பிறகுதானே... பிரான்சுக்குக் கூட்டிக்கொண்டு போய்ப் பதிஞ்சது. இல்லாட்டி சிலோனுக்கு எல்லே போயிருப்பா! இதையெல்லாம் ஏன் நினைக்கிறாயில்லை. எதுக்கெடுத்தாலும் புருசனிலை பழியைப் போடாதை, அந்தாளும்

மனிசன்தானே! இன்னொன்று..." என்று மனோகரியின் கண்களை ஆராய்வது போலப் பார்த்தவாறு,
"இராஜேஸ்வரனைத் தெரியுமா? நீ ஏ.எல் படிக்கேக்கை அக்ரிங்கா உங்கடை பள்ளிக்கூடத்துக்கு ரீச் பண்ண வந்தவராம்" கூறிவிட்டு நிறுத்தினாள் ஜானகி.

மனோகரி விழித்தாள்.
'இராஜேஸ்!" அவளது நா மெதுவாக அசைபோட்டது.

கண்களில் ஒரு கலக்கம்... இமைகள் நடுங்கின.

"காதலில் தோல்வியாம்... இன்னும் கலியாணம் செய்யாமல் இருக்கிறார்." மனோகரியின் உணர்வுகளை விழுங்கியவாறே தொடர்ந்தாள் ஜானகி.

"இப்ப அவர் ஸ்ருட்காட்டிலை இருக்கிறார்....!" என்று நிறுத்தினாள்.

மனோகரியின் கண்களில் கண்ணீர் தழும்பியது. நடந்ததை ஜானகிக்குச் சொன்னாள்.

இராஜேசும் தானும் உயிருக்குயிராய் விரும்பியதும் கூடித்திரிந்ததும் பிறகு பெற்றோரின் குறுக்கீட்டால் பிரிந்ததும் என்று சுருக்கமாகக் கூறினாள் மனோகரி.

அவள் வார்த்தைகளில் காதல் முறிந்த கவலையைவிட, இதை அறிந்தால் வடிவேலு என்ன செய்வான் என்ற கலக்கம் தான் அதிகம் இருந்தது.

சிறிய மௌனத்தைத் தொடர்ந்து ஜானகி ஆரம்பித்தாள்.
"வடிவேலு உன்னைக் கலியாணம் செய்ய முன்பே தன்னைப்பற்றி உனக்குச் சொல்லியிருந்தார். நீ உன் காதற்சமாச்சாரத்தையோ, இராஜேஸ்பற்றியோ ஒன்றுமே சொல்லாமல் இன்றுவரை மறைத்து விட்டாய். இப்ப யார் குற்றவாளி....? வடிவேலுவா...? நீயா....?" நீதிபதி போலக் கேட்டாள் ஜானகி.

பதில் சொல்ல முடியாமற் திணறினாள் மனோகரி.

"இந்த விடயம் வடிவேலுவுக்குத் தெரிந்தால் அவர் மீண்டும் குடிப்பார்... பழையபடி வேலைக்குப் போகாமல் உன்னையோ, பிள்ளைகளையோ கவனிக்காமல் ஊர்வேலைகளைப் பார்த்துக் கொண்டு பிறன்ஸ்சோடை சுத்துவார்.... உனக்குத் தெரியும் அவரைப்பற்றி.... இனி உன் இஸ்டம்... யோசிச்சு ஒரு முடிவுக்கு வா!"

மனோகரி இடிந்துபோய் உட்கார்ந்திருந்தாள்.
கண்ணாடி வீட்டுக்காரன் ஓட்டுவீட்டுக்குக் கல் எறியக்கூடாது என்ற அறிவுரை இப்பதான் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

எப்பவோ நடந்தது என்று மறைத்து வைத்த காதல் விவகாரம், யாருக்குமே தெரியவராது என்று நம்பியிருந்தவள்... அது இப்போ ஜானகிவரை தெரிய வந்தது மட்டுமில்லாமல், அந்தாள்... அதுவும் ஜேர்மனியிலை... ஸ்ருட்காட் நகரத்திலை இருக்கிறார் என்றதும் உண்மையிலேயே மூச்செடுக்க முடியாதளவுக்கு அவள் உணர்வுகள் நெஞ்சை இறுக்கின.

ஜானகி சென்றுவிட்டாள்.

..............................

தாமோதரன்வீடு அது.....
பள்ளி விடுமுறை முடிய இன்னும் ஒருவாரம்தான் இருந்தது.
இரவுச்சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ராகினியின் தம்பி சாப்பாட்டைப் போட்டுக்கொண்டுபோய் ஹோலுக்குள் சோபாவிலிருந்து தொலைக்காட்சியைப் பார்த்தபடி சாப்பிட்டான்.

"லண்டனுக்குப் போட்டு வருவமாப்பா?" எதிர்பாராதவாறு கேட்டாள் ராகினி.

தாமோதரனும் நீலாவும் ஒரே சமயத்தில் அவளை ஆச்சரியம் ததும்பப் பார்த்தனர்.

முரளியைப் பார்க்கத் திட்டம் போடுகிறாள் என்று இருவர் மனதுக்கும் புரிந்தது.

"என்னெண்டு பிள்ளை....கடையை விட்டிட்டு எப்பிடி நான் வாறது? அதோடை தம்பிக்கு வாறகிழமை பள்ளிக்கூடம்...!"

"இரண்டு நாளிலை போட்டுவரலாம்.... அப்பா பிளீஸ்!"

"நான் வரமுடியாது... எத்தினையோ அலுவல்கள் கிடக்கு... அம்மாவைக் கூட்டிக்கொண்டு போ! மகாராணியைப் பார்க்க வேணுமெண்டு அம்மா அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறா... போட்டு வாங்கோ!"

"நான் போகேல்லை...." மறுத்துவிட்டாள் நீலா.

ராகினி விடவில்லை.
"நான் முரளியை ஒருக்காப் பார்க்கப்போறன், என்னிலை அவனுக்குக் கோபமில்லையெண்டு நேரை கேட்டறிஞ்சால்தான் என்மனம் சாந்திப்படும். அப்பா பிளீஸ்!" என்று உள்ளதைக் கூறிக் குழைந்தாள்.

'அவனை என்னடி பார்க்கிறது?' உறுக்கவேண்டும் போலிருந்தது நீலாவுக்கு. ஆனால் அப்படிச் செய்யாமல் வாயை மூடிக் கொண்டிருந்தாள். தான் ஏதும் சொல்லி, மீண்டும் வேதாளம் முருங்கைமரத்தில் ஏறியது போல, மகள் குழம்பினாலும் என்று வாயை மூடிக் கொண்டிருந்தாள்.

"உனக்குத் தெரியும்தானே... என்னாலை கடையை விட்டு அரக்க ஏலாது. கோகுலன் மாமாவையைக் கேட்டு அவையோடை போட்டுவா!"

தகப்பன் அனுமதி கொடுத்ததும் 'ஜா!' என்று மகிழ்ச்சி பூவிரிசு போலப் பீறிட்டுத் துள்ள, அவரை நன்றியுணர்வுடன் பார்த்தாள்.

......................

'சித்தி' படக்கசற் நண்பி கொண்டுவந்து கொடுத்தும் அதைப் பார்க்க நேரமில்லாது வீட்டைச் சுத்தம் செய்வதில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தாள் மனோகரி.

இராஜேஸ் பற்றி ஜானகி வந்து சொன்ன பிறகு அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. எதையும் வெட்டொன்று துண்டிரண்டு என்று நறுக்கென்று வார்த்தைகளை எடுத்து வீசும் அவள் நா, உயிரிழந்த மீன்போல சோர்வுடன் கிடந்தது.

தொலைபேசி மணியடிக்க, பிடித்துக்கொண்டிருந்த கூவரை நிறுத்திவிட்டு, தொலைபேசியை எடுத்துக் குரல் கொடுத்தாள் மனோகரி.

மறுமுனையில் அம்மா மீனாட்சி பிரான்ஸிலிருந்து, "அடியே பிள்ளை!" என்று ஒலிபெருக்கிபோல காதடைக்க அழைத்தா.

ஓரிரு வார்த்தைகள் சுகசேமங்கள் விசாரித்து, வார்த்தைகளை அம்மாவும் மகளும் பரிமாறிக்கொண்டனர்.

இராஜேஸ் விடயத்தை தாயிடம் சொல்லவா என்று ஒருகணம் நினைத்தாள் மனோகரி.

'வேண்டாம்... அவ அதைப் பெரிதுபடுத்தி, சும்மா கிடக்கிற சங்கை ஊதி ஊரைக் கூட்டி விடுவா' என்று தாயின் குணத்தை எண்ணியவளாய் அதுபற்றி வாய் திறக்காமலிருந்தாள்.

வடிவேலு பற்றி மீனாட்சி மீண்டும் அவதூறு சொன்னா.
"உவனோடை என்னண்டடி பிள்ளை இருக்கிறாய்...? நான் எண்டால் எப்பவோ கலைச்சிருப்பன்."

"அம்மா!" ஒருநாளுமில்லாமல் தாயின் வார்த்தைகளைக் கத்தரித்தாள்.

"என்னடி! எந்த விதத்திலை அவன் உனக்குப் பொருத்தம்? உனக்கென்ன உவனை விட்டால் வேறை வழியில்லையே..."

"ஒரு அம்மாவாக் கதையுங்கோ! என்ன சொல்லுறீங்கள்? ஒரு தாய் கதைக்கிற கதையே நீங்கள் கதைக்கிறீங்கள்? எங்கடை குடும்பப்பிரச்சனைகளிலை இனிமேல் நீங்கள் தலையிட வேண்டாம்."

"என்னடி.....!" தொலைபேசியில் அதிர்ந்தது மீனாட்சியின் குரல்.

"என்னடி எண்டு மிரட்டாதேங்கோ... நீங்களே வாழத் தெரியாமல் வாழ்ந்தனீங்கள்... அப்பாவோடை தேவையில்லாமற் சண்டை பிடிச்சுக்கொண்டு வாழாவெட்டியா வாழ்ந்தனீங்கள்... நீங்கள் இனி எனக்குப் புத்திசொல்ல வேண்டாம்."

'கிளிக்' தொலைபேசியை வைத்துவிட்டாள் மனோகரி.

தாயின் பேச்சைக் கேட்டு இவ்வளவு நாளும் வடிவேலுவுடன் வாக்குவாதப்பட்டது தவறு என்று அவள் மனம் சொல்லியது.

வடிவேலு வீட்டுக்கு வந்தான்.
கதிரைக்கு மேலே ஏறி, நுனிவிரலில் நின்று, எட்டி, மேலே தொங்கும் மின்விளக்கிலுள்ள தூசியை ஈரத்துணியால் துடைத்துக்கொண்டிருந்தாள் மனோகரி.

வடிவேலு தன் கண்களையே நம்பாமல், அதிர்ச்சியுடன் ஒருகணம் ஆச்சரியமாகப் பார்த்தான்.

அதைவிட அதிர்ச்சியான விடயம், அவள் வடிவேலுவைக் கண்டதும் சிரித்ததுதான்.

முகம் மலர மனைவி சிரித்ததைப் பார்த்து, வடிவேலு தடுமாறிப் போய்நின்றான். மனோகரி தானா என்றுகூடச் சந்தேகம் வந்தது.

"உந்த வேலையள் நான் செய்வன்தானே! கதிரையிலை ஏறி, எட்டாத லைற்றைத் துடைக்கப்போய், கதிரை சரிந்து விழுந்தா... என்ன நீர்....?" என்று கிட்ட வந்து, அவள் விழுந்து போகாமல் இருக்கக் கதிரையைப் பிடித்தான்.

"இறங்கும், நான் செய்யிறன்."

"அவள் மறுக்கவில்லை... அவன் தோளிற் பிடித்துக்கொண்டு இறங்கினாள்.

"உங்களுக்கு என்னிலை கோபம் இல்லையே...?"

"ஏன்?"

"ஓயாமற் சண்டை பிடிக்கிறன்."

"மனோகரி! காலம் பகைக்கேக்கை கஸ்டங்கள் வாறது மாதிரி, எங்களுக்கும் ஏதோ கூடாத காலம்... ஒருத்தரை ஒருத்தர் வெறுக்க நினைக்குது.. வாழ்க்கை எண்டது எத்தினை நாளைக்கோ தெரியாது, அதுக்குள்ளை மனிதமனசு என்ன என்னவோவெல்லாம் செய்யத்துடிக்குது..." பொதுப்படச் சொன்னான் வடிவேலு.

"உங்களையும் விமலாக்காவையும் பிரிச்சது மாமிதானே!"

"ஏதோ பிரிய வேண்டியிருந்தது, பிரிந்துவிட்டோம். யாரையும் குறை சொல்லி என்ன வரப்போகுது?"

"இப்ப எங்களைப் பிரிக்க என்ரை அம்மா ஒற்றைக்காலிலை நிண்டா!"

"அவவாலை இல்லை... யாராலையும் எங்களைப் பிரிக்க முடியாது."

"எப்பிடி உறுதியாச் சொல்லுறீங்கள்?"

"அன்பு இருக்கிற இடத்திலை பிரிவுக்கு இடமில்லை." சொல்லி விட்டுச் சோபாவில் போய் உட்கார்ந்தான் வடிவேலு.

மனோகரி அவனை இமைக்காமற் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் விட்டது பிழை" ஜன்னலூடாக வெளியே பார்த்தவாறு மெதுவாகச் சொன்னான்.

"என்ன பிழை விட்டனீங்கள்?"

"நான் உம்மைச் சந்திக்காமல் இருந்திருந்தால், நீர் நல்லாய் இருந்திருப்பீர்."

"ஏனப்பிடிச் சொல்லுறீங்கள்?"

"நல்லாப் படிச்சு, மனதுக்குப் பிடிச்ச ஒருத்தரைக் கட்டி வசதியாக இருந்திருப்பீர்."

"ம்... ம்" மறுத்தபடி, கண்கள் கலங்க, அவன் மனக்கலக்கத்தைப் புரிந்துகொண்டு, பக்கத்தில் வந்து அவனருகே உட்கார்ந்து, தன் கரங்களை மாலைபோலச் சுற்றி நெஞ்சோடு அணைத்து, அவன் மனதை ஆறுதற்படுத்தினாள் மனோகரி.

"நான் ஏன் பிறந்தேனோ தெரியாது. ஒண்டு நினைக்க ஒண்டு நடக்குது... நான் அதிர்ஸ்டம் கெட்ட கழுதை...." என்ற அவனை, மேலும் தொடராதவாறு அவன் வாயைத் தன் கைகளாற் பொத்தினாள்.

"உங்களிலை ஒரு பிழையுமில்லை... அம்மாவோடை சேர்ந்து கொண்டு, உங்களை எடுத்ததுக்கெல்லாம் நான்தான் கவலைப் படுத்திப்போட்டன். என்னை மன்னிச்சிடுங்கோ!" அவள் அவனது மடியிற் சாய்ந்தபடி, அவன் கன்னத்தைத் தடவினாள்.

வடிவேலு ஏதோ சொல்ல விழைந்தான்.
மனோகரி விடவில்லை. அவள் முகம் அவன் முகத்தின்மீது நெருங்கி வந்து, பூட்டுப் போடுவது போல வாயை அடைத்துக் கொண்டது.

..........................

ஜானகி வீட்டுக்கு, வரும்படி அழைத்ததின் பேரில் வடிவேலுவும் மனோகரியும் போயிருந்தனர்.

தாய் மீனாட்சி வீட்டைவிட்டுப் போயும் தணியாத அகங்காரம், ஜானகி வந்து இராஜேஸைத் தெரியுமா என்று போட்ட குண்டால் அடியோடு அழிந்துபோக, வடிவேலுவின் பின்னால் வந்தாள் மனோகரி.

"வாங்கோ!" என்று அவர்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள் ஜானகி.

"இருங்கோ, தேநீர் கொண்டு வாறன்!" என்று செல்ல விழைந்த ஜானகியை,
"வேண்டாம், இப்பதான் சாப்பிட்டு வாறம்... கொஞ்சம் பொறுத்துக் குடிக்கலாம்" என்று உட்கார வைத்தாள் மனோகரி.

"எங்கை எல்லாரும்....?" கேட்டான் வடிவேலு.

"மேலை நிற்கினம்."

"பள்ளிக்கூடம் தொடங்கப்போகுது, பிள்ளையள் இன்னும் வீட்டுக்கு வரேல்லை...." வடிவேலு குறைப்பட்டான்.

"பொலிசுக்கு முறைப்பாடு போட்டுத் தேடேல்லையோ?" கேட்டாள் ஜானகி.

"ரெலிபோனிலை தினமும் கதைக்கிறவை... இஞ்சைதான் இருக்கிறம்... ஒரிடமும் தேடவேண்டாம், சண்டை பிடியாமல் ஒற்றுமை ஆகுங்கோ, நாங்கள் வாறம் எண்டு சொல்லுவினம்." கவலையுடன் சொன்னாள் மனோகரி.

"உங்கடை சண்டை இன்னும் ஓயவில்லையா?" ஜானகியின் கேள்விக்குப்பதில் சொல்லாமல் வடிவேலுவும் மனோகரியும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

சிலவினாடிகள் மௌனத்தைத் தொடர்ந்து, மனோகரி தன் சமாதான அறிவிப்பை வெளியிட்டாள்.

"இனி எங்களுக்கை சண்டை வராது!"

வடிவேலு அவளை ஆச்சரியமாகப் பார்த்தான். ஜானகிக்கும் அவள் பதில் நம்பமுடியாததாக இருந்தது.

'பொம்பர் அடிக்கிறமாதிரி ஓயாது யுத்தம் செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் மனோகரியா இப்படிச் சொல்லுறாள்?' என்று வியப்பாக இருந்தது.

"இவர் என்ரை சொல்லைக் கேட்டு நடக்கும்போது, நானும் இவர் சொல்லைக் கேட்டு நடக்கிறதுதானே முறை... தெரியாத்தனமா இவ்வளவு நாளும் கட்டின புருசன் எண்டும் பார்க்காமல் யாரிகட்டிச் சண்டைபோட்டு, மனதைப் புண்படுத்தினதுக்கு உங்களுக்கு முன்னுக்கே மன்னிப்புக் கேட்கிறேன்." என்ற மனோகரியின் கண்களில் கண்ணீர் துளித்தது.

அப்போ வடிவேலு குறுக்கிட்டு,
"ஏன் அழுகிறீர்.... நானும் தெரியாத்தனமா முந்திப் பிழை விட்டிட்டன், ஆனால்.... கலியாணம் கட்டினபிறகு முடிஞ்சளவுக்கு உம்முடைய மனம் நோகாமல் நடந்து வாறன். என்னை அறியாமல் ஏதும் தவறு செய்தனோ தெரியாது. மனச்சாட்சிப்படி நடக்கிறன்.... விதிப்பலலோ, என்னவோ எங்களுக்கை மாறிமாறி ஏதோ ஒரு பிரச்சனை வந்திடும்." என்று பெருமூச்சுடன் கூறினான்.

"எல்லாம் என்னாலைதான்... போதாததுக்கு அம்மா வேறை எங்களைச் சேரவிடாது கோள் சொல்லிக்கொண்டே இருந்தா. இனிமேல் இப்பிடி நடக்காமல் நான் பார்த்துக்கொள்ளுறன்." மனோகரியின் வார்த்தைகளில் உறுதிபதிந்திருந்தது.

அப்போ படிகளில் பிள்ளைகள் 'கலகல' என்று சிரிப்பொலியுடன் கதையளந்தவாறே இறங்கிவர, பின்னால் பரதன் வந்தான்.

வடிவேலுவும் மனோகரியும் புரியாத சந்தோசம் தலைக்கேற, தங்களையறியாமல் எழுந்தனர். காரணம் பிள்ளைகளுடன் சேர்ந்து சுவர்ணாவும் நிகிலனும் கூட வந்ததுதான்.

அவர்கள் ஓடிவந்து பெற்றோருடன் சேர்ந்துகொண்டனர்.

"இனிமேற் சண்டை பிடிக்கமாட்டம் எண்டு பரதன்மாமா, ஜானகி அன்ரி இருவருக்கும் முன்னால் சத்தியம் பண்ணினால், நாங்கள் வீட்டை வாறம்!" சொன்னாள் சுவர்ணா.

அவளையும் மகனையும் ஒன்றாகத் தன்னோடு அணைத்த மனோகரி, அழுகை முகத்தில் வெம்பிப்படர,
"சத்தியமா.... கடவுள்மேலை நான் இனிமேல் அப்பாவோடை சண்டை போடமாட்டன்!" என்று சுவர்ணாவையும் நிகிலனையும் கொஞ்சினாள்.

"நானும் அம்மாவோடை சண்டைக்குப் போகமாட்டன்... ஓகே!" உறுதியளித்தான் வடிவேலு.

"கொழும்பிலையிருந்து பிருந்தாவின்ரை அம்மா ரெலிபோன் எடுத்தாவா....?" யோசனையுடன் கேட்டாள் சுவர்ணா.

"விமலா.... அதுதான் பிருந்தாவின் அம்மா இனிமேல் எங்களுக்கு ரெலிபோன் எடுக்கமாட்டா. அவவுக்கு எங்கடை உதவி தேவை இல்லை. ரீச்சர் வேலை கிடைச்சிருக்கு, கொழும்பிலையே இருந்து பிருந்தாவைப் படிப்பிக்க முடிவு செய்திட்டா." என்றான் வடிவேலு.

அப்போ மனோகரி,
"அவைக்கு வேண்டிய உதவிகளை நீங்கள் செய்யுங்கோ, நான் குறுக்கை வரமாட்டன். பிருந்தாவும் எங்களுக்குப் பிள்ளைதானே!" என்று பாகுபாடு பாராட்டாது, பரந்த மனப்பான்மையுடன் சொன்ன வார்த்தைகள், அவள் ஒருபடி இறங்கி விட்டுக் கொடுத்து வாழும் மனோநிலைக்கு வந்துவிட்டாள் என்பதைக் காட்டியது.

அப்போ வீட்டுமணி ஒலித்தது. பரதன் சென்று கதவைத் திறந்தான். கோகுலனும் யசோவும், அவர்களின் பின்னால் கண்ணனும் வேணியும் பிள்ளையைத் தூக்கியபடி வந்தார்கள்.

'திடுதிப்' என்று எதிர்பாராத வரவால் வீடு நிறைந்து ஒரே கலகலப்பு.

ஆக்கள் இருப்பதையும் கருதாமல், வேணி யசோவின் காலில் விழுந்து, "மன்னிச்சிடுங்கோ!" என்றாள்.

என்ன... ஏதென்று விளங்காத யசோ, வேணியை அப்படிச் செய்யாதவாறு தடுத்து, தன்னுடன் அணைக்க அவள் சொன்னாள்,
"சூரியா, சர்மி பற்றி இவர் சொன்னார்!" என்று கண்ணன் யாழ்ப்பாணத்தில் சந்தித்த சர்மியையும் கொழும்பில் சந்தித்த சூரியாவையும் பற்றிக்கூறி,
"இப்பிடியெல்லாம் நீங்களும் அண்ணையும் வளர்ப்புப்பிள்ளை களைப் பராமரிப்பதும் அவர்களுக்கு பணம் செலவு செய்து படிப்பிப்பதும் புகழுக்காக இல்லாமல்... மௌனமாகச் செய்யும் பெரிய சேவை....!" என்றெல்லாம் புகழ்ந்தவள், அவர்களை

மலடி... அதுஇதென்று அன்று கூறியிருந்ததெல்லாம் தன் அறியாத்தனம் என்று சொல்லி, யசோவிடம் மன்னிப்புக் கேட்டவள், உங்கடை தரத்துக்கு ஒன்றல்ல... இரண்டல்ல.. ஒரு டசின் பிள்ளைகள் பெற்று நல்லாயிருப்பீங்கள் என்று வாழ்த்தவும் செய்தாள்.

"ஒரு டசின் பிள்ளைகளைப் பெற்றால் நாங்கள் வேலைக்குப் போகத் தேவையில்லை.... அரசாங்கம் தருகிற காசிலையே வசதியா இருக்கலாம்." தமாசாகச் சொன்னான் கோகுலன்.

கண்ணனிடம் யாழ்ப்பாண, கொழும்புப் புதினங்களைக் கேட்க அவனும் தான் கண்ட, அனுபவித்த விடயங்களை இரசனையுடன் கூறினான்.

மேலும் இராஜேஸின் அறிமுகத்தையும் விமலாவை மணக்க விரும்புவதையும் கூறினான்.

வடிவேலு மௌனமாக இருந்தான். அவளுக்கு ஒரு ஆதாரம் கிடைப்பதையிட்டு அவன் மனம் மகிழ்ந்தது. ஆனாலும் இதில் எவ்வளவுக்கு உண்மையிருக்கும் என்று அவனுக்கு ஒரு திருப்தி இன்மை தலையெடுத்தது.
விமலா மறுமணம் செய்வாள் என்பது கேள்விக்குறிதான். எனினும் நேரில் கண்டு வந்த கண்ணன் கூறும்போது ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று திருப்திப்பட்டான்.

ஆனால், மனோகரியோ இராஜேஸின் பெயர் கேட்டதும் நெஞ்சிடிக்க உட்கார்ந்திருந்தாள்.
'அந்தாள், இந்தாளுக்கு இன்னும் என்னென்ன உளறி வைச்சிதோ..? அவருக்கும் எனக்கும் இருந்த காதலையும்... கூடித்திரிந்ததையும்.... கூறியிருந்தால்' நினைக்கவே பயத்தில் உடல் வியர்த்தது.

போதாததுக்கு கண்ணன் வேறை அடிக்கடி ஒரு சிரிப்புடன் மனோகரியைப் பார்த்தது, அவளுக்கு மேலும் சங்கடத்தை ஊட்டியது.

பள்ளிக்கூடங்கள் ஆரம்பமாகிவிட்டன.
சுவர்ணாவும் நிகிலனும் மீண்டும் பெற்றோருடன் சேர்ந்து கொண்டனர்.
நல்ல அமைதி....
இவ்வளவு நாளும் ஏன் சண்டைபோட்டோம்...? வீணாகச் சந்தோச மான நாட்களைச் சண்டை போட்டு விவாதக்களமாய், வீணாக்கி விட்டதை மனோகரியும் வடிவேலுவும் உணர்ந்து வருந்தினர்.

இனிமேல் ஈருடலும் ஒருயிருமாய் இருப்பதாகச் சபதமெடுத்து... பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாய் வளர்ப்பதையே குறிக்கோளாக்கிக் கொண்டனர்.

.....................

ஒருநாள் தாமோதரன் குடும்பமாகக் கோகுலன் வீட்டுக்கு வந்தார்.
ஆறுதலாக இருந்து பல விடயங்களைப்பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.
பரதனும் ஏதோ அலுவலாக வந்தவன், கதையின் சுவாரஸ்யத்தில் அவர்களோடு சேர்ந்துகொண்டான்.

முதல்நாள் அமெரிக்காவில் நடந்த பாரிய குண்டுத்தாக்குதல், அழிவு, ஆயிரக்கணக்கில் இறந்தவர்கள் பற்றியும்... மேற்கொண்டு என்ன நடக்குமோ.... ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா தொடங்கப்போகும் போர் எந்தளவிற் போய் முடியுமோ.... என்ற உலகளாவிய பயம் பற்றியும் கதைத்துக்கொண்டிருந்துவிட்டு, பரதன் எழுந்து அவசரவேலை இருப்பதாகப் புறப்பட்டுவிட்டான்.

"எப்பிடிப் படிப்புகள்...?" ராகினியைப் பார்த்து யசோ கேட்டாள்.

"ஓகே... யூனிவெசிற்றியிலிருந்து பதிலை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறன்." சொன்னாள் ராகினி.

"லண்டன் போறதுக்குக் கேட்டனீங்கள்... ஒரு சனி, ஞாயிறோடை இரண்டு நாள் லீவு போட்டிட்டுப் போட்டுவரலாம். எப்ப எண்டு சொல்லும்!" கோகுலன் அவளுக்குக் கூறினான்.

"இப்ப வேண்டாம்.... பள்ளிக்கூடலீவு... ஒக்ரோபருக்குப் பார்ப்பம். இல்லாட்டி பிறகு ஒரு நாளைக்குப் போகலாம்... அவசரமில்லை." என்றாள் ராகினி.

"முரளியோடை கதைச்சனீரா?"

"மாறிமாறிக் கதை நடக்கும்...." நீலா முந்திக்கொண்டு பதில் சொன்னாள்.

"நீங்கள்தானே சொன்னனீங்கள், முரளியோடை தாராளமாகக் கதை எண்டு...! இல்லையோ...?" தாயைப் பார்த்தாள் கண்களில் செல்லம் ஒளிவிட.

"நான் நல்லா உங்களைக் கவலைப்படுத்திப் போட்டன்.... ஒரு கூடாத பிள்ளைமாதிரி.... சிக்... கூடாத பிள்ளையாகவே நடந்திட்டன்." என்று தகப்பன் தாமோதரன் நெஞ்சில் சாய்ந்து, "இல்லையா அப்பா....?" என்று அவர் நாடியைத் தடவினாள்.

"அந்தக்கதை வேண்டாம்... விட்டிட்டு வேறை ஏதாவது கதை!"

"நான் விட்டது பிழைதானே... என்னை மாதிரி மற்றப்பிள்ளையளும் பிழைவிடக்கூடாதெண்டு சொல்லுறன். நீங்கள் தந்த சுதந்திரத்தை நான் தவறான பாதையிலை போகவிட்டு, உங்களைக் கஸ்டப்படுத்திப்போட்டன்... என்னை மன்னியுங்கோ பிற்ற அப்பா!"

"சரியடி... இப்ப ஆர் கேட்டது? உன்னிலையாரும் கோபிக்க இல்லை. அதுதானே ரெலிபோன் கதை... லண்டன் போய் முரளியைப் பார்த்துப்பேசிப்போட்டு வாறதெண்டால் போட்டுவா... எண்டெல்லாம் சொல்லியிருக்கிறம், பிறகேன் திரும்ப....!"

"கோகுலன் அங்கிளுக்கும் யசோ அன்ரிக்கும் இது தெரியும்தானே அதுதான் சொல்லவேணும் போலை இருந்தது... சொன்னனான்."

அப்போ யசோ சொன்னாள்,

"உலகம் ரொம்ப மாறிப்போச்சு... நாங்கள் சிறுவர்களாக வளர்ந்த அந்தக்காலத்திலை இருந்த ஒழுங்கு, அமைதி, பழக்க வழக்கங்கள் இன்று குழம்பிவிட்டன. மணிக்கூடு மாதிரி மனுசன் 'டக்டக்' என்று அவசரமாக வாழும் சூழ்நிலை. இயந்திரங்கள் போல மனிதநேயமற்ற இரும்பு வாழ்க்கை வாழும் காலமாய், சொத்தியும் நேரும் தலைகீழும் தலைமேலும் என்று வாழ்க்கை பலதரப்பட்டதாய் ஒடிக்கொண்டிருக்கு!

மற்றவர்கள் செய்கிறார்கள்..... மற்றவர்கள் ஆடுகிறார்கள் என்று மற்றவர்களைப் பார்த்து எல்லாம் செய்யாமல், யோசித்து நிதானமாய், நல்ல மனிதருக்குரிய பண்புகளுடன் ஒழுங்காக வாழ வேண்டும்.

'நான் செத்துப்போகும் போது, என் சரித்திரம் இப்பூமியில் நிலைத்து நிற்கும்படி ஏதோ ஒன்றைப் படைத்துவிட்டு மடிவேன்!' என்ற உறுதியோடு வாழ்நாட்கள் ஒவ்வொன்றையும் கவனமாகக் கடக்க வேண்டும்.

சோம்பேறியாய், ஊதாரியாய், அறிவிலியாய், அநியாயக்காரனாய் இல்லாமல், வீட்டுக்கும் நாட்டுக்கும் தமிழுக்கும் தமிழ்மண்ணு க்கும் என்று உற்சாகமாய் அறிவொளி பெற்று, நியாயத்தோடு கூடிய உழைப்புடன் வீறுநடை போட வேண்டும்.

வெளிநாட்டில் வாழும் வசதி படைத்த, செல்லவக் குழந்தை களுக்கு நீ முன்மாதிரியாக நடந்து காட்டு!

பெற்றவர்களுக்குப் பணிந்து நடக்க, பெரியவர்களுக்கு அடங்கி நடக்க, விளையாட்டே வாழ்க்கையாகாமல், குடும்பக்கஸ்டம் தெரிந்து நடந்து, தாய்மொழியைக் கற்று, பிறந்தமண்ணின் பெருமையைத் தெரிந்து, உறவுகளை உள்ளத்தில் நினைத்து நீ வாழக் கங்கணம் கட்டு! உலகில் உன் பெயர் நிலைக்கும்!" என்றாள் யசோ.

"அன்ரி!" என்ற ராகினியின் உள்ளத்தில் யசோ சொன்ன வாக்கியங்கள் கல்மீது பொழிந்த சிற்பம் போல உறுதியாய்ப் பதிந்தன.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற குறிக்கோளுடன் வாழ அவள் உறுதிபூண்டாள்.

எமது வாழ்க்கையில் அந்நியநாட்டுக்கலாச்சாரங்களினாலும் பண வசதியாலும் அளவுக்கு மீறிய சுதந்திரத்தினாலும் தீயவிளைவுகள் வந்து நிம்மதியைக் கெடுக்காமலிருக்க வேண்டுமானால் நிதானமாகச் சிந்தித்து, அன்புக்கு முதலிடம் கொடுத்து, ஒழுங்காயும் ஒழுக்கமாயும் பெரியோருக்குப் பணிந்து, தமிழ்க் கலாச்சாரங்களுக்குக் கட்டுப்பட்டு, தெய்வ நம்பிக்கையை வளர்த்து வாழும்போது இடர்களுக்கு இடமேற்படாது.

பணம் மட்டும் வாழ்க்கையாகாது... வாழ்க்கை என்பது எங்கள் மனதுக்குள்ளேயே உள்ளது. அதை உணர்ந்து வாழ்க்கையை இன்பமயமாக்க முயற்சிப்பதுடன், தமிழன்னை விடுதலை பெற, தமிழீழம் விடிய, சமாதானம் ஏற்பட்டு எங்கும் மனித ஒற்றுமை நிலவ இறைவனை வேண்டுவோமாக.

சுபம்

# *Sun Telecom*

ஜேர்மனியில் பல்லாயிரக்கணக்கான வாடிக்கை--யாளர்களினால் பாவிக்கப்படும் ஒரேயொரு தொலைபேசி அட்டை *Sun Telecom* அட்டையே!

- துரிதசேவை
- தெளிவான ஒலிநயம்
- *நேரடி இணைப்பு*

அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணத்தில் கதைப்பதற்கு இன்றே சன் தொலைபேசி அட்டை எனக் கேட்டு வாங்குங்கள்!

வியாபாரிகளுக்கும் மொத்தக்கொள்வனவு செய்பவர்-களுக்கும் மிகக்கூடிய கழிவு விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**Sun Telecom**

*Cäcilien Str.40*

*74072 Heilbronn*

*Tel. 07131-591616*

*07131-963464*

*01726300992*

நம்மவர்களின் ஆக்கங்களை ஊக்குவிப்போம்!

# ஆச்சி துணை

**1979 ம் ஆண்டிலிருந்து ஆதரவு நல்கி வரும் அனைவருக்கும் எங்கள் நன்றிகள்.**

பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களினால் 'மலிவுகடை' என அழைக்கப்படும் ஒரேயொரு ஸ்தாபனம் **ஆச்சிதுணை** மட்டுமே!

உணவுப்பொருட்கள், கடலுணவுப்பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள், அலங்கார அன்பளிப்புப்பொருட்கள், கடல் உணவுப்பொருட்கள், தொலைபேசி அட்டைகள், 22 கரட் தங்கநகைகள், பல்லாயிரக்கணக்கான அனைத்து வகை ஜவுளிகளுக்கும் **ஆச்சிதுணையே!**

மணவறை, மணிமாலை, மாலைகள், குருக்கள் ஒழுங்கு சாப்பாடு, திருமண, பூப்புனித அழைப்பிதழ்கள் அனைத்துக்கும் **ஆச்சிதுணையே!**

**கொள்முதலுக்கேற்ப அன்பளிப்புகள் வழங்கும் ஒரேயொரு ஸ்தாபனம் ஆச்சிதுணையே!!!**

அனலைதீவு
ஜவுளி ஐ.நடராசா

Salinen str. 1/1
74177 Bad Friedrichshall
Tel: 01736-3921

# Orientalische Textilien & Schmuck

## ஜேர்மனியில் தமிழர் நகைக்கடை

தரமான தங்க வைர நகைகளை (916/22K உத்தரவாதத்துடன்) தாராள தேர்வில் சிங்கப்பூர் விலையில் விற்கும் ஒரே ஸ்தாபனம். உயர்தர பட்டுக்கூறை, பட்டுப்புடவை, பட்டுவேட்டி, பஞ்சாபி, காகிறாச்சோளி மற்றும் சிறுவர், நங்கையர், ஆடவருக்கான றெடிமெற் ஆடைகளின் தேர்வுக்கும், வீணை, மிருதங்கம், சுருதிப்பெட்டிமுதலிய இசைக்கருவிகளுக்கும் ....

கனம்மிக்க, தரம்மிக்க எவர்சில்வர் வீட்டுப்பாத்திரங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும்........



நவீன வர்ணங்களில் அழகிய அலங்கார, ஆபரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள், பரதநாட்டிய உடைகள் ஆகியவற்றின் தேர்வுக்கும்...............



மாதந்தோறும் 1ம் திகதியிலிருந்து 5ம் திகதி வரை அனைத்து ஜவுளிகளும் 15% முதல் 25% வரை மிகமலிவு விலையில் பெற்றுக் கொள்வதற்கும் ........

ஒப்பற்ற ஒரே ஸ்தாபனம்

**Orientalische Textilien & Schmuck**

Königswall-16 (Am HBF)
44137 Dortmund.
Tel.: 0231/162377
Fax.: 0231/147836

தரம்! உத்தரவாதம்!! மலிவோ மலிவு!!

உரிமையாளர்:- ச. ஜேகதீஸ்

அச்சுப்பதிப்பு:- ராஜ் பதிப்பகம்
Romberg Str.10,59439 Holzwickede.
Tel.: 02301/14581 Fax.: 02301/14686